ஊழியன்

தேசீய சித்திர வாரப்பத்திரிகை

31—8—34.



மெல்போர்ன் நகரத்தில் நடக்கப்போகும் நூற்றூண்டு விழாவிற்குத் தயாராகும் வாண வேடிக்கைகள். —N.I.A.

ஊழியன்

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

Kmm0412.

மலர் ௧௪. சென்னை, பவ௵ ஆவணி௴ 15௳ வெள்ளி (31-8-1934) இதழ் ௯.

இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா
தனமேறி ஈடிலாது
சொந்தவா சேபுரியத் துயர்போக்கி
யாவருமே சுகவாழ் வெய்த
இந்தநிலம் வந்தவருள் இலைபிறப்பில்
இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான் கொண்டேன்
நல்லனவெந் நாளும் வாழ்க!

மீண்டும் சிறையா?

இந்தியாவை ஆளும் அரசினர் செயல் ஒரு விநோதமாகவே இருக்கிறது. பண்டித ஜவகர்லால் மீண்டும் சிறைப்படுத்தப் பெற்றார். அரசாங்கத்தின் இச்செயலைச் சிறு பிள்ளைகள் விளையாட்டுச் செயலுக்கே ஒப்பிட முடியும். பண்டிதர் மனையாள் உடல்நோய் காரணமாகத் தண்டனைக் காலம் முடியுமுன் அவர் விடுவிக்கப்பட்டார். அரசாங்கத்தின் அச்செயல் பாராட்டுதற்குரியது என்பதில் ஐயமில்லை. அந்த விடுதலையை நிரந்தரமாக்குதலன்றோ அரசாங்கத்துக்குப் பெருமை. சில நாட்களில் திரும்பவும் பிடிப்பதால் என்ன பயன்?

பண்டிதர் தமது காதலியைக் கண்டுவர வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளவில்லை. அரசாங்கம் தானாகவே, பிணி வாய்ப்பட்டுப் படுக்கையிற் கிடக்கும் வாழ்க்கைத் துணைவியின் நிலைமையை எண்ணித் திடீரென நமது ஜவகரை விடுவித்தது. காலமறிந்து விடுதலை நல்கியது அறிவுடைச் செயல்தான். அந்த மதிப்பைக் கொஞ்சம் நீடித்து வைத்துக்கொள்ள அறியாது அரசாங்கம் இழந்துவிட்டது. "திங்கள் ஒருபொழுது, செவ்வாய் பகல் வரையில்" விடுதலை எற்றுக்கு?

தங்களுடைய பேராற்றல் வாய்ந்த ஆளுகைக்குள் இருக்கும் எவரையும் எந்த நேரம் வேண்டுமானாலும் பிடிக்கவும், விடுக்கவும் தங்கட்கு அதிகாரம் உண்டு என்பதை அரசாங்கத்தார் காட்டும் சந்தர்ப்பங்களுள் இந்த ஜவகர் விடுப்பு — பிடிப்பு நிகழ்ச்சியும் ஒன்று என்று கூறுவதைத் தவிர வேறில்லை. "வைத்தால் குடுமி; சிரைத்தால் மொட்டை." என்று ஒரு பழமொழி தமிழ் நாட்டில் உண்டு. இந்த நிகழ்ச்சி அதற்கு முற்றும் பொருந்தும்.

அரசாங்கம் கொஞ்சமும் பொறுப்பை யுணரவில்லை யென்பதற்கும் பொதுஜன மனப்பான்மையைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை யென்பதற்கும் உற்ற பல நிகழ்ச்சிகளுள் இது ஒரு முக்கியமானது. சட்ட மறுப்பு இப்பொழுது நடைபெறவில்லை யென்பதை அரசாங்கம் அறிந்தே இருக்கும் என்று நம்புவதில் பிழையில்லையல்லவா? சட்டமறுப்புக் காரணமாகச் சிறைப்பட்ட கைதிகளும் பெரும்பாலும் சிறை வாழ்வுப் பாக்கியத்தை முடித்துக் கொண்டு வெளிவந்து விட்டார். இந்த நிலைமையில் இன்னும் சிலரைமட்டும் ஏன் சிறைக்குள் வைத்துக்கொண்டிருத்தல் வேண்டும்? தவிர, ஜவகரைக் கண்டால் சர்வ வல்லமையுள்ள அரசாங்கம் ஏன் இவ்வளவு நடுங்கவேண்டும்? ஜவகர் விடுதலைக் கேள்வி வந்தபோது அவர் சட்டமறுப்புக் கைதியல்லவென்று நமது மந்திரியார் முழக்கிவிட்டார் லண்டனிலே.

போகட்டும். இப்பொழுது ஏதோ கொஞ்சம் ஞானோதயமாகி ஒரு சந்தர்ப்பத்தையொட்டி விடுதலை செய்தார்களே; அதிலாவது நிலைத்த சிறு புகழையாவது அடைந்தனரா? எதன் பொருட்டு விடுதலை செய்தனரோ; அதாவது நிறைவேறியதா? காதலி நோய் விடுதலைக்குக் காரணம். இப்போது அந்த அம்மையார் குணப்பட்டு விட்டனரா? அவர் இன்னும் படுத்த படுக்கையிலேயே இருக்கிறார். நோய்ப்பட்ட கமலா, கணவனார் விடுதலையில் களிப்படைந்திருப்பார் என்பது உண்மை. அந்நோய் தீராமுன் திரும்ப உடனே ஆருயிர்க் காதலர் பிரிக்கப்பட்டார் என்றால், அந்தச் சகோதரியார் மனம் என்னபாடு பட்டிருக்கும்? 'கண்ணிலான்

பெற்று இழந்த' கதையேயன்றோ இது. இதைவிட இந்த விளையாட்டு விடுதலையே இல்லாதிருப்பது நலமன்றோ? இதனை உணரும் கண் அரசாங்கத்துக்கு இல்லாது போய்விட்டது. விரித்துப் பயன் என்? தேசபக்தி ஒன்றே காரணமாக ஜவகர்ப் பெரியார், உடல் இரண்டே தவிர, உயிர் ஒன்றெனக் கருதக்கூடிய தமது காதலி கமலாவோடு நலிவுக் காலத்தில் உடனிருக்கும் பேற்றைப் பறி கொடுத்தார். ஆம்! அடிமை நாடு!! அன்னியர் ஆட்சி!!!

இடி முழக்கம்

வரட்டுமே?

கன்னி மேயோ இந்தியாவிற்கு மறுபடியும் வரப்போவதாக ஒரு வதந்தி. இதைப்பற்றி டெல்லி சட்டசபையில் ஒரு கேள்வி. அதைப்பற்றி ஒரு வழவழாப் பதில். கேள்வி என்ன வேண்டியிருக்கிறது. கன்னி மேயோவின் சரக்கு குப்பைத் தொட்டிக்கு உபயோகப்படும்; பொழுது போக்க வழியில்லாத சில அன்னிய நாட்டு மூதன்னைக்களுக்கு உபயோகப்படும்; சில அரசியல் சூழ்ச்சிக்காரர்களுக்கு உபயோகப்படும். நேர்மையானவர்கள் யார் அவளுடைய வார்த்தைக்கு மதிப்பு வைக்கிறார்கள். இந்தியாவிற்கு வந்ததினால் கொஞ்சம் தனது பெயர் அடிபடும் என்ற நினைப்பு இருந்தால் அதை விட்டுவிடட்டும். இந்தியாவைப் பற்றி அவள் எழுதும் புத்தகங்களை அவள் தான் விலைகொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும். அவள் வருவதினால் குடி முழுகிப்போகாது.

பண்டிதருக்குப் பரலோகத்திலிருந்து உதவி

பண்டித மாளவியாவின் கட்சிக்கு நேர்மையான தேசிய உணர்ச்சியுள்ளவர்களின் உதவி இருக்காதென்று தெரிகிறதோ என்னவோ, காலஞ்சென்ற திரு. லாலா லஜபதிராய் சூக்ஷ்ம உலகிலிருந்து அவருக்குத் துணைசெய்ய வேண்டியிருக்கிறது. இந்த வேடிக்கையான பரலோக உதவியிருந்தாலொழியப் பண்டிதருடைய கொள்கைகளுக்குத் தேசத்தின் உதவியிருக்காது போலிருக்கிறது. நெருக்கடியான சமயங்களில் கட்சிப் பிளவுகளை உண்டு பண்ணுகிறவர்களுக்குக் காலஞ்சென்ற தேசபக்தர்களின் துணையோ, அல்லது அந்தக் காசி விஸ்வநாதரின் துணையோ இல்லாவிட்டால் காரியத்தைச் சாதிக்க முடியாது போலும். நெற்றிக் கண்ணைத் திறக்கும் சிவபிரானுடைய உதவியைச் சேர்த்துக்கொண்டு வந்தாலும் குற்றம் குற்றந்தான். இம்மாதிரியான பத்திரிகை யதிர் வேட்டுகள் விடுவது காலஞ்சென்ற தேசபக்தர்களின் பெயரைச் சந்தியில் இழுப்பதுதான். பண்டித மாளவியா தனது தெய்விகத் துணையை அப்படி மதிப்பாரா?

எல்லைப்புறக் காந்தியின் விடுதலை

எல்லைப்புறக் காந்தி என்ற பெயருடன் திகழும் அப்துல் கபூர் கானையும் அவருடைய சகோதரரையும் ஹஜரிபாக் ஜெயிலிலிருந்து விடுதலை செய்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அவரை டிஸம்பர் 1931 ல் விசாரணை இல்லாமல் கைது செய்திருந்தார்கள். இப்பொழுது அவரை விடுதலை செய்திருப்பதில் கவர்மெண்டிற்கு அதிக மதிப்பு ஏற்பட்டு விட்டதா? இரண்டரை வருஷங்கள் விசாரணையில்லாமலும் சிறை வசதிகள் இல்லாமலும் செய்து கடைசியாக எல்லைப்புற மாகாணங்களுக்கும் பஞ்சாப் மாகாணத்திற்கும் போகக்கூடாதென்ற தடை யுத்தரவுடன் விடுதலை செய்திருப்பது அரசாங்கத்தின் கோழைத்தனத்தைத்தான் காண்பிக்கிறது. ஒரு மனிதனைத் தன் சொந்த வீட்டிற்கு, தன் சொந்தத் தேசத்திற்குப் போகக்கூடாதென்று சொல்லுவது அவனைச் சிறையில் வைத்திருப்பது போல்தான். அவரை மறுபடியும் சிறையிலடைத்த கோழைத்தனந்தான் கபூர்கானை இம்மாதிரி தடை யுத்தரவுகளுடன் விடுதலை செய்வதற்குக் காரணமாக இருக்கிறது. "சட்டத்திற்குக் கண் இல்லை, நியாயத்திற்கு ஹிருதயமில்லை" என்பது ஆங்கிலப் பழமொழி. இது இரண்டுமில்லாததுதான் இந்திய அரசாங்கமா?

ஆலயப் பிரவேச மசோதா

திரு. ரங்கய்யரை நாம் அறிவோம். சட்டசபையிலே வீர முழக்கம் செய்துகொண்டு, இருப்பதற்கு ஒரு தனிக் கோழைத்தனம் வேண்டும். ஸ்ரீயுத ராஜாஜி தீண்டாதார் உரிமைக்குத் துரோகம் செய்து விட்டாராம். சட்ட சபைக்குள்ளிலிருந்து நாக்கில் நரம்பில்லாமல் என்ன வேண்டுமானாலும் பேதலாம் போலிருக்கிறது. இதற்கு மேல் 'காங்கிரசுக்குத் தீண்டாமை சம்பந்தமாக ஒன்றும் செய்ய முடியாது போகவே கை விட்டு விட்டார்கள்' என்ற கூற்று. திரு. ரங்கய்யருக்கு இருக்க வேண்டிய இடம் சட்ட சபையல்ல, அது வேறு இடம். சட்ட சபையில் ஆலயப்பிரவேச மசோதா நிறைவேறி விட்டால் ஹரிஜன ஹிந்துக்களுக்கு மோக்ஷ சாம்ராஜ்யம் இந்தப் பூலோகத்திலே கிடைத்து விடும் என்று கனவு காண்பவர்களுக்குச் சாரதாச் சட்டம் அரசாங்கப் புத்தங்களில் கும்பகர்ண உபாசனை செய்வது ஞாபகம் இருக்க வேண்டும். எவனோ ஒரு மேல்நாட்டுக் கவிஞன், காதலர், கவிஞர்கள், இன்னும் ஒரு வகுப்பு, அவை எல்லாவற்றினுடைய புத்தியும் ஒன்றுதான் என்று எழுதி வைத்து விட்டுப் போனான். அந்தக் கோஷ்டியில் திரு. ரங்கய்யர் போன்ற அரசியல் வாதிகளுக்குத் தனித் தொகுதி கொடுக்க வேண்டியதுதான்.

அன்பர்களே!

இந்தியச் சட்டசபைத் தேர்தல் சமீபித்துவிட்டது. நீங்கள் யாருக்கு வோட்டுப் போடப்போகிறீர்கள்?

"சந்தேகமென்ன! **காங்கிரஸ்காரருக்கே**"

என்று சொல்லுங்கள்.

ஆடாமோ ஊசல்

ராய. சோ.

ஆங்கிரச ஆவணி 16௨ வேலூர்ச் சிறையில் பாடப்பெற்றது.

சிலப்பதிகாரத்துள்ள வாழ்த்துக் காதை ஊசல் வரியைப் பின் பற்றியது.

(உரிமை ஆக்கியோனுடையது)

தேர்ந்த அறந்தாங்கு செய்ய தமிழ்ப்பாவால் ;
சாந்த குணம்படைத்தோன் சபர்மதிவாழ் எம்மான் !
வேந்தர் விறற்படையும் வெறுங்கை கொடுவீழ்த்தும்
காந்தி கழல்பாடி ஆடாமோ ஊசல் !
கருணைக் கழல்பாடி ஆடாமோ ஊசல் ! (க)

பாகு பொருவுநறும் பசிய தமிழ்ப்பாவால் ;
மாகந் தனைப்போர்த்த மாண்குணத்துக் காந்தி !
போகந் துறந்தபெரும் புனிதன்! புகழாளன் !
ஏகன் எழில்பாடி ஆடாமோ ஊசல் !
எங்கோன் எழில்பாடி ஆடாமோ ஊசல் ! (உ)

கற்றைப் புகழ்சேர்ந்த கனிந்த தமிழ்ப்பாவால் ;
இற்றைப் படியைநனி ஈடேற்ற வந்த
செற்றந் தவிர்ந்ததிருச் சீராளன் காந்தி !
ஒற்றைக் கதர்பாடி ஆடாமோ ஊசல் !
ஒண்மைக் கதர்பாடி ஆடாமோ ஊசல் ! (ங)

கொள்ளை நலமார்ந்த கொஞ்சு தமிழ்ப்பாவால் ;
அள்ளி உயர்அறத்தை அவனி நனிவாழக்
கிள்ளைக் கனிமொழியில் கிளத்தும் அருங்காந்தி !
வள்ளல் வளம்பாடி ஆடாமோ ஊசல் !
மன்னன் வளம்பாடி ஆடாமோ ஊசல் ! (ச)

திரட்டி வடித்தசுவைச் சிறந்த தமிழ்ப்பாவால் ;
மருட்டு புலன்வென்ற மாகாந்தி ! மண்ணிற்
புரட்டும் உருட்டுமறப் புக்கொழிய ஆழி
உருட்டும் காம்பர்டி ஆடாமோ ஊசல் !
உதவுங் காம்பாடி ஆடாமோ ஊசல் ! (ரு)

அருமை அழகிளமை ஆனநலன் யாவும்
பெருகும் இனித்தசுவைப் பெரிய தமிழ்ப்பாவால் ;
உரிமை தனைப்பெறவே உழைக்கும் உயர்காந்திப்
பெரியோன் பெயர்பாடி ஆடாமோ ஊசல் !
பெம்மான் பெயர்பாடி ஆடாமோ ஊசல் ! (சு)

மருவு கொழுநரெழில் மழைக்கை வளைக்கையால்
ஒருவா வகைபிடித்தே ஒப்பில் தமிழ்ப்பாவால் ;
பொருவார் புவியிலிலாப் புனிதன் அருங்காந்தி
ஒருவன் திறம்பாடி ஆடாமோ ஊசல் !
உண்மைத் திறம்பாடி ஆடாமோ ஊசல் ! (எ)

சினவேல் விழியாடத் திகழ்முத்தம் சிந்தக்
கனிவாய் அமிழ்தொழுகக் கன்னித் தமிழ்ப்பாவால் ;
இனிய மொழிபகரும் எந்தைசீர் ஏய்ந்த
அணியார் அறம்பாடி ஆடாமோ ஊசல் ! (அ)
ஐயன் அறம்பாடி ஆடாமோ ஊசல் !

எம்மை உலகத்தும் ஈடில் தமிழ்ப்பாவால் ;
நம்மை உயர்த்துதற்கு நானிலத்தில் நண்ணினோன் !
அம்மை அரசுபெற அருளு பெருங்காந்தி !
செம்மைச் செயல்பாடி ஆடாமோ ஊசல் !
திண்மைச் செயல்பாடி ஆடாமோ ஊசல் ! (கூ)

ஆடாமோ ஊசல் ! அருமைசெறி தமிழ்ப்பாப்
பாடாமோ ! பாடிப் பரவாமோ ! பண்பிற்
கூடாமோ ! கூடிக் கூர்ஜரனைக் கூறி
ஆடாமோ !பாடி ஆடாமோ ஊசல் !
அந்தணன்சீர் பாடி ஆடாமோ ஊசல் ! (க௦)

பெண் வயிற்றில் புலிக்குட்டி!

இயற்கையின் வினோதப் பிறவிகள் அடிக்கடி நிகழுகின்றன. தூத்துக்குடிக் கருநாமையுள்ள ஒரு சிற்றூரில் ஒரு பெண் ஏககாலத்தில் மூன்று குழந்தைகள் பிரசவித்தாளாம். அதில் ஒன்றின் அங்க லட்சணங்கள் புலியைப்போல் இருந்தது மல்லாமல், அதன் குரலும் மனிதக் குழந்தையின் அழுகை மாதிரி யன்றி, வெருகுப் பூனை கத்துகிற மாதிரி இருந்ததாம். பிறந்த கொஞ்ச நேரத்தில் குழந்தை இறந்துவிட்டது. மற்ற இரண்டு குழந்தைகளும் தாயும் சுகமாக இருக்கிறார்கள்.

துரிதக் கலியாணமே!

கலிபோர்னியாவில் அவசரப்பட்டுக் கலியாணம் செய்துக் கொள்ளுவதினால் விவாக ரத்து அதிகமாகிற தென்று நினைத்து, கலியாண லைசென்சிற்கு மனுப் போடுவ வற்கும் லைஸன்ஸ் கொடுப்பதற்கும் இடையில் மூன்று நாள் தீர ஆலோசிப்பதற்கு இடம் கொடுப்பதற்காகக் கழிய வேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இம் மாதிரியான துரிதக் கலியாண மெல்லாம் குடிவெறியில் ஏற்படுகின்றனவாம். இந்தச் சட்டத்தினால் கலியாணமே குறைந்துவிட்டால் என்ன செய்வார்களோ?

ரயில்ச் சேதம்

வடக்குக் கொரியாவைச் சேர்ந்த ஜென்ஸன் என்ற இடத்தில் ரயில்ச் சேதம் ஏற்பட்டதினால் மூன்றுபேர் உயிர் துறந்தனர். 42 பெயர்களுக்குக் காயம். க்யோட்டகுஸென் என்ற நதியின் பாலத்திலிருந்து ரயில் வண்டிகள் விழுந்துவிட்டன. என்ஜின் மாத்திரம் விழவில்லை. இது புரட்சிக்காரருடைய அட்டூழியம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

விதவையின் கண்ணீரைத் துடை

செய்தித் திரட்டு

ஜெனரல் ஓ'டப்பிக்குத் தடையுத்திரவு

வடக்கு அயர்லாந்தின் அரசாங்கம் பிரீஸ்டேட் நீலச் சட்டைக்காரர்களின் தலைவரான ஓ'டப்பியை வரக்கூடாது என்று தடையுத்திரவு போட்டிருக்கிறார்கள். சமீபத்தில் ஓ'டப்பி வடக்கு அயர்லாந்தில் தனது கட்சியைப் பலப்படுத்தப் போவதாகச் சொல்லியிருந்ததே காரணம்.

மாஸ்கோவில் எச். ஜி. வெல்ஸ்.

பிரதம ஆங்கில நாவலாசிரியரும், சமூகப் பிரச்னை பற்றித் தெளிந்த அறிவோடு எழுதுபவருமான எச். ஜி. வெல்ஸ் இப்பொழுது மாஸ்கோவிற்குச் சென்றிருக்கிறார். 14 வருடங்களுக்கு முன் இவர் ரஷ்யாவில் லெனினைச் சந்தித்த பொழுது, ஸோவியத் அரசியலின் கீழ் ரஷ்யா எவ்வளவு வளர்ச்சியடைகிறதென்று பாரும் என்றாராம். வெல்ஸின் புத்தகங்கள் ரஷ்ய பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

காதலியைக் காண என்ஜினைத் திருடினான்!

ஸிஸாண்ட்ரோபிரோ என்ற வாலிபனுக்குக் கையில் ஒரு செம்பாலடித்த சல்லியும் இல்லை. மூஸாவிலிருந்து ஸாண்டியாகோ வெகுதூரம். அதனால் ரயில்வே என்ஜினைத் திருடினான்! வெகு வேகமாகப் பிரேமாவை அவன் காதலியிடம் சேர்ப்பிக்க ஓடியது. காதல் வழிதான் காடுமுரடா மென்பர். அவனுக்கு என்ஜினை நிறுத்தத் தெரியவில்லை அது போய் முட்டிக் கொண்டது. அவன் எதிர்பார்த்த காதலியின் கரங்களுக்குப் பதிலாக போலீஸார் கையில் சிக்கினான்.


தெற்குப் பீஹாரில் வெள்ளச் சேதம்

கங்கையில் எதிர்பாராத விதமாக வந்த அகோரமான வெள்ளத்தினால் அதிகச் சேதம் விளைந்திருக்கிறது. அதிகப்பட்டுக் கொண்டே வருவதால் புண்ணிய க்ஷேத்திரமாகிய காசி அதிக அபாயமான நிலைமையில் இருக்கிறது. வெள்ளத்தின் கொடுமையால் தெற்குப் பீஹாரில் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும் என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. பல கிராமங்கள் நாசமாயின. பயிர், கால்நடைச் சேதங்களும் அதிகம். பூகம்பத்தினால் ஏற்பட்ட பஞ்சத்தின் கொடுமையை இது இன்னும் அதிகமாக்கும் என்பதற்கு ஐயமில்லை.

பதற்கு முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரிகிறது. மேல் நாட்டு அரசாங்கங்களில் முக்கியமானது ஒன்று இந்தக் காரியத்தைச் செய்யத்துரிதப் படுத்துகிறது என்று தெரிகிறது. மேரி ராணியும் அதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறாள். ஆனால் இதற்கு முக்கிய முட்டுக் கட்டையாக இருக்கும் சிறிய என்டென்ட் ஒத்துக்கொள்ள வேண்டும்.

பெற்றோரை உயிருடன் புதைக்கும் பழக்கம்

குளிர்ந்த பிரதேசத்தில் வசிக்கும் எஸ்கிமோ ஜாதியாரின் சமூகத்தில் உபயோக மில்லாதவர்களுக்கு உயிர் வாழ இடமில்லை. தாய் தந்தையர்கள் வேலைசெய்ய முடியாதபடி மூப்புப் பருவம் அடைந்துவிட்டால் அவர்களுக்கு ஒரு சமாதிபோன்ற கட்டடம் ஒன்று கட்டி அதில் அவர்களை உயிருடன் புதைத்து விடுகிறார்கள். பெற்றோர்களும் இதற்குச் சம்மதிக்கிறார்கள். இது அந்த நாட்டுப் பழக்கம்.




கல்கத்தா மேயர் திரு. நளினிரஞ்சன் சர்க்கார் சென்னைக்கு விஜயம் செய்தபொழுது சென்ட்ரல் ஸ்டேஷனில் அவரை வரவேற்ற காட்சி. —P. P. B.

ஆர்ச்ட்யூக் அட்டோ ஆஸ்திரியாவின் அரசரா?

மாஜி அரசர் அல்பான்ஸோ தலைநகருக்கு வந்து அரசர் கரோலைச் சந்திக்கப் போவதாக ஒரு பலமான வதந்தி ருமானிய அரசியல் வாதிகளிடையே உலாவுகிறது. ஆர்ச்ட்யூக் அட்டோவை ஆஸ்திரியாவில் சிம்மாசனம் ஏற்றுவிப்

எல்லோரும் ஓர் குலம்!



இலக்கியப்பகுதி

தகையணங் குறுத்தல்

ராய. சொ.

வள்ளுவரைப் பற்றி எழுதிய அன்று அவர் செய்த நூலின் கடைசிப் பகுதியாகிய காமத்துப் பாலின் அருமையை விளக்கி யெழுதுவதாகக் கூறியிருந்தது அன்பர்கட்கு நினைவிருக்கலாம். வள்ளுவர் நூல் மொத்தம் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள். அதில் காமத்துப் பால் இருபத்தைந்து அதிகாரங்கள். காமத்துப்பாலை இருகூருகப் பிரித்திருக்கின்றார். முன்னையது களவியல்; பின்னையது கற்பியல். களவியல் ஏழு அதிகாரங்கள்; கற்பியல் பதினெட்டு அதிகாரங்கள். 'களவியல்' என்பது தாய் தந்தையர், உறவினர், மற்றையோர் ஆகிய எவர் துணையுமின்றி விரும்பிய ஒரு ஆணும் பெண்ணும் காதலித்துப் பொருந்துவதொன்று.

களவியல் ஏழு அதிகாரங்களும் தொடர்ந்து அடுக்கடுக்காக நயம்பட வைத்திருக்கின்றார் ஆசிரியர் வள்ளுவர். அவற்றின் பொருத்தம் மிகவும் சுவை பயப்பதாகும். அவ் வாராய்ச்சியைப் பிறகு பார்க்கலாம். அக் களவியலில் முதல் அதிகாரம் "தகையணங்குறுத்தல்" என்பது. 'தகையணங்குறுத்தல்' போன்ற சொற்றொடர்கள் விளங்கவில்லை யெனச் சிலர் நினைக்கலாம். இத் தகைய தொடர்களைப் பிரித்து எளிய நடையிற் காட்டினால் அநேகமாக எல்லோருக்கும் விளங்கும் என்றே கருதுகிறேன். திருக்குறள்போன்ற பழைய அரிய நூல்களின் மாண்பை எளிதில் அனைவர்க்கும் உணர்த்த வேண்டுமென்பதே சிறியேன் ஆசை. எனவே இயன்ற வரை எளிய நடையிலேயே எழுதுகின்றேன். முழுப்பயன் பெறுவேனா என்பதை நடைமுறையில்தான் தெரிதல் வேண்டும்.

தகை—அணங்கு—உறுத்தல் என்ற மூன்று சொற்கள் கொண்ட தொடர் அது. இதனை 'அணங்கு—தகை—உறுத்தல்' என்று மாற்றிக் கொண்டால் பொருள் விளங்கிக் கொள்வது கொஞ்சம் எளிதாகும். 'அணங்கு' என்றால் பெண், 'தகை' யென்பது அழகு முதலியன, 'உறுத்தல்' வருத்தத்தை உண்டாக்குதல், எனவே இச்சொற்றொடர் 'மங்கையின் அழகு முதலியன வருத்தத்தைச் செய்தல்'என்ற பொருள் தந்து நிற்கிறது. மேலும் இவ்வதிகாரப் பெயர் நிறைந்த பொருளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. 'பெண்ணின் அழகு யாருக்கு வருத்தந் தருகிறது? அப் பெண் யார்? அது ஏன் வருத்துகிறது?' என்ற வினாக்களெல்லாம் எழுகின்றன. இவற்றிற்குரிய விடைகள் முழுதும் அவ் அரிய சொற்றொடர்க்குள் தொக்கி நிற்கின்றன.

வள்ளுவனார் தமது காமத்துப்பாலை ஓர் நாடகம்போல் ஆக்கியிருக்கின்றார். தமது குறளின் மற்றைப் பகுதிகளைப் போலத் தாம் கூறுவதாக இக்காமத்துப் பால் இல்லை. இப்பகுதிப் பாக்களெல்லாம் பிறர் வாயிலாகப் பாடப்படுகின்றன. இவைகளே துறைப்பாக்கள் என்பன. களவியல் என்பது 'காதலர் சேர்க்கை.' காதலர் சேர்தற்கு முதலாவது நிகழ்ச்சி அவ்விருவரின் சந்திப்பே யல்லவா? சோலையிலே ஓர் பருவ மங்கை தனித்து நிற்கின்றாள்; ஆண்டு

ஓர் இளைஞன் அவ்வணங்கைக் காண்கின்றான்; அன்னாள் அழகு அவ் இளைஞனை வருத்துகின்றது. இதுதான் 'தகையணங் குறுத்தல்' என்பது. அம்மெல்லியலாளின் பேரெழிலால் தாக்கப்பட்ட வாலிபன் அம்மங்கை நல்லாளைப் பற்றி எண்ணமிடுகின்றான். அவன் உள்ளப் பெருக்கம் ஊற்றெடுத்தோடும் அழகே இவ்வதிகாரப் பாக்கள் பத்தும். பத்துப் பாக்களும் விலையிலா மணிகளே யென்பதில் ஐயமில்லை. எனினும் விரிவஞ்சிச் சுருக்கமாகக் காட்டுவேன்.

காமத்துப்பாலின் முதல் இயலாகிய களவியலில், முதலதிகாரமாகிய தகையணங் குறுத்தலில், முதற்பாட்டு மிகவும் கம்பீரமாக ஓடுகின்றது. நாடக மேடையில் அரங்கத்தே நின்றுகொண்டிருக்கும் அழகிய பெண்ணுருவைக் காதல்கொண்ட, தேர்ந்த ஆண் நடிகன் எவ்வாறு பரபரப்போடு அலங்கரிப்பான் என்பதை இப்பாட்டுச் சித்திரம் தெள்ளிதிற் காட்டுகின்றது. தேன் விரிக்கும் பூஞ்சோலை நடுவே நிற்கும் மயிலனைய மங்கையின் கட்டழகால் சொக்கிய தலைவன், "அணங்கு கொல்! ஆய்மயில் கொல்லோ! கனங்குழை, மாதர் கொல்! மாலும்! என் நெஞ்சு" என்று மருள்கின்றான். கனங்குழை—கனத்த காதணியை உடைய இப்பெண், (காதில் கனமான ஆபரணத்தை அணிதல் பெண்கட்கு அழகும் சிறப்பும் எனப் பண்டைக்காலத்தில் கருதப்பட்டதாகத் தெரிகிறது; அது பற்றியே வள்ளுவனார் கனங்குழை என இயம்புகின்றார். இன்றும் பெரிதும் திருநெல்வேலி ஜில்லாப் பழய தமிழ்மக்கள் நமக்குக் கனங்குழையை நினைப்பூட்டுகின்றனரன்றோ) அணங்கு கொல்! தெய்வப் பெண்ணோ? அன்றி, ஆய்மயில் கொல்! ஆராய்ந்தெடுக்கப்பெற்ற மயிலோ? அல்லது, மாதர்கொல்! ஒரு மானுடப் பெண்தானோ? என் நெஞ்சு—என் மனமானது, மாலும்—மயங்கி நிற்கின்றதே; என்று கூறி அவள் வயத்தே கண்ணைப் பறிகொடுத்து விட்டான் ஆடவன்.

பிறகு நடந்ததென்ன! இவனது பார்வையை இடைமறித்து ஒரு வெட்டு வெட்டிவிட்டது, கொல் படையாகிய அம்மாதரார் மருண்ட விழிகள். உடனே எண்ணமிடுகின்றான் இளைஞன். என்ன வியப்பு இது! "நோக்கினாள், நோக்கு எதிர்நோக்குதல்; தாக்கணங்கு, தானைக்கொண் டன்னதுடைத்து." நோக்கினாள்—அழகினையுடையாளாகிய இவள், நோக்கு—எனது பார்வைக்கு, எதிர்நோக்குதல்—எதிராகத் தனது விழிகளைச் செலுத்துதல், தாக்கு அணங்கு—இயல்பாகவே தாக்கி வருத்தும் ஓர் தெய்வப் பெண், தானை—கொண்டு—அன்னது—உடைத்து—மேலும் தாக்குதற்குப் படையையும் கொண்டு வருவதுபோல இருக்கிறதே; என்று கண் ஆகிய படையினால்தான் உடைந்த வகையை உரைக்கின்றான். ஆம்! முன்னரே அப்பாவையின் அழகு கண்டு வருந்திக் கண்ணைப் பிற பொருளில் செல்லவிடாது, கருத்தழிந்த அவனுக்கு அவள் கொல்படையான கண்யிருக்கின்றனவே; என்ன கொடுமையிது! என நினைக்கின்றான். உடனே தன்மீது செலுத்தப்பட்ட கண்ணைப் பற்றி ஒரு ஐயப்பாடு நிகழ்கின்றது அவனுக்கு.

"கூற்றமோ! கண்ணோ! பிணையோ! மடவரல், நோக்கம் இம்மூன்றும் உடைத்து!" இப்பெண்ணினது கண், எமனா! அல்லது கண்தானா? அன்றிப் பெண்மானா? மூன்று மாதிரியாகவும் எனக்குத் தோற்றுகிறதே; என்னை அது கொல்வதைக்கொண்டு கூற்றம் என்று நினைக்கவேண்டியதிருக்கிறது; என்மீது வீழ்வதைப் பார்த்தால் கண்ணென்று சொல்லலாம்போலிருக்கிறது;



கம்பை தனவைசியர் கல்விக்கழக ஐந்தாம் ஆண்டு விழாவில், "மார்க்கண்டேயர்" நாடகத்தை நடித்த மாணவர்கள்.

ணோறு பொறுப்பதெப்படி! ஆகவே அக்கண்ணோறு கொல்லுங் கூற்றுக்குச் சமம் என நினைக்கின்றான் வள்ளுவரின் வாலிபன். "பண்டறியேன், கூற்றென் பதனை இனியறிந்தேன், பெண் தகையாப் பேரமர்க்கட்டு" கூற்று—என்பதனை—பண்டு—அறியேன்—எமன் என்று சொல்லக் கூடிய ஒன்றை முன்னே நான் நேராக அறியேன்; இனியறிந்தேன்—இப்பொழுதுதான் அதனைக் கண்முன் கண்டேன்; அக்கூற்றுப் பெண் தகைமையோடு கூடிய பெரிய கண்களையுடைய ஒன்று; என உரைத்து நின்றான். கண்டவர்கள் உயிரைக் குடிக்கக் கூடிய தோற்றத்தோடுகூட இவ்வணங்குக்குக் கண்கள் பொருந்தி மருண்டு மருண்டு விழிப்பதைக் கொண்டு மான் என்றும் வழுத்தலாம் எனத் தோற்றுகிறது எனக் கற்பனை செய்த தலைமகன், நல்ல வேளை; இந்த வளைந்த புருவம் மேலே யிருந்து கொண்டு இவள் கண்கள் என்னைக் கொன்று விடாமல் காக்கின்றது; அது தவிர, மதயானை உலகை அழித்துவிடாமல் காக்க அதற்கு முகபடாம் இட்டது போல என் உயிரை அடியோடு வாங்கிவிடாமல் காக்கவே இவள் தனம் துகில் தாங்கியது போலும் என்று இயம்பிவிட்டு, அந்தோ! இம்மாதரார் வயப்பட்டு என் வலிபோய் விட்டதே எனக் கூறுகின்றான்.

(அடுத்த பக்கம் பார்க்க)

"ஒன்னுதற் கோஒ உடைந்ததே! ஞாட்பினுள், நண்ணாரும் உட்கும் என் பீடு" இவள் அழகிய நெற்றிக்குத் தோற்று விட்டது; போர்க்களத்தே பகைவரும் அஞ்சும் என் பெருமை எனக் கவல்கின்றான். இருக்கட்டும்; இயற்கை எழில் மிக்க இவட்கு என் பயனின்றி இவ்வளவு நகைகளை இட்டிருக்கின்றனர் என் அவள் தூக்கிய சுமையைத் தான் சுமப்பதுபோல் பெரிதும் வருந்துகின்றான். கடைசியாக அடக்க முடியாத ஆசையுணர்ச்சியை உள்ளூர அழகிய உருவகத்தால் வெளியிடுகின்றான் வள்ளுவர் தந்த நமது காதல் இளைஞன் தகையணங் குறுத்தல் அதிகாரப் பத்தாவது பாட்டில்.

"உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல், கண்டார் மகிழ்செய் தல் இன்று."

அடுநறா—காய்ச்சப்பட்ட மதுவானது, உண்டார்கண் அல்லது—உண்டவர்களிடத்து அல்லாமல், காமம்போல்—காமத்தைப்போல, கண்டார் — மகிழ் செய்தல் — இன்று — கண்டவர்கட்கு மகிழ்ச்சியை யூட்டக்கூடியதன்று. மது உண்டவர்கட்கே இன்பந்தரும்; மதுவைக் கண்டவர் இன்பம் எய்த முடியாது; காமம் அப்படியல்ல; அது காட்சியினளவாலேயே இன்பம் நல்குவது என அப்பெண்மீது முழுக்காதல் கொண்டு மயங்கி நிற்கின்றான் இளைஞன். காதல் காமம் என்ற இரண்டு சொற்களும் ஒரே பொருளில் கையாளப் பெற்றிருக்கின்றன பண்டை ஆசிரியர்களால். எனவே ஆசிரியர் வள்ளுவர் நூலில் வரும் காமம் என்ற சொல் தாழ்ந்த பொருளிலேயே வருவதாகக் கொள்ளுமாறில்லை. எனவே, காமுற்ற—அல்லது காதல்கொண்ட தலைவன், காதற்குரிய பெண்ணின் வயப்பட்டு நின்ற நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் அதிகாரம் "தகையணங் குறுத்தல்" என்பது.

மாண்டவன் மீண்ட மாயம்

ஆர்தர்கூக் என்பவருக்கு 62 தடவை வைத்தியர்கள் ஆப்பரேஷன் செய்திருக்கிறார்கள். ஒரு ஆப்பரேஷன் சமயத்தில் ஹிருதயம் சில விநாடிகள் நின்றுவிட்டது. டாக்டர்கள் தடவிக் கொடுத்ததால் பிழைத்துக் கொண்டார்.

நன்கொடை

ஆ. முத்துப்பட்டணம் ஸ்ரீமான் பெ. மு. சுப்பய்யா செட்டியார் அவர்களின் புதல்வனின் புதுமையை முன்னிட்டு நம் "ஊழியன்" பத்திரிகைக்கு நன்கொடையாக ரூபாய் 5/- அனுப்பியிருக்கிறார்கள். அவர்கட்கு நன்றியுரியதாக.

காரியஸ்தர்
ஊழியன்.

ஹரிஜனப் பள்ளி

ஆத்தங்குடி முத்துப்பட்டணம் திரு. பெ. மு. சுப்பய்யா செட்டியாரவர்களின் செல்வப் புத்திரனின், நாளது ஆவணித் திங்கள் 4-ம் நாள் நடந்த புதுமை வைபவத்திரு நாளை முன்னிட்டுத் தமது இல்லத்தில்ஷெயூர் ஹரிஜனப் பள்ளிக் கூட ஆதி இந்துப் பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடப்பட்டது. சாப்பாடு முடிந்தவுடன் அங்கு குழுமியிருந்த பல அன்பர்களின் முன்னிலையில் ஷெ மாணவ மாணவிகளால் பாரதியார் பாட்டுக்கள் பல வெகு இனிமையாகவும் தெளிவாகவும் பாடப்பட்டன.

அப்பால் செட்டியார் அவர்கள் பிள்ளைகளுக்கு உடுத்திக் கொள்ளக் கதர்த் துண்டுகளும் பெண் குழந்தைகளுக்குச் சேலைகளும் இனிது வழங்கிப் பிள்ளைகளை ஆசி கூறி அனுப்பி வைத்தார்கள்.

சுற்றுக் கிராமத்திலுள்ள ஹரிஜன் பிள்ளைகள் புதிது புதிதாகப் பள்ளியில் சேர்ந்து வருகிறார்கள். இதா ஜாதிப் பிள்ளைகளின் சங்கியையும் நாளுக்குநாள் அதிகப்பட்டுக் கொண்டே வருகிறது.

கோ. பாண்டியன்
ஆசிரியர்.

சிரம்பான் தனவைசிய பால நடன சபா

நமது சபாவின் ஆதரவில் வருகிற ஆவணித் திங்களில் நடைபெறும் செல்வ விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டுச் சிரம்பான் தனவைசிய இளைஞர்களும், மற்றும் சில சிறுர்களும் சேர்ந்து இருநாடகங்களைப் பக்கமேளத்துடன் சிறப்புற நடித்துக் காண்பிப்பார்கள். ஆசிரியர் T. K. ஆத்மலிங்கம் அவர்கள் இளைஞர்களை நன்கு பயிற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இந்நாடகங்களினின்றும் எதிர்பார்க்கப்படும் வருவாயை சிரம்பானில் தனவைசிய பொதுக்கல்வி நிலையம் நடத்துவதற்குக் கொடுத்துதவப்படுமாதலின் அன்பர்கள் அனைவரும் நமது பால சபையினரின் நாடகங்களை வந்து பார்த்துக் களிப்புற்று எங்களை உளக்குவிப்பதோடு போதாவு நல்குவார்களென்றும் எதிர்பார்க்கிறோம்.

அ. பழனியப்பன்.

நல்ல வேலைக்காரன்!

(சோ. வி.)

மார்த்தாண்டம் பிள்ளைக்குக் குடும்பக் கவலை என்ற தொந்திரவு ஒன்றும் கிடையாது. மனைவி இறந்து வெகு நாட்களாகி விட்டது. பிள்ளை குட்டி என்ற விலங்குகள் அவருக்குத் தெரியாது. பொழுது போக்காக ஒரு மருந்து ஷாப் வைத்திருக்கிறார். அத்துடன் கொஞ்சம் லேவாதேவியும் உண்டு.

அவருடைய வேலைக்காரன் ராமன் தம்பி—அவன் ஒரு மலையாளி—வேலைக்காரர்களுக்கு ஒரு இலக்ஷியம். சமையல் முதல் எல்லா வேலைகளையும் ஒரு தவறு வராமல் செய்து வைப்பதில் நிபுணன். அதிலே பிள்ளையவர்களுக்கு அவன்மீது ஒரு பற்றுதல், ஒரு பாசம். பிள்ளையவர்களின் கண்ணிற்குக் கண் ராமன்தம்பி. இத்துடன் மட்டுமல்ல. பிள்ளையவர்களின் லீலைகளுக்கு ஏற்ற தூதன். அமைத்து, வைப்பதில் நிபுணன். இருவருக்குள் அந்தரங்கமே கிடையாது.

அன்று பிள்ளையவர்கள் ஏதோ கடிதம் எழுத உட்கார்ந்தபொழுது ராமன் ஒரு கடிதத்தைக்கொண்டு வந்து கொடுத்தான்.

அதைப் பிள்ளையவர்கள் வாசித்து விட்டு, "ராமா அந்த ராமசாமி அய்யர் கவலை ஒரு வழியாக ஓய்ந்தது. வக்கில் பிள்ளையிடம் சொல்லிக் கேஸ் போடலாம் என்று இருந்தேன். நல்ல காலம், சாயுங்காலம் பணத்தைக் கொண்டுவந்து திட்டமாகக் கொடுத்து விடுவதாக எழுதியிருக்கிறான். லாயர் நோட்டீஸ் விடவேண்டாம் என்று சொல்லவேண்டும்" என்றார்.

"ஆமாம் ஸ்வாமி, ஒரு கவலை ஓய்ந்தது. கேஸென்றால் கொஞ்ச அலைச்சலா? எத்தனை வருஷம் இழுத்தடிப்பார்கள்" என்றான்.

"நம்மிடம் 1000 ரூ. இருந்தால் எவ்வளவு சௌகரியம். ஒரு சாயாக்கடை வைத்தால் கவலை இல்லாமல் முதலாளியாக இருக்கலாமே," என்று நினைத்தான் ராமன்தம்பி.

என்றும்விட அன்று அதிக உற்சாகமாக இருந்தான் ராமன். வேலைகள் எல்லாம் வெகு துரிதமாக நடந்தன.

"என்ன ராமா! இப்படி வேலை செய்தால் நாளைக்கு உனக்கு வேலை இருக்காது போலிருக்கிறதே" என்று சிரித்தார் மார்த்தாண்டம் பிள்ளை.

இரவு வந்தது.

எப்பொழுதும்போல் உள் அறையில் சென்று படுத்துக்கொண்டார்.

அன்று நெடுநேரமாக அவருக்குத் தூக்கம் வரவில்லை. என்ன கவலையோ?

இரவு பன்னிரண்டு மணி எங்கோ அடித்தது.

வீட்டில் யாரோ நடமாடும் சப்தம். என்ன திருடனா? மார்த்தாண்டம் பிள்ளை, பக்கத்திலிருந்த தீப்பெட்டியைத் தடவி விளக்கைக் கொளுத்த முயன்றுகொண்டு இருந்தார்.

அப்பொழுது கதவு மெதுவாகத் திறந்தது.

ராமன்தம்பி உள்ளே நுழைந்தான். ஒரு கையில் கொளுத்திய மெழுகு வர்த்தி; இன்னொரு கையில் நீண்ட கத்தி.

மார்த்தாண்டம் பிள்ளை எழுந்தார். உடனே கையிலிருந்த விளக்கையணைத்துவிட்டு ராமன் கத்தியை யோங்கிக்கொண்டு இருளில் பாய்ந்தான்.

மார்த்தாண்டம் பிள்ளைக்கு தோள்ப்பட்டையில் ஒரு குத்து. அதைத் தடுக்க முயலுமுன் நெற்றியில் ஒன்று.

"ஐயோ!"

அடி வயிற்றில் மற்றொன்று.

"இன்னும் பணம் வாங்கவில்லையடா பாவி. கொன்றுவிடாதே!" என்று ஹீன ஸ்வரத்தில் கதறினார் மார்த்தாண்டம் பிள்ளை.

"வாங்கவில்லையா?"

ராமன் கையிலிருந்த கத்தி நழுவிக் கீழே விழுந்தது.

"பொய் சொல்லுகிறாய்."

"சாயுங்காலம் தடிப்பயல் மாட்டேன் என்று காகிதம் எழுதிவிட்டான். மேஜையில் இருக்கிறது பார்!" என்றார்.

படுக்கையிலிருந்து வெகு கஷ்டத்துடன் மேஜையை அணுகினார். படுக்கை எல்லாம் ரத்தம். மேஜை எல்லாம் ரத்தம்; ராமன் கையிலிருந்த கறை.

உடனே மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விட்டார்.

விடியற்காலம்

மார்த்தாண்டம் பிள்ளைக்குச் சுய அறிவு வந்தது. எழுந்திருக்கமுடியாத படி பலவீனம்.

மறுபடியும் வந்து உயிருடன் இருப்பதைப் பார்த்தால் கொன்று புழக்கடையில் புதைத்து விடுவானே.

என்ன செய்வது! எழுந்திருக்க முடியவில்லையே!

எங்கு பார்த்தாலும் இரத்தக்கறை. என்ன நாற்றம் நாறுகிறது! எழுந்திருக்க முடியவில்லையே!

மறுபடியும் கதவு திறக்கிறது. இருக்கிற கொஞ்சப் பிராணனும் போய்விடும் போலிருக்கிறது மார்த்தாண்டம் பிள்ளைக்கு.

உயிருடன் இருப்பதைக் கண்டால் திட்டமாகக் கொன்று புதைத்து விடுவான். கண்ணை மூடிக்கொண்டு கிடந்தால் போய்விட மாட்டானா? என்ன நம்பிக்கை! என்ன ஆசை!

ராமன்தான் உள்ளே வந்தான் ஆனால் கொல்லவரவில்லை. கையிலே பேஸின், மருந்து, இத்யாதி இத்யாதி.

இருந்த காயங்களுக்கு வைத்தியரின் கைத்திறனுடன் மருந்து வைத்துக் கட்டுகிறான்.

"செய்த குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வில்லை. அதற்கு ஏற்ற ஊழியம் செய்கிறேன். என்னைக் காட்டிக்கொடா விட்டால் நீர் பிழைத்துக் கொள்ளுவீர்."

II

குணமான பிறகு பயலைத்தொலைத்து விடுவது என்று எண்ணியிருந்தார் மார்த்தாண்டம் பிள்ளை.

ராமன் எப்பொழுதும் "காட்டிக் கொடுத்தால் என்ன தெரியுமா?" என்று பயங்காட்டி வந்தான்.

ராமனுடைய சேவையில் அவருக்குப் புண்கள் குணமடைந்து வந்தன. இப்பொழுது அவருக்கு எழுந்து உட்கார முடியும். அன்று ஒரு யோசனை, ஒரு தந்திரம், அவர் மனதில் பட்டது. நாமும் அவன் மீது பிடிவைத்திருந்தால் தான் குணமடையலாம் என்று பட்டது.

அன்று ராமன் வந்தவுடன் "ராமா நானும் லாயருக்கு ஒரு ஸீல் போட்ட கடிதம் அனுப்பியிருக்கிறேன். எனக்கு ஏதாவது தீங்கு வந்தால் உன்னைப்பிடித்துக்கொள்ளுவார்கள். எனக்குத் தீங்கு வாராமல் இருக்கும் வரை உனக்குப் பயமில்லை" என்றார்.

இன்னும் சில நாட்கள் கழிந்தன. திடீரென்று வீட்டின் வெளிப்பக்கத்தில் ஏகக் கூச்சல்.

இரண்டு போலீஸார்கள் ராமனை உள்ளே தள்ளிக்கொண்டு வருகிறார்கள்.

"கடைசியாகக் காட்டிக் கொடுத்து விட்டீர்களே. உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்," என்று போலீஸார் பிடியிலிருந்து திமிறினான்.

"அடே நீ என்னைக்கொலை செய்ய யத்தனித்ததை யாருடனும் சொல்லவில்லையே?" என்றார் மார்த்தாண்டம் பிள்ளை.

"ஸார்! நீங்கள் பேசிக்கொள்வது எங்களுக்கு அர்த்தமாகவில்லை. இவன் பக்கத்து வீட்டிலிருந்து நகையைத் திருடியதாகக் கைதி செய்திருக்கிறேன். திருட்டுச் சொத்து அவன் பெட்டியிலிருந்தது," என்று ராமனை வெளியே தள்ளிக்கொண்டு போனார்கள் போலீஸ்காரர்கள்.

அப்பொழுது ராமன் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

கனக--சுந்தரி அல்லது கற்பிழந்த காரிகை

(நாகப்பன்)

"ஜெயா! என்ன செய்துகொண்டிருக்கிறாய்! வீதியில் என்ன வேடிக்கை? —காலை 9 மணி ஆகப்போகிறது, இன்னும் காப்பி சாப்பிடாமல் அங்கு என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்? குளித்துக் காப்பி சாப்பிட்டுவிட்டுப் பிறகு என்ன வேண்டுமானாலும் செய்" என்று ஜெயசுந்தரியின் தாயார் வீட்டின் பின்புறமிருந்து தெருவில்—கதவண்டை—நின்று கொண்டிருந்த தன்னுடைய குமாரத்தியான ஜெயசுந்தரியை அழைத்தாள்.

"இதோ! வந்துவிட்டேன் அம்மா! நமது "ரோட்டை" (Road) 'ரிபேர்' செய்யப் போகிறார்கள்போல் இருக்கு! வீதியை யெல்லாம் கொத்துகிறார்கள்—அதைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று சொல்லிக்கொண்டே சமையலறையை அடைந்த ஜெயா—சுடச்சுட 'டேபிள்' மேல் வைத்திருந்த உப்புமா—இட்லி முதலியவைகளைச் சாப்பிட்டுவிட்டுக் 'காப்பி' சாப்பிட்டாள்.

"அப்பா எங்கே? காணோம்! இன்னும் எழுந்திருக்கவில்லையோ? வா—வா சோம்பேறி ஆகிவிட்டார்போலத் தோன்றுகிறதே" என்றாள் ஜெயா.

"அவருக்கென்ன? வீட்டைக் கவனிக்கிறாரா, ஒன்றா? தூங்கவேண்டியது—திங்கவேண்டியது — எதைப்பற்றிக் கவலை?" என்றாள் அவளுடைய தாயார்.

காப்பி சாப்பிட்ட பிறகு ஜெயா—வீட்டின் முன்புறம் போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு —கையில் ஒரு நாவலைப் பிடித்துக் கொண்டு வாசிப்பவளைப் போலிருந்தாள். உண்மையில் அவளுடைய கண்களின் பார்வை—புஸ்தகத்தின் மீது செல்லவில்லை, ஆனால் முழுதும் அவ்வாறு, என்றுகூற நம்மால் முடியாது, ஏனெனில்—அவளுடைய பார்வை புஸ்தகத்திலும்—வீதியில், 'ரோட்டை' 'ரிபேர்' செய்து கொண்டிருப்பவர்களின் 'ஓவர்ஸியர்' மேலும் சென்று கொண்டிருந்தது.

ஜெயா—13 அல்லது 14 வயதுக்கு அதிகமில்லை ஓர் இளங்குமரி—மின்சாரத்தைப்போல்—இழுக்கத் தக்க, அழகுடையவள்—மருண்ட பார்வை-யாவரையும் மருளச் செய்யும்—இவ்வளவே அவளுடைய அழகுக்குப்போதும்.

'ஓவர்ஸியர்'—23 அல்லது 24 வயதுடைய ஓர் இளம் வாலிபர். தற்கால நாகரிக உடை உடுத்துபவர்—அமெரிக்கன் கிராப்—கண்ணில் கண்ணாடி—கையில் ஓர் ரிஸ்ட் வாட்ச்—இதுவே அவருடைய அழகு—பெயர் கனக சுந்தரன்.

தன்னை ஓர் இளம்பெண்—பார்ப்பதை அறிந்த, 'ஓவர்ஸியர்' சும்மாவா இருப்பார்? இவரும் பார்க்க ஆரம்பித்தார். இது முதல்நாள் நடைபெற்றது.

மறுநாட் காலை. முன்பு கூறியவாறே —ஜெயசுந்தரி அங்கு உட்கார்ந்திருந்தாள். கனகசுந்தரனும் வீதியில் வேலை செய்யும் ஆட்களை மிரட்டிக் கொண்டு—இவளையும் ஒரு கண்ணில் பார்ப்பதுமாக இருந்தான் (ஒரு கண்ணில் என்றால்—ஒற்றைக் கண்ணன் என்று நினைத்து விடாதீர்கள்!) இன்று இருவரிடையிலும் புன்முறுவல் நிகழ்ந்தது.

மூன்றும் நாள் பகல் 11 மணியிருக்கும். காற்று அதிகமாக அடித்தது. ஜெயசுந்தரி வீட்டின் மத்தியில் போடப்பட்டிருக்கும் 'ரவுண்ட்' டேபிளின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். காற்றுடன் மழையும் தூர ஆரம்பித்தது. இச்சமயம் கனகசுந்தரன் இவ்வீட்டினுள் வந்து—"மழை பெய்கிறது-சிறிது நாழிகை இங்கு இருந்துவிட்டுச் செல்ல இடம் கொடுக்க முடியுமா?" என்று ஜெயாவைப் பார்த்துக் கேட்டான்.

"ஆஹா! அதற்கென்ன பேஷாக இதோ இங்கு போடப்பட்டிருக்கும் இந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்து விட்டுச் செல்லுங்களேன்!" என்று புன்சிரிப்புடன்— (சிறிது நாணத்துடன் என்பதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்) மொழிந்தாள்.

கனகசுந்தரனும் உட்கார—ஜெயாவினுடைய தாயார் அங்கு வந்தாள்.

"அம்மா! மழை பெய்கிறது என்று இவர் இங்கு இருந்து செல்ல வந்திருக்கிறார், இவர் 'ஓவர்ஸியர்' என்று அவள் கேட்பதற்கு முன்பே கூறினாள்.

"இருந்து விட்டுச் செல்லட்டுமே! அதற்கென்ன தடை—தங்கள் பெயர் என்னமோ?" என்று கேட்டாள் ஜெயாவின் தாயார். "கனகசுந்தரன்" என்றான். "குளிராக இருக்கிறது அம்மா! அவருக்கு கொஞ்சம் சுடச்சுடக் காப்பி கொணர்ந்து கொடு" என்றாள் சுந்தரி.

அதன் பிரகாரமே அவளும் சென்று—இரு 'கப்' அண்ட்—'ஸாஸரி'ல் காப்பி கொணர்ந்து 'டேபிள்' மேல் வைத்தாள். கனக சுந்தரனும்—ஜெய சுந்தரியும் அருந்தினர். இதற்குள் மழையும் நின்று விட்டது. கனகசுந்தரனும் இனி இங்கு இருப்பது நல்லதன்று" என்று நினைத்தவனாய் ஜெயாவிடம் சென்று வருவதாகக் கூறி எழுந்து சென்று விட்டான்.

* * *

மேற் கூறிய நாள் முதல் கனகசுந்தரன் அடிக்கடி ஜெயசுந்தரியின் வீட்டிற்கு வருவதும் போவதுமாக இருந்தான். இவ்வாறு நாட்கள் பல சென்றன.

"ஜெயா! இன்று சினிமா நன்றாக இருக்கிறது—செல்லுவோம் வருகிறாயா? என்று கேட்டான் ஓர் நாள் சுந்தரன்.

"என்ன படமோ?"

"மேல் நாட்டுப் படத்திற்குப் போட்டியாக நம் நாட்டில் தயாரித்த (இந்திய மாது நடித்த) "கர்மா" என்ற ஒரு ஆங்கிலப் படம், மிகவும் போற்றப் பட்டதாம்"

"சரி—செல்வோம்—மணி 5½ தானே ஆகிறது! காப்பி கொஞ்சம் சாப்பிடுங்களேன்!" என்று சுந்தரி கூறிக்கொண்டு வீட்டிற்குள் சென்று காப்பி கொணர்ந்து தன் காதலனுக்குக் கொடுத்தாள்.

"நேற்று நான் கொடுத்தேனே அப்புஸ்தகத்தைப் படித்து விட்டாயோ? எப்படி இருக்கிறது?"

"காதல் சம்பவங்கள் அதிகம்—அது தான் எனக்கும் பிடிக்கும்—நல்ல புஸ்தகம்"

"அதனால் தான் உனக்கு அதைத் தேடிப் பிடித்துக் கொணர்ந்து கொடுத்தேன், எங்கே சொல் பார்ப்போம்—அங்கு இருக்கும்—நடந்த ஒரு சம்பவத்தை..........."

அவளும் கூற மணியும் $6\frac{1}{2}$ ஆயிற்று. சினிமாவிற்கு இருவரும் புறப்பட்டுச் சென்றனர்.

* * *

இவ்வாறு நாட்கள் பல சென்று, மாதங்கள் பல ஆயின.

ஓர் நாள் மாலை சுமார் ஆறு மணியிருக்கும். ஜெயசுந்தரியின் வீட்டின் பின் புறமுள்ள தோட்டத்தில் கனகசுந்தரனும்—ஜெயசுந்தரியும் கீழ்க் கண்டவாறு சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

"காதலரே! அதோ பாரும் அக் குயிலினங்கள்—சதா காலமும் ஜோடி—ஜோடியாக இருப்பதும்-கொஞ்சுவதும் சந்தோஷமாகக் காலத்தைக் கழிப்பதும் எவ்வளவு இன்பகாமாக இருக்கிறது; எங்கு சென்றாலும் பிரியவில்லை—அதைப் போல..........."

"அதைப்போல நாம் இருக்கவேண்டுமென்கிறாயோ? ஏன் இருக்கக் கூடாது?"

"இருக்க வேண்டியதுதான்—ஆனால் நீங்கள் அதைப்போன்று இருக்க முடியாது"

"ஆம்! அது வாஸ்தவம்தான்—வேலையில்லாமல் விருப்பின்..........."

"ஜயா!" என்று அவளுடைய தாயார் அழைக்கும், குரலைக் கேட்டு ஜெயா வீட்டிற்குள் வந்தாள். அவனும் கூடவே வந்து "ஜெயா! நாழியாகிறது, நான் சென்று வருகிறேன்" என்று கூறிச் சென்றான்.

"ஏன் கூப்பிட்டாய்?" என்று கேட்க "அப்பா! உன்னை அழைத்தார்"—என ஜெயா தன் தகப்பனார் இருக்கும் அறைக்குச் சென்றாள்.

"ஜெயா! உன்னிடம் சிறிது நாழிகைக்கு முன்பு சம்பாஷித்துக் கொண்டிருந்தானே, அவன் யார்?"

"அவரா? அவர் 'ஓவர்ஸியர்' வேலை பார்ப்பவர்" என்றாள்.

"அவனைப் பார்த்தால் எனக்கென்னமோ பிடிக்கவில்லை—அவனிடம் நீ நெருக்கமாக இருப்பதும் பிடிக்கவில்லை எனக்கு"

"ஏன் அப்படிக் கூறுகிறீர்? அவர் நல்லவர்—யோக்கியமானவர், ஆயிற்றே"

"எனக்கு அப்படித் தோன்றவில்லை—எதற்கும் ஜாக்கிரதையாக 'லிமிட்டாக' (Limit) இருந்து கொள்—இது சொல்வதற்காகத்தான் அழைத்தேன். சரி போ! என" ஜெயா அவ்வறை விட்டுச் சென்றாள்.

தன் தந்தை கூறியதில் ஒருவிதத்தில் துக்கமும்—ஒருவிதத்தில் சந்தோஷமும் ஏற்பட்டது. ஆனால் ஜெயசுந்தரி மட்டும் உண்மையில் அவனை அன்பாக—காதலித்து வந்தாள். ஆகையால் அவளுக்கு அவன்மேல் எள்ளளவும் சந்தேகப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்று அவள் தீர்மானம்.

ஒரு மாதத்திற்குப் பிறகு தன் வீட்டிற்கு வந்திருந்த கனகசுந்தரத்தைப் பார்த்து ஜெயா "காதலரே! நாமிருவரும் உண்மையாக—மனமாரக் காதலித்து—இன்பமாகக் காலத்தைக் கழித்து வருகிறோம். ஆனால் மனது மட்டும் ஒரு விஷயத்தில் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறது"

"என்ன அப்படிப்பட்ட சஞ்சலம்? கூறு—நான் அச்சஞ்சலத்தைத் தீர்க்க உடல், பொருள் ஆவியையும் அர்ப்பணம் செய்கிறேன், கண்மணி! ஜெயா!"

"அன்பரே! ஒரு சின்ன விஷயம்—அதாவது எப்பொழுது தாங்கள் என்னை மணம் செய்துகொள்ளப் போகிறீர்கள். இப்படியே எவ்வளவு நாட்களுக் கிருப்பது என்ற சஞ்சலம்தான்"

"இதுதானா? அதற்கென்ன! வருகிற ஐப்பசியில் முகூர்த்தம் இருக்கிறது. நமது திருமணத்தை முடித்துக் கொண்டால் போகிறது."

"இப்பொழுது எனது மனம் திருப்தி அடைந்தது" என்று கூறி அவனுக்கு ஒரு முத்தமீந்தாள்.

ஐப்பசி மாதம் அவசரத்துடன் ஜெயாவிற் கென்றே பிறந்துவிட்டது போலும்.

"கனகசுந்தரரே? மாதம் வெகு விரைவில் வந்துவிட்டது, உமது அபிப்பிராயமென்ன? என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் ஜெயா.

"எல்லாம் முடிவு செய்திருக்கிறேன்—நீ என்னை உண்மையாகக் காதலிக்கிறாயா?" என்று கேட்டான் இவ்வளவு நாட்கள் பழகியும்.

"என்ன இப்படிக் கேட்கிறீர்? என் மனமார நான் உங்களைக் காதலிக்கிறேன்—இது உண்மை" என்றாள்.

"அதைத் தான் கேட்டேன்," என்று கூறிவிட்டு வேறு சம்பாஷணையில் புகுந்து விட்டான்.

"நேசரே! நான் முதலில் கேட்ட கேள்விக்கு இதுவரை பதிலில்லையே?" என்று கேட்டாள் கடைசியில்

"ஆம்! மறந்து விட்டேன்—நான் சொல்லும் பிரகாரம் நீ நடக்கச் சித்தம் தானே?"

"இன்னுமா சந்தேகம்." "சரி! அப்படியாயின் நாளை காலை $4\frac{1}{2}$ மணிக்கு நீ தயாராகவேண்டிய உடைகளுடன் இருக்க வேண்டியது—சில காரணங்களை முன்னிட்டு நமது திருமணம் இங்கு நடத்துவது சரிப்படாது—அதுவுமன்றி சில காலத்திற்கு எனது மணத்தைப் பற்றிய விஷயமும் வெளியில் சொல்லக்கூடாது—தெரியவும் கூடாது—ஆகையால், ஜெயா! நீ என்னை உண்மையாகக் காதலிப்பவளாக இருப்பின் இந்த ஏற்பாட்டிற்கு உடன்படுவாய் என்று எண்ணுகிறேன்" என்றான்.

ஜெயா 1 மணி நேரம் யோசித்தவளாய் "பிரிய நேசரே? தங்கள் ஏற்பாட்டிற்கு உடன்படுகிறேன்—உங்களைத்தவிர நான் வேறு யாரையும் மணம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லை—ஆகையால்............................

"இதுவே போதும்" என்று கூறிக் கனகசுந்தரன்—ஜெயாவைப் பிடித்திழுத்து முத்தமிட்டான்.

* * *

கோயமுத்தூரில்—ஜெயில் ரோட்டின் கோடியிலுள்ள ஒரு சிறு வீட்டில் மினுக்—மினுக்கென்று விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரவு சுமார் 1 மணியிருக்கும். ஓர் மாது, கிழிந்த பாயின் மேல் படுத்துப் புரண்டுக்கொண்டு—கண்ணீருடன் கதறும் காட்சி கல்மனதையும் கரையச்செய்தது. பிரசவவேதனை அவளால் பொறுக்க முடியவில்லை போலும், அந்தோ! பரிதாபம்! அவ

ளைப் பார்த்தால்—ஓர் செல்வக் குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து வந்தவள் போலும். எக்காரணத்தாலோ இச்சமயம் அவ்வீட்டில் தன்னந்தனியே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாள்?

ஒரு மணிக்குப் பிறகு "வீர் வீர்" என்று குழந்தை அழும் சப்தம் அவ்வீட்டினுள் கேட்டது. ஆம்! கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த அம் மாதுக்குக் குழந்தை பிறந்தது—அழகிய ஆண் குழந்தை. அக்குழந்தைக்குப் பக்கத்தில் ஸ்மரணை அற்று அவள் படுத்துக்கொண்டிருந்தாள். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை போலும்!

மறுநாள் காலை ஒரு வாலிபன் அவ்வீட்டிற்குள் புகுந்தான். இவனைப் பார்த்த, அங்கு படுத்துக்கொண்டிருந்த மாது "காதலரே" என்னை இக்கதிக்கு உள்ளாக்கினீரே! இவ்வளவு நாட்கள் கஷ்டப்பட்டது போதும்—இனியும் என்னைத் துன்பப்படுத்தாமல்—உங்களுக்குப் பிறந்த இவ்வாண் குழந்தையுடன் என்னை ஏற்றுக்கொள்ளும். உங்களை நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்." "உன்னால் எனது வேலையும் போய்க் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நான் உன்னை எப்படிக் காப்பாற்ற முடியும்?" என்றான் அவன்.

இதைக்கேட்ட அவள் "அட சண்டாளனே! என்னை ஏமாற்றியாவிட்டாய் கடைசியில்? பெண்களுக்கு முக்கியமாக இருக்க வேண்டிய கற்பையும் இழந்தேன், எனது பெற்றோர்களுடைய பேச்சைக் கேட்காமல் உன்னை நம்பி ஓடிவர, ஆசையால்—மோசம் போனேன், என்னை நிராகரித்தாய்—என்னை இப்பொழுது கவனிப்பதே இல்லை—என்னைப்போல எத்தனை பெண்களைக் கெடுத்தாயோ? உண்மையாக உன்னை நம்பி மோசம் போனவர்கள் எவ்வளவு பேரோ? பெண் பாவம் பொல்லாது" என்று கூறிக்கொண்டிருக்கும் சமயம் அவன் கோபத்துடன் "ஏது அதிகமாகப் பேச ஆரம்பிக்கிறாய், ஜாக்கிரதை! உன்னை நான் மணம் செய்துகொண்டால் என்ன பிரயோஜனம்! எப்படியோ தொலைந்து போ" என்று கூறி அவ்வீட்டைவிட்டு வெளிச்சென்று விட்டான்.

"ஆ! கடவுளே! நீயே கதி" என்று கூறியவளாய் அவள் மூர்ச்சையாயினாள்.

இவள் யார்? அவன் யார்? முழுதும் காதலித்த ஜெயசுந்தரி—இவளை ஏமாற்றிய கனகசுந்தரன். அவன் மணம் செய்துகொள்வதாக அவளை அழைத்து வந்து மணம் செய்து கொள்ளாமல் ஏமாற்றி விட்டான் படுபாவி!

விருந்தினர்:—மோட்டாரை வேகமாக ஓட்டு. இல்லாவிட்டால் எனக்கு ரயில் தவறிவிடும்.

மோட்டார் ஓட்டி:—உங்களுக்கு ரயில் தவறினால் எனக்கு வேலை போய்விடும்.

பெரியாரைப்

போற்றி வாழ்!

தொடர் கதை

கடுவழியில் காதலி

(Eesy)

[சென்ற 20-7-34 முதல் நான்கு ஊழியன் இதழ்களில் "கடுவழியில் காதலி" என்ற ஓர் தொடர் கதையை எழுதி வந்தேனென்பது நேயர்கட்கு ஞாபகமிருக்கலாம். கடந்த இரண்டு வாரங்களாக அதன் தொடர்ச்சி வெளியிடப்படவில்லை. காரணம் எனக்குற்ற உடல் நலிவாகும். எழுதமுடியாத அளவு ஜுரத்தினால் தொல்லைப்பட்டதால் சென்ற இரண்டு வாரங்கள் பேனாவைத் தொடவில்லை. எனவே நேயர்கள் மன்னித்து பிரஸ்தாபக் கதையின் நான்கு அத்தியாயங்களையும் ஞாபகத்துக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த நான்கு அத்தியாயங்களிலும் வீட்டை நாடி ரயிலில் சென்றுகொண்டிருந்த எனக்குக் கடனியூரில் நடைபெற்ற சீர்திருத்த மணத்தில் எவ்வாறு பேசுவதற்கோர் தருணம் கிடைத்ததென்றும், பிரசங்க மத்தியில் எவ்வாறு மங்கையர்க்கரசி யென்ற விதவைப் பெண்மணி உணர்ச்சி மிகுதியால் என் பிரசங்கத்திலீடுபட்டு என் மீது பற்றுக் காண்பிக்க ஆரம்பித்தாளென்றும், அப்பால் அப்பற்று எங்ஙனம் காதலாக மாறி என் மீது சிறு சிறு துளிகளாக வீழ்ந்து என்னைக் குளிர்வித்து இறுதியில் உயிரைக் கட்டுப்படுத்தித் தன் வழிப்படுத்திக் கொண்டதென்றும், அதனால் எங்ஙனம் நான் சொக்கப்பட்டு வீழ்ந்து துன்புற்றுப் பலரால்—விசேஷமாக என் ஆருயிர்க் காதலியால்—சிக்ஷிக்கப் பெறும் "பாக்கியத்தை" அடைந்தேனென்றும், அப்பால் எவ்வாறு விடை பெற்றுக்கொண்டு ஏமாந்த மனத்துடன் நாகர்கோவிலை நாடிப்புறப்பட்டேனென்றும் கூறினேன் அன்பின்:—]

5. மங்கையர்க்கரசி யார்?

திடீரென மோட்டார் பஸ் நின்றதும் சுற்றுமுற்றும் பார்த்தேன்.....ஆம். அப்பொல்லாத மோட்டார் என்னை நாகர்கோவிலில் கொண்டு விட்டிருந்தது. அங்கு மணிக்கூண்டும் சுற்றுப்புறக் கட்டிடங்களும் என்முன் ஓங்கி எழுந்து நின்றன. அப்போது மணி சரியாக 12. நான் எவ்வாறு நாகர்கோவிலை அடைந்தேனென்பதே புரியவில்லை. திருநெல்வேலியில் சுமார் எட்டுக்கு மோட்டார் பஸ்ஸில் நுழைந்தது மட்டிலும் ஞாபகம். அதற்கு மேல் மோட்டார் டிரைவர் என்னென்ன சித்திரவதை செய்தானென்பது தெரியவில்லை.

ஆ! அப்போது என்னிருதயமிருந்த நிலை! நோயுற்ற அன்று எவ்வாறிருந்ததோ அது போன்றே இருந்தது. முற்றிலும், முழுமையும் சஞ்சலம் என்பதைத்தவிர வேறு நன்மையான எந்த உணர்ச்சியும் நினைத்துணையேனும் என் மனதை அண்டியிருக்கவில்லை. ஐயோ! அதனையாரிடம் கூறுவேன் இப்போது? கூறினால் யார் அனுதாபப்படுவார்கள்? யார் உதவி செய்வார்கள்? தோழர் கந்தசாமியோ, துணைவர் திருமலையோ, தூய கல்யாணியோ, தோமில் பாட்டியோ, தோகை—இல்லை, என் ஆசை அன்பு, ஆருயிர், அருள் நிறை, அழகு நிறை, அநந்தம் நிறை, ஆர்வம் நிறை—என் அநந்தமும் நிறை—பூங்கொடி, பூங்கரும்பு, பூம்பந்து, பூமேனியாள் மங்கையர்க்கரசியோ என் பக்கத்திலிருக்கின்றார்களா? அந்தோ அந்த—அந்த—அந்த அரும் தோழர்களை நினைக்கும் போது. ஆ! என் மனம் எவ்வாறு விகாசமடைகின்றது; உடைகின்றது; துடிதுடிக்கின்றது!"

நான் நாகர்கோவில் மோட்டார் ஸ்டாண்டில் இறங்கியதும், செயலற்று, ஏமாந்து வீட்டை நோக்கி நடக்கலானேன். என் வீட்டுக்கும் மணிக்கூண்டுக்கும் சற்றேறக்குறைய மூன்று மைல் தூரமுண்டு. அம்மூன்றுமைல் தூரத்தையும் நான்கடந்து சென்ற மாதிரி! ஐயோ! கனக்குப் பெரும்பொருள் கடன்தந்து அப்பொருள் திருப்பிச் செலுத்தப்படாததால், தொடர்ந்து வரும் லேவாதேவிக்காரனைப் பக்கத்திலே கண்டு கூட்டத்துள் புகும் மானியைப்போன்று இருந்தது என் நிலைமை!

* * *

வழியில் என் கண்ணில் வீழ்ந்த இடமெல்லாம் அந்தகாரம் படர்ந்திருந்தன.



தேவகோட்டை மாரியம்மன் உற்சவத்தில் பலி நிறுத்தல் பிரசாரம் செய்த தென்னிந்திய ஜீவரட்சா சபையாரும், தேவகோட்டை சரஸ்வதி வாசகசாலை, உடற்பயிற்சிச்சாலை அன்பர்களும், ஸ்ரீ சுவர்ணமூர்த்திப் பெண் பாடசாலை மாணவிகளும் படத்தில் காணப்படுகின்றனர்.

ஒரு பிராணிகூட நடமாடவில்லை. எங்கும் ஏக இருள்! இருள்! இருள்! இருளையின்றி வேறொன்றும் ஆட்சி செய்யவில்லை. மெதுவாக அராபியன் கடலிலிருந்து ஊர்ந்துவரும் மந்தமாருதன்கூட அன்று இருளுக்குப் பயந்தான்போலும்; நாகர் கோவிலில் உலாவவேயில்லை. அதனைக் கண்டு ஏக்கமுற்றாற்போல மரங்கள், செடிகள், கொடிகளெல்லாம் நிமிர்ந்து அசையாது நின்றுகொண்டிருந்தன. கட்டிடங்கள் யாவும் இருளுக்குப் பயந்து ஒளிந்துகொண்டாற்போல மரங்களின் அடியில் உயிரற்று நின்றன. எங்கெங்கோ "இஃதென்ன கொடுமை-மை-மை" என்றுகத்தும் நாய்களின் ஊளை பட்டிலும் இலேசாக வானைத்துளைத்து எழும்பிக்கொண்டிருந்தது. இந்த நிர்ஜீவ நிலைமையைக் கண் விழித்துப் பார்ப்பார் எவரேனுமுண்டாவென்றால் ஆகாயத்தில் சிதறி வீழ்ந்து மினிர்ந்துகொண்டிருக்கும் நக்ஷத்திரக் கூட்டத்தையே குறிப்பிட இயலும். அந்நக்ஷத்திரங்கள்தாம் இருளை நோக்கி நின்றனவோ, அன்றி என்னைப் பார்த்துக் கண் சிமிட்டி ஏளனம் செய்தனவோ! என்ன செய்தாலும் செய்யட்டுமென்று நெடுக வீட்டை நோக்கி நடந்தேன்.

சுமார் ஒன்றரைமணி இருக்கும்; நான் வீட்டை அடைந்தேன். பலநாட்களுக்குப் பின்பு வந்து சேர்ந்தேனாதலால் என் தாயார், சகோதரிகள், சிறுவர்கள் எல்லாம் மட்டற்ற பாசத்தோடு என்னை உபசரித்தார்கள். என் மனமும் சிறிது மாற்றமடைந்தது. என்றாலும் முழுமையும் வெளிச்சம் பெறவில்லை. அப்பால் அங்குதங்கிய சுமார் ஒருமாத காலமும் என் சுற்றத்தார் செய்த உபசாரங்கட்கு எல்லை சொல்ல முடியாது. பற்பல வழிகளில் என்னைக் களிப்பிக்கப் பார்த்தார்கள். அவர்கட்கு நான் சந்தோஷமா யிருக்கவில்லை என்று தெரிந்திருக்கலாம் போலிருக்கிறது. ஆகலால்தான் அதிகமாக உபசரித்தார்களென்று நினைக்கிறேன். ஆனால் என்னிருதயத்தை—ஒரு நாளையில்—சுக்கல் சுக்கலாக—துண்டு துண்டாக—கந்தல் கந்தலாக—பொட்டுப் பொடிகளாக—உடைத்துப் பெயர்த்து நசுக்கிக் கிழித்துத் தன்கையில் அடக்கம் செய்துகொண்டு இருதயமற்றவனாக என்னை விட்டுவிட்ட மங்கையர்க்கரசியென்னும் மங்கையர் மணியை மறந்துவிட்டு மகிழ்ந்திருப்பேனோ? நான் தினசரி என்ன செய்தாலும்—என்ன நினைத்தாலும், என்ன படித்தாலும், என்ன உண்டாலும், என்ன பேசினாலும் அதிலெல்லாம் மங்கையர்க்கரசி என்ற "டின்ட்" (வர்ணத்தைப்) பூசாமலிருக்கவில்லை. பன்முறை என் பேச்சு திடீர் திடீரெனத் தடைப் பட்டிருக்கிறது. பன்முறை வாசித்த பத்தகங்கள் இரண்டு மூன்று பாராவோடு மூடிக்கொண்டு விட்டன. பன்முறை நிம்மதியா யிருக்கையில் பெருமூச்சு விட்டிருக்கிறேன். பன்முறை "அவளில்லா உணவும் ஓர் உணவா" என்றெண்ணிப் பாதியில் சாப்பாட்டைப் போட்டுவிட்டு எழுந்திருக்கிறேன். அவளது திருவுருவை, திவ்ய அழகை, தேஜஸ் ஒளியைக் கண்ட இரவுகள் பலப்பல. அவளும்



தென் இந்திய ஜீவரட்சாப் பிரசார சபையாரின் பிரசாரத்தின்போது தேவகோட்டையில் எடுக்கப்பட்டது.

நானும் சேர்ந்து ஆடவும் பாடவும் விளையாடவும் செய்ததாகக் கனவு கண்ட இரவுகள் எண்ணில்பல. இருவரும் எஸ். ஐ. ஆர்., எம். எஸ். எம். முதலிய ரயில்களில் ஏறிப் பிரயாணம்செய்த இரவுகள் பலப் பல. என் தாயார் "அந்த மங்கையர்க்கரசி யார்? ஏன் அவளை அழைக்கிறாய் இரவு?" என்று சொல்லிய நாட்களும் பலவே.

இங்ஙனம் பல நாட்களை—ஆம் இ-ரு-ப-த்-தொ-ரு—நாட்களை – இருபத்தொரு நீண்ட நாட்களை—உயிரற்றவனாகக் கழித்தேன்.

அன்பர்களே! நான் கூறுவது ஒருகால் பித்தன் புலம்புவதுபோல் உங்களில் சில நக்குத் தோன்றலாம். சிலர் அவ்வாறு நினைக்கமாட்டார்கள் என்பது என் நம்பிக்கை. காதலென்னும் நறுந்தேனைப் பருகப்போகும் நிலைமையில் நீங்களிருந்தால் எனக்கு நிச்சயமாகவும் கூறுகின்றேன்—பித்தன் என்ற அடைமொழியைப் போடமாட்டீர்கள்! சில அறிவியல் வாதிகள் 'காதலென்பது ஒரு மயக்கு; ஆகவே அதனைப் பிரமாதமாக நினைக்கவேண்டா'மென்கின்றார்கள். இக்கூற்றுச் சரியானதாகவிருக்கலாம். ஆனால் காதல் தோன்றியவிடத்து அறிவுதான் பிடுங்கப்பட்டுவிடுகின்றதே. ஆதலால் காதல்தோன்றும் அந்தச் சமயத்தில் எவ்வாறு அறிவியல் ஒளி பிரகாசிக்கக்கூடும்? எவ்வாறு காதலைத் துச்சமென்று தள்ளுவர்? எந்த மனிதனாயினும் நேர்மையாகக் காதலைக் கண்டிருந்தால்—இல்லை அதில் சிக்கி யுழன்றிருந்தால்—என்னைவிடப் பன்மடங்கு புலம்பக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. நண்பர்களே! ஆலாய் நான் புலம்புகின்றேனென்றெண்ணி

விடவேண்டாம். காதலைக் காண்பிக்க வேண்டிய சித்திரத்தின் ஒரு மூலையையே வெளியிடுகின்றேன்.

நண்பர்களே! நான் இருபத்தோரு நாட்களையும் இருபத்தொரு மாதமாகக் கழித்துக் கொண்டிருந்ததும் ஒரு நாள் தபாற்காரன்—அவன் நீடூழி வாழ்க! அவன் போஸ்டு மாஸ்டாரகட்டும்; இதற்குள் இறந்து போயிருந்தானென்றால் ஆன்மா சாந்தியடையட்டும்—அதாவது மீண்டும் தபாற்காரனாகப் பிறந்து தெருச் சுற்றுதிருக்கட்டும்.

ஒரு நாள் அந்தத் தபாற் சேவகன் ஒரு கடிதத்தைத் தந்தான். அக்கடிதம் சாதாரணக் கடிதங்களைப் போலின்றி இரண்டரை அணுத் தபால் பில்லையைத் தாங்கிப்பெரிய ஜமீந்தார்கள் வயிற்றைப் போன்றிருந்தது அக் கடிதத்தை ஆர்வத்துடன் கிழித்து உள்ளுறையைப் பார்த்தேன். அதில் இரண்டு கடிதங்களிருந்தன. அவற்றிலொன்று:—

கூனியூர்,
கதலி நிலையம்.

அன்பார்ந்த தம்பி,

நீங்கள் சிரஞ்சீவியாக வாழ வேண்டும். இங்கு நானும், மங்கையர்க்கரசியும் அடுத்த வீட்டில் நிருமலை, கல்யாணி, குழந்தை லக்ஷ்மி முதலியவர்களும் க்ஷேமம். நீங்களும் சுற்றத்தாரும் க்ஷேமமாயிருப்பீர்களென்று நம்புகிறேன். நீங்கள் பிரிந்து போன பிறகு என் மனம் என்ன பாடுபடுகின்றதென்பதைக் கூற முடியாது. இன்னும் ஒரு முறை பார்த்துப் பழகினால்தான் என் கட்டைக்குக் கதிமோக்ஷம் கிடைக்கும். மாயாஜாலக் கண்ணனைப் போல நீங்கள் அரை மணி நேரத்தில் எங்களை எல்லாம் அடிமைப் படுத்தி விட்டீர்கள். நீங்களில்லாத கூனியூர் கூன் விழுந்து வளைந்த ஊராகவே இருக்கும், இங்குள்ள எல்லா ஜாதியாரும் உங்களைத் தேடுகிறார்கள். குறிச்சிகள் (பெஞ்சுகள்) தந்த பாலையா பிள்ளையும் இதர கிருஸ்தவர்களும் தங்களைப் புகழாத நாட்களில்லை. மங்கையர்க்கரசியும் எதையோ இழந்ததைப் போல் ஏங்கி இருக்கிறாள். அடிக்கடி, கல்யாணத்தையும் நோயையும் குறிப்பிட்டுப் புலம்புகிறாள். ஆனால் நான் கல்யாணத் தன்று எடுத்த படமொன்றை வாங்கி வைத்திருக்கிறேன். அதனைப் பார்த்து மனம் ஆறிக்கொள்கிறோம். அவசியம் கல்லூரிக்கு வரும்போது இங்கு வர வேண்டும். குறைந்த பக்ஷம் மூன்று நாளாவது என் விருந்தினராயில்லாமல் போனால் நான் இலேசாக விட மாட்டேன்.

இப்போது தங்கள் உடம்பு குணமடைந்திருக்குமல்லவா? சில மாதங்கள் நன்றாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். டாக்டர் நீங்கள் பிழைத்தது மறுபிழைப் பென்கின்றார். அவரும் தங்களைத் தேடுகிறார் என்று இந்த விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

தவறாது பதில் காகிதம் எழுத வேண்டும். இன்னும் 10 நாட்களில் ஆளை எதிர் பார்க்கிறேன். வேணும் ஆண்டவன் துணை.

இங்ஙனம்,
ஆசீர்வதிக்கும்
"பாட்டி" கனகலக்ஷ்மி.

(பி. எஸ்.) வரும்போது தம்பி! தாயாரை அழைத்துக் கொண்டு வர வேண்டும். நான் அடுத்த மாதம் கன்னியா குமரிக்குப் போவேன். அப்போது அவர்களை வீட்டில் கொண்டு விட்டு விடலாம்.

—க. லக்ஷ்மி.

இக் கடிதம் பாட்டி எழுதியதென்பதற்கும் என் மீது மாறாத அன்பு வைத்திருக்கின்றாரென்பதற்கும் என்ன தடை? இதிலிருந்து பாட்டியின் பெயர் கனக லக்ஷ்மி என்று தெரிந்து கொண்டேன். அதோடு மங்கையர்க்கரசி அவருடனேயே உறைந்து வருகின்றாள் என்றும் யூகித்துக் கொண்டேன். அப்பால், அவள் என் படத்தை நோக்கிப் பொழுது போக்குகின்றாள் புலம்புகிறாள் என்றும் அறிந்து கொண்டேன். நல்லது.

பிறகு அடுத்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். இது நன்றாக—நாகரிகமாக நீளமாக—அழகாக எழுதப்பட்டிருந்தது. எழுத்து ஒவ்வொன்றும் முத்துப் போன்றிருந்தன. எழுதியவர் இரண்டு நாட்களாவது வேலை செய்திருப்பாரென்று நினைக்கிறேன். ஆகவே விரைந்து அக் கையெழுத்தைப் பார்த்தேன். அந்தோ! என் அதிரூப ஆசைக்கிழத்தி மங்கையர்க்கரசியின் நாமம் திகழ்ந்த வாறென்! ஆ! என்ன பாக்கியம்! அவளே எனக்கெழுதி விட்டாளே?.... விரைந்து படித்தேன். அக் கடிதத்தை அதில் அடியில் வருமாறிருந்தது.

(தொடரும்)

தமிழரின் விவேகம்

இலங்கையில் சமீபமாக நடந்த ஒரு மகாநாட்டில் டாக்டர் பத்தேந்திரா என்பவர் கூறியதாவது:—"உலகத்திலுள்ள மனித ஜாதிகளில் தமிழருக்குத்தான் அறிவு விசாலமும், அதிக உழைப்பிற்கு ஏற்ற தேக சக்தியும் இருக்கிறது. பரஸ்பர உழைப்பின் கௌரவத்தை அறிந்தவர்கள் தமிழர் தான். எந்தக் கஷ்டத்தையும் பொறுக்கும் சக்தியும், விடாமல் தொடர்ந்து உழைப்பதற்கு ஏற்ற மன வலிமையும் அவர்களிடம் இருப்பதனால்தான் அவர்கள் வெளிநாடுகளில் அதிக சீக்கிரத்தில் குடியேறி விடுகிறார்கள்." இதில் நாம் பெருமை யடித்துக் கொள்ளலாம்; ஆனால் தேசிய வளர்ச்சிக்குப் புறம்பாக, எதிர்ப்பாக இருக்குமாயின் அதைப் பற்றி என்ன சொல்வது.

கலைமான் வினுதல் துறை.


ராய. சொ.

(உரிமை ஆக்கியோனுடையது)

பந்து பயில்இளம் பாவைய
 ரே!யான் பணிப்பதற்கு
முந்தி வருமான்! முனிமதி
 மோகனன் பேர்உரைக்கில்
என்றன் கதுப்பினில் முத்தம்
 இடுமான்! எழில்நிறைமான்!
சிந்தைக் கினிய சிறுமான்!
 உளதோ? சிறுமியரே!

கருங்கயல் நீண்டகட் காரிகை
 யீர்!உங்கள் கண்பொரும்என்
இருங்கண் மணிநிகர், என்னுளங்
 கொண்ட, எனக்கினிய,
அருங்கலை மான்!உங்கள் ஆயத்
 துளதோ? அருள்வடிவப்
பெருங்காந்தி ஆணை! திருவாய்
 மலர்ந்துண்மை பேசுமினே!

"காந்தி கலித்துறை யந்தாதி"



பொதுவுடைமை ஒரு மதமா?

(ரினேல்ட் நீபர் எழுதுவது)

ஹெரால்ட் லாஸ்கி என்ற அரசியல் பேரறிஞர் ரஷ்யாவிலிருந்து எழுதிய கடிதம் 'நேஷன்' என்ற பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது. அதில் "பொதுவுடைமைத் தத்துவமும் மனிதனுக்கு ஏற்படும் ஓர் சமய அனுபவம்தான். இதற்கு உபமானமாகக் கிறிஸ்தவப் பாதிரிகளை எடுத்துக் காட்டியிருந்தேன். அதைவிட இங்கிலாந்தின் உள்நாட்டுச் சண்டைக்குத் தலைவாக இருந்து ஜனநாயக ஆட்சியை ஸ்தாபிக்க முயன்ற கிராம்வெல் என்பவருடைய அயர்ண் ஸைட் என்ற சேனையின் சமய உணர்ச்சிக்குப் பொருந்தி யிருக்கிறது என்று கூறுவது மிகவும் பொருத்தமானது."

இம்மாதிரியான ஒரு தத்துவத்தைப் பொதுவுடைமைக் கட்சியின் பேரில் அதைப்பற்றிப் பரிந்து பேசுபவர்கள் சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது என்று நினைக்கலாம். ஏன் என்றால் பொதுவுடைமைக் கட்சி நாஸ்திகத்தை மதமாகப் பரப்புவதைத்தான் தனது பெரிய இலக்ஷியமாகக் கொண்டிருக்கிறது. ஆனால் இம்மாதிரிப் பொதுவுடைமையும் அடிப்படையாக ஓர் சமய அனுபவம்தான் என்று சொல்லுபவர்களின் பொருள் என்ன? ஒவ்வொரு அரசியல் கொள்கையும் வெற்றிபெற வேண்டுமானால் சமய முறையைக் கடைப் பிடித்தால்தான் வெற்றியடைய முடியுமா?

பொதுவுடைமைத் தத்துவம் சமயத்தை மூடநம்பிக்கைகளில் ஒன்றாகச் சேர்த்து விடுகிறது. இதனால்தான் அதற்கு நாஸ்திகத்தில் ஒரு பிடிப்பு, ஒரு ஆவேசம் ஏற்பட்டிருக்கிறது. உலகத்தில் இருந்துவரும் சமயத் தத்துவத்திற்குப் பதிலாக வாழ்க்கைக்கு ஒரு லோகாயதத் தத்துவத்தைச் சரித்திரத்திலிருந்து எடுத்துக் காட்டுகிறது. அந்த லோகாயத வாதம் சந்தேகாஸ்பதமானதுதான். அது வெறும் லோகாயதம் மட்டுமல்ல. பரமாத்மாவிற்குப் பதிலாக இயற்கையின் சக்தி ஒன்று தர்க்க முறைகளில் அறிந்துகொள்ளக் கூடியபடி இந்த உலகத்தை நடத்துகிறது என்று சொல்லுகிறார்கள். வாழ்க்கைக்கு ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதும், வாழ்க்கையின் அர்த்தத்தை அறிந்துகொள்ளக் கூடியதும் மதம் என்று பொருள்படுமாகில் பொதுவுடைமைத் தத்துவமும் ஒரு சமயம்தான். முதலாளித்வத்தின் அதர்மத்தைச் சரித்திர வளர்ச்சியில் கண்டு அதிலிருந்து உலகத்தை விடுதலைசெய்ய முயற்சிக்கிறார்கள் பொதுவுடைமைக் காரர்கள்.

பொதுவுடைமை வெறும் சமயம் மட்டுமல்ல. அது தர்மத்திற்கும் நியாய உணர்ச்சிக்கும் கட்டுப்பட்ட ஒரு சமயம் என்றே சொல்லலாம். அதற்கு ஒரு இலக்ஷியம் இருக்கிறது. ஏகபோக உரிமைகள் உள்ள ஜாதிகள் அற்ற ஒரு சமூகம் தோன்றவேண்டும் என்று ஆசைப்படுகிறது. அதற்குத் தொழிலாளர்களின் சக்தியைக்கொண்டு புரட்சி வழிகளிலே, அந்தச் சரித்திர தர்மத்தை நிலைபெறச் செய்யவேண்டும் என்று முயற்சிக்கிறது. தங்கள் கொள்கைகளை விடாப்பிடியாகப் பிடித்திருப்பதிலிருந்து பொதுவுடைமைக்கும் சமயத்திற்கும் உள்ள தொடர்பு தெரியவரும். நாம் எங்கும் காணக்கூடிய சமயங்களில் எல்லாம் இந்தக் கொள்கைகள் இப்படி விடாப் பிடியாகப் பிடிக்கப்பட்டிருப்பதின் காரணம் அவை அறிவு வளர்ச்சிக்குப் பொருந்தாமலிருப்பதே! இது சமயத்தின் க்ஷீணத்தினால் ஏற்படும் கோளாறு. உண்மைச் சமயத்திற்கு இவ்விதமான கோழைத்தனம் கிடையாது. நாம் எந்த விஷயத்தை ஆராயப் புகுந்தாலும் முதலில் ஆரம்பமாக ஏற்படுத்திக் கொள்ளும் விதிகள் போல் அறிவு சாஸ்திரத்திற்கும் உண்டு, சமயத்திற்கும் உண்டு. வாழ்க்கையின் அர்த்தத்தை அறிய முயலும் சமயத்தின் ஆரம்ப விதிகளைப்பற்றி விஞ்ஞான சாஸ்திரம் ஒன்றும் திட்டமாகக் கூறமுடியாது. பக்தனுடைய ஆவேசத்தினால் தான் முதற்படியான ஆதிகாரணம் விரிந்து பெருகி நாம் காணும் உண்மைக்கு மாறான கொள்கைகளை ஒப்புக்கொள்ளும்படி செய்கின்றது. இது சமயத்திற்கு மட்டும் அல்ல. பொதுவுடைமைத் தத்துவத்திலும் இப்படித்தான்.

இப்பொழுது புதிதாக ரஷ்யாவில் வளர்ந்துவரும் தத்துவ சாஸ்திரங்கள் பொதுவுடைமைக் கட்சியும் ஒரு சமயம் என்பதை வலியுறுத்துகின்றன. லோகாயத தத்துவத்தில் இப்பொழுது இரண்டு கட்சிகள் போராடிக் கொண்டு இருக்கின்றன. ஒன்று லோகாயதத்தைச் சற்று உயர்ந்தபடிக்குக் கொண்டுவரும் ஒரு தத்துவம்; அதுதான் பொதுவுடைமை ஒரு சமய அனுபவம் என்பதை ஒப்புக் கொள்ளுகிறது. யந்திரம் போல் காரண காரியங்களால் பிணிக்கப்பட்டது இந்த வாழ்க்கை என்ற சித்தாந்தத்தைக் கூறுவது மற்றொன்று. இந்த இரண்டு கட்சிகளில் முதல் சொன்ன கட்சியினர் தான் வெற்றி யடைந்திருக்கின்றனர். புரட்சியை உண்டு பண்ணக் கூடிய சக்தியும் ஆவேசமும் இரண்டாவது சொல்லப் பட்ட கட்சியால் உண்டுபண்ண முடியாது என்று கூறுகிறார்கள். அது உண்மைதான். வெறும் உணர்ச்சியற்ற தத்துவம் உத்சாகத்தையும் ஆவேசத்தையும் கொடுக்கக் கூடிய இலக்ஷியமாக ஒரு நாளும் இருக்க முடியாது.


பொதுவுடைமைத் தத்துவம் ஒரு சமயம் என்று சொன்னால், அது சமயம் என்ற விதத்திலோ, அல்லது அரசியல் தத்துவம் என்ற ஹோதாவிலோ செய்யக் கூடிய நன்மைகள் என்ன என்று ஆராயத் தொடங்கி விடக் கூடாது. பொதுவுடைமைத் தத்துவம் ஒரு கீழ்த்தரமான சமயம். ஏன் என்றால் அது ஒரு அரசியல் சமயம். சரித்திரப் போக்காகக் கவனித்தால் இது பிற்போக்கான சமயம். பழைய காலத்தில் மனிதக் கூட்டத்திற்குத் தலைமையாக இருந்த அரசனே மதத் தலைவனாக இருந்தான். அரசியலும் சமயமும் பிணிக்கப்பட்டு இருந்தது. இதைப்போல்தான் பொதுவுடைமைத் தத்துவமும். உதாரணமாக ஜெர்மன் நாஜிகளை எடுத்துக் கொள்ளலாம். அவர்களுடைய ரத்த வெறி சமயப் பித்துப் பிடித்தவனுடையது போல் இருக்கிறது. ஒரு கட்சிக்கோ ஒரு கூட்டத்திற்கோ (பொதுவுடைமைத்தத்துவத்தில் தொழிலாளர்கள்) ஆக்கவும் அழிக்கவும் பொருந்திய ஏகேச்சாதிகார அமானுஷ்ய சக்தியைக் கொடுத்து விட்டு, வேறு கொள்கைகளையுடைய மற்றக் கட்சிகளுக்கு எதிரியாக்கி, அவைகளைத் தீமையின் வடிவ

மாக்கி விடுவது, சமூகத்தில், சமயம் ஒன்றே உண்டு பண்ணக்கூடிய ஒரு குரூர மனப்பான்மை. இதைப் பொது வுடைமைக் கட்சியிலும் இம்மாதிரி யான மத உணர்ச்சி எதிரிகளைக் கொல்லவும் அவர்களைப் பூண்டுடன் வெறுக்கவும் அனுமதிக்கிறது. ஏனென்றால் அவர்களுக்கு எல்லா எதிரிகளும் தீமையின் அம்சங்கள். பாபத்தை ஒழிக்க முயலும் பக்தனு டைய ஆவேசத்தில், சமூகம், வெற்றி யடைந்த கட்சியைப் போற்றுகிறது.

இந்த மாதிரியான ஒரு கொள்கை யைத் தழுவுகிறவனுக்கு அந்த மதம் ஒரு அதிகாரத்தைக் கொடுக்கிறது. இதில் சந்தேகமில்லை. இதனால் தான் முகமதிய மதத்தின் ஆரம்ப காலத்தில் அதிகமாக ராஜஸகுணம் மேலிட்டிருந்தது. அது ஒரு படைவீரனின் மதமாக இருந்தது. லாஸ்கி, கிராம்வெல் படை வீரர்களைப் பற்றிக் கூறுவதும் இதைத்தான். கிராம் வெல், படை வீரர்களில் ஒரு பெரிய மேதை. கடவுள் தன் துணையாக இருக் கிறார் என்ற ஆவேசத்தினால்தான் அவனால் தனது வெற்றிகளை எல் லாம் பெற முடிந்தது. இந்த மாதிரி ஒரு பக்தி, ஒரு நினைப்பு இல்லா விட்டால், அயர்லாந்தில் அவன் மனச்சாட்சிக்கு விரோதமான அட்டூழி யங்களைச் செய்தே இருக்க மாட்டான். இம்மாதிரியான மதத்தில் இருக்கும் குணம் இதுதான். ஆனால் ஐரிஷ்காரரு டைய சரித்திரத்தைப் பொறுத்த மட் டில் அவன் அசுரனுடைய ஒரு அம்சம் என்று தான் சொல்ல வேண்டும். எதிர்க் கட்சி எல்லாம் தீமையின் அவ தாரம் என்று கொண்டு அரை குறை யான உண்மைகளுக்கும் அரசியல் கொள்கைகளுக்கும் தவறற்ற உண்மை என்ற பெயரைச் சூடும் ஒவ்வொருவ னும் அசுரன்தான். ஹிட்லர் ஆதிக்கத் தில் இருக்கும் இந்தச் சமயத்தின் குண ந்தான் அவர்களை யூதரிடம் இவ்வளவு குரூரமாகவும் அசுரத்தனமாகவும் நட ந்து கொள்ளச் செய்கிறது. பொது உடைமைக் காரர்களுக்கும் ஹிட்லர் கட்சிக்கும் ஒரே வித்தியாசம். பொது வுடைமைக்காரர்கள் முதலாளித்துவமே பேயின் அம்சம் என்கிறார்கள். அதற்குப் பதிலாக ஹிட்லர் கட்சி இந்த யூதர்கள்தான் அப்படி என்று சொல்லுகிறார்கள்.

அரசியல் கட்சிகளின் இம்மாதிரி யான சமயத்தின் குணந்தான் அதன் பலத்திற்கும் அதன் அசுரத்தனமான அபாயத்திற்கும் காரணம் என்று தெரிகிறது. இதுதான் அரசியல் சண் டைகளை மிருகத்தனமாக்கி விடுகிறது. ஆத்மாவின் பெயராலும் சமயத்தின் பெயராலும் ஆதரிக்கப்பட்ட கட்சிகள் தங்களைத் தெய்வப் பிறவிகளாகவும் தர் மத்தை நிலைநிறுத்த வந்த பெரிய தலை வர்களாகவும் எண்ணிக் கொள்ளச் செய்துவிடுகிறதால், இம்மாதிரி நிலையி லிருக்கும் இவர்களை மிருகத்தைவிடக் கேடுகெட்ட ஸ்திதிக்குக் கொண்டுவந்து விடுகின்றன.

இம்மாதிரியாக அரைகுறை உண்மை களை அழியாத தர்மத்தின் நிலைக்குக் கொண்டுவரும் இந்தத் தீமையை விலக்க ஒரே வழிதான் உண்டு. இந்த உலகத்தின் அழியும் கொள்கைகளுக் கெல்லாம் கடந்த ஒரு மூலசக்தியை வணங்குவதனால் ஒருவாறு செய்ய



ஜெர்மனியிலிருக்கும் ஹான்ஸ்டக் என்பவர், ந்யூரம்பர்க் மோட்டார் பந்தயத்திற்குச் செல்லும் காட்சி. —S.P.B.

முடியும். இதனால்தான் கிறிஸ்தவ மதத்திற்கு அரசியல் கொள்கைகளுடன் சேர்ந்து ஐக்கியப்பட முடியவில்லை. தீவிர வாதிகள் இந்தக் காரணத்தினாலேயே கிறிஸ்தவ மதம் முதலாளித்துவத்திற்கும் அதனால் வரும் தீமைகளுக்கும் இடம் கொடுக்கிறது என்ற தப்பிதமான அபிப்பிராயத்திற்கு வந்து விடுகிறார்கள். சமயம் என்ற ஒரு கட்டுப்பாடு இல்லாவிட்டால் மனிதவர்க்கம் ஒரு பெரிய இலக்ஷியத்தை நோக்கி மேலோங்கி வளரமுடியாது. இந்தக் காரியத்தை மற்ற எந்தச்சமூகக் கட்டுப்பாடோ அல்லது சந்தேகாஸ்பதமான எந்தத் தத்துவமோ சாதிக்க முடியாது. கொஞ்சகாலத்திற்கு வேண்டுமானால் இம்மாதிரியான எதிர்மறைக் கொள்கைகள், கண்டதை ஆராய்ச்சி யில்லாமல் வணங்கும் சமயப் பைத்தியக்காரத்தனத்தைத் தடுத்துக் கொண்டு இருக்கமுடியும். இதே காரணத்தினால்தான் ஜெர்மனியில் நாஜிகளின் சமய வெறிக்கு மதம் முட்டுக்கொடுக்க முடிந்தது. இதனால்தான், தத்துவ வுலகிலிருக்கும் பரந்த கொள்கைகள் அங்கு அதற்குத் தோற்றுப் போயிற்று. மனிதன் பலவீனத்தை அறிந்து, அன்பையும் சகோதரத்துவத்தையும் அடிப்படையாகக்கொண்ட சமயந்தான் மனிதனது குரூரத்தையும் இரக்க மின்மையையும் எதிர்த்து அவனது அசுரகுணத்தைப் போக்க, வல்லமையுடையது என்று தெரிகிறது.

மனிதனது இரக்கமின்மையே அரசியலின் அதிகாரத்திற்குப் பலமாக இருக்குமானால் அதைத்தடுக்க வழி என்ன என்ற கேள்வி பிறக்கிறது. இரக்க மின்மையை மட்டும் தொலைத்துவிட்டு அதிகாரத்தைமட்டும் காப்பாற்ற முடியுமா? முழுவதும் காப்பாற்ற முடியாது. வாழ்க்கையின் ஆதர்சமாகவும், அசைக்க முடியாத தர்மமாகவும் இருந்தாலன்றி மனிதன் ஒருகாலும் தனது முழு சக்தியையும் ஆற்றலையும் எந்த அரசியல் கொள்கைக்கும் தத்தம் செய்துவிடமாட்டான். பொதுவுடைமைத் தத்துவம் ஒரு பித்தமான சமயம் மட்டுமல்ல; அரசியலிலும் சில குருட்டு நம்பிக்கைகளை வைத்துக்கொண்டு இருக்கிறது. எதிர்க்கட்சிக்கு இடமின்றிச்சில கொள்கைகளுக்காகக் கண்கூடாகப் பார்க்கும் உண்மைகளுக்கு வித்தியாசமான பொருள் எழுதி வைத்திருக்கிறது. இதனால்தான் பொதுவுடைமையின் கொள்கைகளை அரை குறையாக ஆதரிப்பவர்களையும் எதிரிகளாக்கிக் கொள்ளுகிறது. அரசியல் நிதானம் அரசியல் ஆவேசத்தைக் குறைத்துவிடலாம். ஆனால் நேர்மையான தர்மத்திற்கும் அறிவிற்கும் ஒத்த ஒரு ராஜீய ஞானத்தைக் கொடுக்கும். பொதுவுடைமையின் சமய குணங்களைப் போக்குவதினால் அதன் அரசியல் சக்தி குறையலாம்; அதனால் ஒரு கேடும் விளைந்துவிடாது.

சில கிறிஸ்துவ தத்துவ சாஸ்திரிகள் அரைகுறை உண்மைகள் எல்லாம் மாயைகள் அதில் மனதைச் செலுத்தக் கூடாது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அது தவறு. சமூக உண்மைகள் என்றும் அழியாத நித்திய வஸ்துவல்ல. இருந்தாலும் அவைகளுக்கும் ஒரு ஸ்தானம் உண்டு. தொழிலாளர்தான் உலகத்திற்கு ஒரு பெரிய தர்மத்தை நிலை நிறுத்த முயலுகிறார்கள் என்று பொதுவுடைமைக் காரர்கள் சொல்லிக்கொண்டு இருப்பதை மறுக்கலாம். முதலாளித்துவத்தின் கொடுமைகளையும் அதர்மங்களையும் அவர்கள் அனுபவித்துத்தான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறார்கள். பொருள்களை உற்பத்தி செய்யும் சாதனங்களைத் தங்கள் வசமாக்கிக் கொண்டால், முதலாளித்துவத்தின் அணிவேர் முறிந்து விடுகிறது. அதனால் சிலர் கையில் சிக்கிக்கொண்டிருந்த முதல் பலருடைய ஆட்சியில் வந்து விடுகிறது. அவர்கள் தொழிலாளிகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருப்பது வெறும் உண்மை. இந்தப் பெரிய காரியத்தைச் சாதிக்கும் பொழுது அரசியல் அதிகாரம் அவர்களுக்குள் வரத்தான் செய்யும். இம்மாதிரியான சமயங்களில்தான், மகத்தான பொறுப்புக்கும் சமூகப் பித்தத்திற்கும் வித்தியாச மில்லாதபடி போய் விடுகிறது. இனி வரும் நாகரிகம் இம்மாதிரியான காலங்களில் ஏற்படும் சமயப் பைத்தியக்காரத்தனத்தை ஏற்றுக் கொள்வதையோ அல்லது அதற்குப் பதிலாக அறிவுக்கு ஒத்த சமூக உண்மைகளைத் தெளிந்த அறிவினால் சிந்தித்து அதன் மகத்தான பொறுப்பை ஏந்தும் குணத்தையோ பொறுத்துத்தான் வளர வேண்டியிருக்கிறது.


கதரே கதிமோட்சம்!

சிறுகூடற்பட்டி பாரதமாதா வாசகசாலை


இவ்வாசகசாலையின் விசேடக் கூட்டமொன்று சென்ற வியாழனன்று (16-8-34) மாலை வாசகசாலையின் தலைவர் திரு. அரு. நா. நாராயணஞ் செட்டியார் தலைமையிற் கூடியது. அவ்வமயம் திரு. இராம. அண்ணாமலையின் பொக்கிஷதார் பதவி இராஜினாமா வாசிக்கப்பெற்று ஏற்றுக்கொள்ளப் பெற்றது. புதிய பொக்கிஷதாராக திரு. கரு. வீர. கருப்பன் செட்டியார் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

காலியான நிர்வாசக சபை அங்கத்தினர் பதவிக்குத் திருவாளர்கள் ஆத. மு. அண்ணாமலைச் செட்டியாரும், வயி. சுப. சண்முகமும் பொறுக்கி எடுக்கப் பெற்றார்கள்.

மலாய் நாடேகும் திருவாளர்கள் இராம. அண்ணாமலை, வெ. சுப்பிரமணியன், வயி. கருப்பையா மூவருக்கும் பிரிவுபசாரங் கூறப்பெற்று வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்ததெனக் காரியதரிசி கி. சு. வினைதீர்த்தான் அறிவிக்கிறார்.



ஸ்விட்ஜர்லாந்தில் கௌத்திரியாவிற்குப் பக்கத்தில் இருக்கும் லுகானோ ஏரியின் ஓர் அழகிய காட்சி. —N. I. A.




கன்னியாகுமரியில் கடலோரத்தில் இருக்கும் குமரியம்மன் கோவிலின் கிழக்கு மதில்; கடலிலிருந்து வெகு கஷ்டத்துடன் எடுக்கப்பட்ட படம்.

—P. P. B.




குமரியில் [illegible] சந்திக்கும் காட்சி. முன் பக்கத்தில் திருவாங்கூர் சமஸ்தான விருந்தினர்கள் தங்க, இப்பொழுது [illegible] ஸர். ஹபிபுல்லாவால் திறந்துவைக்கப்பட்ட ரெஸிடென்ஸி.


—P.P.B.



எல்பா நதியில் ஜலம் அதிகமாகக் குறைந்துவிட்டதால், நீராவிப் படகுகள் தரைதட்டி மிதக்கும் காட்சி. —S. P. B.



ஒபர் அமெர்காவில் நூறு வருஷத்திற்கொரு தடவை அவ்வூர் வாசிகள் இந்த அரங்கில் கிறிஸ்துவின் சரிதத்தை நடிப்பார்கள்.
இந்த வருஷம் மே மாதம் 21உ-யிலிருந்து செப்டம்பர் 23உ-வரை நடக்கும். —N. I. A.



பெர்லினில் குதிரைப் பந்தயத்தை ஜெர்மன் வைஸ் சான்ஸிலர் வான்பேப்பன் கவனித்துக்கொண்டிருக்கிறார். —S.P.B.



பவேரியா ஆல்ப்ஸ் பிரதேசத்தில் இயற்கை யன்னையின் எழில் விளங்கப் பனி வரைகளால் சூழப்பட்ட கார்மிஷ்-பார்டன்கிர்ஷன் என்ற ஒரு அழகான ஸ்தலம். —N. I. A.

ரஷ்யாவின் கல்வி வளர்ச்சி

(பியட்ரிஸ் கிங் எழுதுவது)

பொதுவுடைமைக் கல்வி என்றால் சிறுவர்களின் உள்ளத்தில் அரசியல் கொள்கைகளையும் முதலாளித்துவத்தின் தீமைகளையும் பற்றிச் சொல்லி வைப்பது என்று நினைத்தால் அதைப் போன்ற தவறான அபிப்பிராயம் வேறு கிடையாது.

இரண்டு வருஷங்களுக்கு முன் யாரும் இம்மாதிரியான கேள்வியைக் கேட்டிருக்க மாட்டார்கள். முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்திலும் அரசியல் விஷயங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப் படுகின்றன. ஆனால் முதலாளித்துவத்தின் ஆதிக்கம் நிலை பெற்று வெகு காலமாகி விட்டதால் அது நமக்கு அப்படிப் படுவதில்லை. கல்வி இலாகாவின் வைஸ் கமிஸார் அரசியல் அறிவு மட்டுப் போதாது என்று கண்டு கலையும் அறிவும் விருத்தியடைவதற்குத் தகுந்த மார்க்கங்களைச் செய்து கொண்டு இருக்கிறார். கல்வி விஷயங்களில் ஏற்பட்ட புரட்சி வெளிக்குப் படாடோபமாகத் தெரியாமலிருந்திருக்கலாம். ஆனால் அது ரஷ்ய சமூகத்தின் உள்ளத்தை மாற்றி விட்டது. ரஷ்யாவின் வளர்ச்சிக்குக் காரணமான தலைவர்கள் சாஸ்திரமும் கலையும் அறிவுக்கு ஒத்ததாக வளர வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். சோவியத் சமூகத்தின் அன்னிய நாட்டு நண்பர்கள், சிற்சில சமயங்களில் தாங்கள் ஒரு சிற்பத்தையோ ஒரு கட்டிடத்தையோ வான மளாவப் புகழ்வது மல்லாமல் இதற்கு முன்பும் கிடையாது பின்பும் வாரது என்று ஆவேசத்துடன் பேசுவதைக் கவனித்திருக்கலாம். இதிலிருந்து ஸோவியத்தில் சற்று கலை வளத்தைப் பற்றிக் கவனிக்கிறார்கள் என்று தெரியவில்லையா?

முதல் ஐந்து வருஷத் திட்டத்தின் பயனாக உயிர் வாழ்க்கைக்கு உரிய வசதிகளைக் கொடுக்கமுடிந்தது; அதனால் வாழ்க்கையின் கஷ்டங்கள் சற்றுக் குறைந்து விட்டது. ரஷ்யப் பாதுகாப்புக்கு ஏற்ற படைகள் தயாராகி விட்டது. இனிப் பயமில்லாமல், தொந்திரவு இல்லாமல் சோவியத் சமுதாயம் முன்னேற வசதி ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது வாலிபர்களே அரசியல் துறைகளில் பல அம்சங்களை நடத்துவதற்குத் திறம் படைத்து விட்டார்கள். இந்த ஊக்கத்தைப்போல் உலகத்தில் வேறு எந்த இடத்திலும் காணமுடியாது. இந்த வேலையில் தொழிலாளிகள், பண்டிதர்கள், மாணவர்கள், இன்னும் பல துறைகளில் இருப்பவர்கள் எல்லாம் ஈடுபட்டு இருக்கிறார்கள். இந்தச் சேவையில் இவர்களுக்கு இருக்கும் ஆவேசமும் பக்தியும் கரைகடந்தது.

அரசியலில் அதிகாரிகள் முன்பு போல் அவ்வளவு கடுமையாக இருக்கவில்லை என்பதை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். லாஸ்கி என்ற அரசியல் பேரறிஞரை மாஸ்கோவில் சட்ட



பேய்ரிக்த் ரீஷில் ஜெர்மன் சான்ஸிலர் ஹிட்லர் கொடுக்கும் காட்சி. —S. P. B.

கலாசாலையில் பேச அனுமதித்தார்கள். ரஷ்யாவில் இவருடைய பெயரைக் கேட்டாலே இதற்குமுன் வெறுப்படைவார்கள். ஆனல் இப்பொழுது அவரது கொள்கைகளை, அவரது அபிப்பிராயங்களைச் சொல்ல அனுமதித்தார்கள். சரித்திரத்தையும், பூகோள சாஸ்திரத்தையும் விஞகைப் பெருக்கிக்கொண்டு இருக்கும் அவைகளுக்குப் புறம்பான விஷயங்களை எடுத்து விடுவதற்காக ஸ்டாலினும் மொல்டோவும் தாங்களே கையெழுத்திட்ட ஒரு கட்டளையை அனுப்பி இருக்கிறார்கள். முன்பு வகுப்புக்களில் தொங்கவிட்டிருந்த முதலாளித்துவத்திற்கு எதிர்ப் பிரசாரமான படங்கள் எல்லாம் எடுக்கப்பட்டு விட்டன. ஆனல் அதற்குப் பதிலாக மிருகங்கள் புஷ்பங்கள் இவைகளுடைய அழகான படங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. அடிக்கடி படங்கள் மாற்றப்படுகின்றன. மேடே (May-day) என்ற திருநாளுக்கு அன்னிய நாட்டிலிருந்து எத்தனையோ விருந்தினர் வந்திருந்தனர். அங்கிருக்கும் பாட்டுகளும், கூத்துகளும், வேறு அரசியல் கொள்கைகளையுடைய விருந்தினர் மனத்தைப் புண்படுத்தாதபடி இருந்தன.

இப்பொழுது குழந்தைகளின் பொம்மைகள் முதற்கொண்டு அழகாகவும் கலையுணர்ச்சியுடனும் இருக்கவேண்டும் என்று அதற்கென்றே ஒரு தனிச் சங்கம் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது. இதில் அவர்களுடைய நோக்கம் உன்னதமானது. ஒவ்வொரு குழந்தையும் பாடவோ, படம் எழுதவோ அல்லது நடிக்கவோ தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஸோவியத் அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதிலும் இப்பொழுது எண்ணங்களும் கொள்கைகளும் மாறிக் கொண்டே வருகிறது. முன்பு இருந்ததைப் போல் புரட்சிப் பாட்டுகள் இப்பொழுது பாடப்படுவது இல்லை.

இப்பொழுது குழந்தைகள் போடும் படங்களைக் கவனித்தால், அவைகள் எத்தனை துறைகளில் விருத்தியடைந்து வந்திருக்கின்றன என்பது தெரிய வரும். மாஸ்கோவில் குழந்தைகளின் கலைவிருத்தியாவதற்கென்றே ஒரு தனிப் பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கு மே மாதத்தில் எல்லாத் தேசங்களிலுள்ள குழந்தைகளும் வரைந்த படங்களை வைத்து ஒரு சித்திரக் காட்சி நடந்தது. அதில் ரஷ்யாவிற்கு ஏற்பட்ட பகுதியில் ஒரு ஆயிரம் படங்கள் வந்திருந்தன. அவைகளில் சில அரசியல் விஷயங்களைப் பொறுத்த படமாக இருந்தன. அதைத் திறந்துவைத்த பூபனவ் என்ற கல்வி இலாகாவின் தலைவர் அந்தப் படங்களை அரசியல் படங்கள் என்று மதிக்காமல் சித்திரம் என்ற ஹோதாவில் அதைப் பற்றிப் பேசினர்.

லெனின் கிராடில் குழந்தைகளுக்கென்றே ஒரு நாடகக்கொட்டகைஇருக்கிறது. அங்கு பலவிதமாக குழந்தையின் அறிவையும் கலையுணர்ச்சியும் வளர்க்கக் கூடிய நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. அவைகளில் இப்படிப்பட்டவைதான் நடிக்கப்படவேண்டும் என்ற சட்டம் கிடையாது. கொஞ்ச காலத்திற்கு முன் பழுத்த சாம்ராஜ்ய வாதியான கிப்ளிங்கின் (Kipling) கதைகள்கூட நடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அங்கு பலதிறப்பட்ட, குழந்தைகளுக்கு இன்பமூட்டக்கூடிய, கதைகள் நடிக்கப்படுகின்றன. ஸோவியத் ஆரம்பித்த பொழுது இருந்த மும்முரமான அரசியல் பிடிவாதம் இப்பொழுது வெகுவாகக் குறைந்துவிட்டது. இதனல் அரசியல் கொள்கைகளுக்காகத் தடையுற்றிருந்த கலை இப்பொழுது மேலோங்கி வளர ஆரம்பித்து விட்டது.

மேலும் பழையன என்று அதற்காக ஒரு விஷயத்தை அவமதிக்கும் மனப்பான்மையை மாற்றி வருகிறார்கள். குழந்தைகளிடத்தில் இதை நாம் பழக்கிவிட்டால்தான் சமூகத்தின் வளர்ச்சிக்கு வெகு பயன்படும் என்று நினைக்கிறார்கள். இதனல் ஸோவியத்தில் அரசியல் பிரசாரம் கிடையாது என்று நினைத்துவிடக்கூடாது. அறிவுத்துறையில் முழுச் சுதந்திரம் இருக்கிறதென்றும் நினைத்துவிடக்கூடாது. ஆனல் ஸோவியத் வளருகிறமாதிரியைக் கவனித்தால் அதில் சுதந்திரம் இன்னும் அதிகமாக வளரும் என்று நினைக்க இடம் இருக்கிறது.

ஜனங்களின் நாணயம்

இப்பொழுது ஒரு ரூபாய் நோட்டுகள் கிடையா. அவைகளைப் பரிவர்த்தனத்திலிருந்து அரசாங்கம் நிறுத்திவிட்டது.

ஆனல் சேலம் ஜில்லாவில் சிறு கிராமச்சந்தைகளில் இம்மாதிரி ஒரு ரூபாய் மதிப்புள்ள சிறு நோட்டு ஒன்று கொடுத்து வாங்கப்படுவதை இப்பொழுது காணலாம். எல்லாரும் அதை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

அது கவர்மென்ட் நோட்டு அல்ல. சேலம் ஜில்லா அர்ப்பன் பாங்கின் நோட்டு. உண்மையில் அது ஒரு புது மாதிரியான பாங்கின் 1 ரூபாய்ச் செக்குத்தான். இந்தக் கூட்டுறவு பாங்கி இதனல் கடனில் உழலும் ஏழை வியவசாயிகளின் கஷ்டத்தை வெகு சீக்கிரத்தில் நிவர்த்திக்கஎதிர்பார்க்கிறது.

வைட்டமின்


(உடலுக்கு உரம் அளிக்கும் உணவுச் சத்து)

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

உணவைப்பற்றிய நவீன ஆராய்ச்சியில் நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் பொருள் வைட்டமின் என்பது. இந்த வைட்டமின் என்பது நாம் உண்ணும் உணவுகளில் கலந்திருக்கிறது. இது மனிதர் உடல் நலம் பெற்று நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு அவசியமானது. வைட்டமின் இல்லாத அல்லது வைட்டமின் போக்கப்பட்ட ஆகாரத்தைச் சாப்பிடுவதனாலேயே பல நோய்கள் உண்டாகின்றன. வைட்டமின் உள்ள ஆகாரங்களை உண்பதினால் அநேக நோய்களை வாராதபடி தடுத்துக் கொள்ளலாம். வைட்டமின் என்னும் இந்த உணவுச் சத்தைப்பற்றிய அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானது. ஏனென்றால் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கும் நோய் வாராமல் தடுப்பதற்கும், இவ் வைட்டமின் விஷயத்தைப்பற்றிய அறிவு இன்றியமையாதது. வைட்டமின் எத்தனை விதம் என்றும் எந்தெந்த ஆகாரத்தில் எந்தெந்த வைட்டமின் இருக்கிறதென்றும் இன்னின்ன வைட்டமின் இன்னின்ன வியாதிகளைத் தீர்க்கும் என்றும் இங்கு விளக்குவோம்.

வைட்டமின் என்னும் சத்தானது உணவுப் பொருள்களில் கலந்திருக்கிறதானாலும் அச்சத்தினைத் தனியாகப் பிரித்தெடுக்க முடியாது. இவ் வைட்டமின் ஆங்கிலத்தில் (Vitamin A, B, C, D and E.) என்று சொல்லப்படுகிறது. இதனைத் தமிழில் சொல்ல வேண்டுமானால், தமிழ் உயிர் எழுத்துக்களின் பெயரை இதற்குச் சூட்டி அ வைட்டமின், இ வைட்டமின், உ வைட்டமின், எ வைட்டமின், ஐ வைட்டமின் என்று அழைக்கலாம்.

Vitamin A. (அ வைட்டமின்). இது குழந்தைகளின் தேக வளர்ச்சிக்கும் உடலில் உண்டாகும் தேய்வை நிறப்புவதற்கும் (Growth and repair of the body) இன்றியமையாதது. குழந்தைகளுக்கு (வளரும் பிள்ளைகளுக்கு) இது அவசியமா யிருப்பது போலவே பெரியவர்களாக வளர்ந்தவர்களுக்கும் தேகத்தில் உண்டாகக்கூடிய அன்றாடத் தேய்வையும் கழிவையும் நிரப்புவதற்கு அவசியமானது. அன்றியும் இரத்தத்தைச் சரியான முறையில் வைப்பதற்கும் இந்த வைட்டமின் உதவி செய்கிறது. முக்கியமாக, தொத்து நோய்க் கிருமிகளைத் தேகத்தில் புக ஒட்டாதபடி தடுக்கிறது. இந்த வைட்டமின் யாருடைய உடம்பில் போதுமான அளவு இல்லையோ அவர்கள் உடம்பில் தொத்து வியாதிக் கிருமிகள் எளிதில் பரவுகின்றன. இந்த வைட்டமின் யார் தேகத்தில் இல்லையோ அவர்களுக்குக் கண் எரிச்சல், காது, மூக்கு, தொண்டை, நுரையீரல், தீனிப்பை, குடல் இவைகளில் அழலை அல்லது எரிச்சல் உண்டாகும்; மூத்திரப்பையில் கல் உண்டாகும். உடம்பின் தோலை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கும் இந்த வைட்டமின் உதவி புரிகிறது. நமது நாட்டில் குழந்தைகளின் மரணம் அதிகமா யிருப்பதற்குரிய காரணங்களில் ஒன்று இந்த வைட்டமின் உள்ள ஆகாரங்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்காமலிருப்பதாகும். ஆகையால், குழந்தைகள் சௌக்கியமா யிருப்பதற்கும் அவர்கள் (நறுக்கையா யிராமல்) வளர்வதற்கும் இந்த வைட்டமின் சத்துள்ள ஆகாரத்தைக் கர்ப்பிணிகளா யிருக்கும் ஸ்திரீகளும் குழந்தைகளுக்குப் பாலூட்டிப் போஷிக்கும் தாய்மார்களுக்கும் போதுமான அளவு அருந்தவேண்டும் இந்த அ வைட்டமின் (Vitamin A) அதிகச் சூடு பட்டால் அழியும் தன்மையது. ஆகவே, இந்த வைட்டமின் உள்ள ஆகாரப் பொருள்களை நெடுநேரம் வேக வைப்பதும் அதிகமாக உஷ்ணப்படுத்துவதும்கூடாது. இந்த வைட்டமின் உள்ள ஆகாரத்தைப் பச்சையாகவே (சமைக்காமலே) உண்பது மிகவும் நல்லது.



பூனாவிலிருக்கும் நௌரோஜிவாடியாக் காலேஜில் ஸர். ஸி. வி. ராமன் பேச வந்தபொழுது எடுக்கப்பட்ட படம். —S.P.B.

இந்த அ வைட்டமின் (Vitamin A) உள்ள ஆகாரப் பொருள்கள் இன்னின்னவை என்று சொல்லுமுன் இந்த வைட்டமின் எப்படி உண்டாகிறது என்பதைச் சொல்லுவோம். இந்த வைட்டமினைச் சூரிய வெளிச்சத்திலிருந்து இலைகளின் மூலமாக மரம்

செடி, கொடிகள் கிரகிக்கின்றன. ஆகவே, பசுமையான இலைகள், கீரைகளில் இந்த வைட்டமின் அதிகமாக இருக்கிறது. இலை தழைகளைத் தின்று ஜீவிக்கும் ஆடு, மாடு, மான், முயல், குதிரை முதலிய பிராணிகளின் கொழுப்புகளிலும், ஈரல், குண்டிக்காய் (Kidney), மாமிசம் முதலிய உறுப்புகளிலும் இந்த வைட்டமின் சேருகிறது. அன்றியும், புல் இலை தழைகளைத் தின்கிறபடியால் ஆடு, எருமை, பசு முதலிய பிராணிகளின் பாலிலும் இந்த வைட்டமின் காணப்படுகிறது. ஆனால், பாலை அதிகச் சூடுள்ள அனலில் நன்றாகக் காய்ச்சி விட்டால் அப்பாலிலுள்ள இந்த வைட்டமின் அழிந்துவிடுகிறது என்பதை வாசகர் மறந்துவிடக் கூடாது. அன்றியும், காய்ந்த வைக்கோல், சருகுகளைத் தின்னும் பசுக்களின் பாலில் இந்த வைட்டமினை எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் பசுமையான இலைதழைகளில் மட்டும்தான் இந்த வைட்டமின் உண்டு. பச்சை இலை தழைகளைத் தின்னும் பசுக்களின் பாலில்தான் இந்த வைட்டமின் ஏராளமாகக் கிடைக்கும் என்பதை உணர வேண்டும்.

இன்னும் இந்த வைட்டமின் காட் லிவர் ஆயில் (Cod Liver Oil) என்னும் மீன் எண்ணெயில் அதிகமாய் உண்டு. இந்த மீன் எண்ணெயில் இந்த வைட்டமின் அதிகமாயிருக்கும் காரணம் என்னவென்றால் சொல்லுவோம். சமுத்திரத்தில் பாசிகளும், கொடிகளும் நீர்மேல் மிதந்து வளர்கின்றன. இந்தப் பாசிக் கொடிகளின் இலைகள் இந்த வைட்டமினைச் சூரிய வெளிச்சத்திலிருந்து கிரகித்துக்கொள்கின்றன. பிறகு இந்த இலைகளைச் சிறுசிறு மீன்கள் தின்று ஜீவிக்கிறபடியால், அச்சிறு மீன்களின் உடலில் இந்த வைட்டமின் சேர்ந்து விடுகிறது. பிறகு, இச்சிறு மீன்களைக் காட் (Cod) என்னும் ஒரு வகைப் பெரிய மீன்கள் விழுங்கி உயிர் வாழ்கின்றன. இவ்விதம் பாசிகளிலிருந்து சிறு மீன்களுக்கும் அச்சிறு மீன்களிலிருந்து காட் என்னும் மீனுக்கும் இந்த வைட்டமின் போய்ச் சேர்கிறது. ஆனால், மீன் மிருகம் இவைகளால் இந்த வைட்டமினைச் சூரிய வெளிச்சத்திலிருந்து நேரே கிரகிக்க முடியாது. பசுமையான இலை தழைகளுக்கு மட்டுந்தான் இதைக் கிரகிக்கும் சக்தி உண்டு. ஆகவே தாவரங்களில் இருந்து தான் மற்றப் பிராணிகள் இந்த வைட்டமினைப் பெறுகின்றன.

இனி இந்த வைட்டமின் அதிகமாக உள்ள உணவுப் பொருள்கள் இன்னின்னவை என்பதைச் சொல்வோம்:—காய்ச்சப்படாத பால், மீன் எண்ணெய் (Cod Liver Oil), காய்ச்சாத பாலிலிருந்து எடுக்கும் வெண்ணெய் (மிஷின் வெண்ணெய்), பசலைக்கீரை(Spinach), முட்டைகோஸ் (Cabbage) மஞ்சள் முள்ளங்கி (Carrots), சீமைத் தக்காளி (Tomatoes), பச்சை நிறமுள்ள கீரைகள், முதலியன. இந்த அ வைட்டமின் சொற்ப சூட்டில் அழிந்து விடுகிறதில்லையானாலும், அதிகச் சூடு பிடிக்கச் செய்தாலும், அல்லது விட்டுவிட்டுப் பல தடவைகளில் சூடு அடையச் செய்தாலும், நிச்சயமாக அழித்து விடுகிறது என்பதை வாசகர்கள் கவனிப்பாராக. அன்றியும் மிருகங்களின் ஈரல், கொழுப்பு, குண்டிக்காய், மாமிசம் முதலிய உறுப்புகளில் இந்த வைட்டமின் உண்டு. ஆனால், மாமிசம் உண்போர் அந்த மாமிசத்தைச் சமைத்து விடுகிறபடியால் அம் மாமிசத்திலுள்ள இந்த வைட்டமின் அழிந்து விடுகிறது. அது போலவே இலை கீரைகளில் உள்ள இந்த வைட்டமின், அவைகளைச் சமைத்து விடுவதால் அழிந்துவிடுகிறது. இந்த அ வைட்டமின் கடலை, பயறு முதலிய பருப்பு வகைகளில் கிடையாது. ஆனால், அப்பருப்பு வகைகளை ஊற வைத்து முளைக்கச் செய்தால், அவ்விதம் முளைவிடப்பட்ட தானிய வகைகளில் இந்த வைட்டமின் உண்டாய் விடுகிறது. ஆகையால், பச்சைப் பயறு, கடலை முதலியவைகளை முளைக்கவிட்டு அவற்றைப் பச்சையாகவே சாப்பிடுவது நல்லது. கீரை வகைகளில் பசலைக் கீரையைச் சமைக்காமலே பச்சையாய்ச் சாப்பிடலாம். மிஷின் வெண்ணெயையும் காய்ச்சாதபாலையும் உண்ணலாம். இவைகளும் முடியாமற்போனால், எல்லோரும் இந்த வைட்டமினைச் சுலபமாக அடையக் கூடிய வழி ஒன்று உண்டு. அது என்னவென்றால் தக்காளிப் பழத்தை (Tomato)ச் சமைக்காமல் தின்பதுதான். இப்பழம் விலை குறைவும் சிறு புளிப்பும் உள்ளது. இப்பழத்தை நமது வீடுகளிலேயே சுலபமாகப் பயிர் செய்துக்கொள்ளலாம். இந்தத் தக்காளிப் பழத்தில் சிறு புளிப்புச் சுவை இருப்பதால் அதைப் பச்சையாக(சமைக்காமல்) உண்பது சிலருக்குப் பிடிக்காது. அப்படிப்பட்டவர்கள் அதன் சாற்றைப் பிழிந்து அதனுடன் நாட்டுச் சர்க்கரை (பழுப்புச் சர்க்கரை; வெள்ளைச் சர்க்கரையல்ல) சேர்த்துக் கலந்து சாப்பிட்டால் ஷர்பத் போல ருசியாயிருக்கும். இந்தத் தக்காளிப் பழத்தைத் தினந்தோறும் நாம் அவசியம் உண்ணவேண்டும். இந்தப் பழத்தைச் சாறுபிழிந்து புட்டிகளில் அடைத்து ஐரோப்பிய வர்த்தகர்கள் விற்கிறார்கள். ஐரோப்பியர்கள் இதை வாங்கிக் கோடைகாலத்தில் தேகாரோக்கியத்திற்காகக் குடிப்பது உண்டு. இந்தச் சீமைத் தக்காளிப் பழத்தைத் தினந்தோறும் சாப்பிட வேண்டும் என்று ஏன் சொல்லுகிறேன் என்றால் இப்பழத்தில் அ வைட்டமின் (Vitamin A) மட்டுமல்ல, இ, உ, (B and C Vitamins)வைட்டமின்களும் உண்டு. அன்றியும் விலையும் அதிகமல்ல.



இப்பொழுது புதிதாக நாகரிக முறையாகக் கருதப்படும் உடை தலையணி, காலர், க்ளவ் எல்லாம் ஒரே விதமான கலரில் செய்து போட்டுக்கொள்வது.

—S.P.B.

மற்ற வைட்டமின்களைப் பற்றிப் பின்னர் எழுதுவேன்.

—

உலக அரசியலின் போக்கு

"பார்லிமெண்டரி அமைப்புத்தான் ஜனங்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்குமாம்"

ஏ. ஜி. கார்டினர் என்ற பேரறிஞர் எழுதுகிறார்.

ஐரோப்பிய சமுதாயங்கள் ஒரு குழப்பத்திலிருந்து மற்றொன்றுக்குத் தான் சென்று கொண்டு இருக்கின்றன. ஜெர்மெனியில் ஹிட்லரின் ரத்த வெறியின் பயங்கரமான, கோரமான நிகழ்ச்சிகள் முடிந்தது தான் தாமதம். அதற்குள் ஆஸ்திரியாவில் டால்பஸ் சம்பவம் நிகழ்ந்து விட்டது. இப்பொழுது இருக்கும் நிலைமையைப்பற்றிச் சற்று யோசிப்பவர்களுக்கு ஐரோப்பிய நாகரிகம், பழையபடி 10 நூற்றாண்டு வரை இருந்த முரட்டுத்தனமான நிலைமைக்கு வந்து விடுமோ என்ற சந்தேகம் தோன்றுவது நிச்சயம்.

ஐரோப்பாவின் மத்தியப் பிரதேசங்கள் இரண்டு அரசியல் கொள்ளைக் கூட்டங்களுக்குச் சண்டையிடும் போர்க்களமாகி விட்டன. நாஜிக்கட்சியிலிருந்த எதிராளிகளையும், ரீமையும் (Roehm) அன்று ஹிட்லர் தொலைத்தார். அதற்குப் பிறகு இன்று நாஜிக் கூட்டம் ஆஸ்திரியாவில் டால்பஸைத் தொலைத்து விட்டது.

இந்த விரசமான இரத்த வெறிபிடித்த நாடகம் எப்பொழுது விழும் என்று சொல்ல முடியவில்லை. நாஜிக்கட்சியின் தெய்வம் போல் அதிகாரத்திற்கு வந்த ஹிட்லர் இப்பொழுது சேனையின் உதவியால் அந்தக் கட்சிக்கே எதிரியாக ஆகி அதன் தலைவர்களைக் கொன்று கட்சியைச் சிதற அடித்து விட்டார்.

நான் சென்ற வருஷம் ஆஸ்திரியாவிற்குச் சென்றிருந்த பொழுது ஹிட்லர், டால்பஸ்ஸைத் தொலைக்க நாஜிக்கட்சிச் சதியாலோசனையின் மூல சக்தியாக இருந்தார். இன்று ஹிட்லருடைய ஏவுதல் பேரில் தான் டால்பஸ் தொலைந்தாரோ அல்லது ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் பிணக்கு ஏற்படும்படியாக, இப்பொழுது அவருக்கு எதிரியாக இருக்கும், நாஜிக் கட்சியினரின் வேலையோ தெரியவில்லை. இந்தக் களேபாரத்தில் கடைசியாக யார் தலைமைக்கு வந்து விடுவார்களோ தெரியவில்லை.

இருபது வருஷங்களுக்கு முன் ஆஸ்திரியாதான் உலக சமாதானத்தில் தீயைவைத்தது. அந்த மகாயுத்தத்தில் தோற்றவர்களை விட அதன் கஷ்டங்களையும் கொடுமைகளையும் நன்றாக அனுபவித்தது ஆஸ்திரியாதான். சமாதான உடன்படிக்கையினால் சின்னா பின்னமாக்கப்பட்டும், அன்னியநாட்டுச் சுங்க வரிகளால் பொருளாதார வளர்ச்சி கெட்டு, தறிகெட்ட அரசியல் கொள்ளைக் கூட்டத்தில் சிக்கியும் இன்று ஆஸ்திரியா க்ஷீணமடைந்து வருவதைக் கண் கூடாகக் காண்கிறோம். ஹிட்லர் ஆதிக்கத்தினால் ஜெர்மன் ரீஷ் (Reich) தொலைந்து, சமுதாயத்தினாலும் மதத்தினாலும் இத்துடன் சேர்ந்திருக்க வேண்டிய, பவேரியாவுடன் கூடி, மத்திய ஐரோப்பிய கூட்டுறவு ஒன்றை ஸ்தாபிக்கலாம்.

ஆனால் இனி வரப்போவதைக்குறித்து நாம் ஆலோசித்துக் கொண்டு இருப்பதில் பயன் இல்லை. நான் இப்பொழுது எழுதப் புகுந்த விஷயம் அது அல்ல. நமது பிரிட்டிஷ் அரசியல் அமைப்பினால் நமக்கு (பிரிட்டிஷாருக்கு) எவ்வளவு நன்மை என்பதைக் குறித்துத்தான் எழுதப் புகுந்தது. மத்திய ஐரோப்பாவில் இருந்துவரும் இந்த அரசியல் கொள்ளைக் கூட்டத்தின் ஆதிக்கம், நமது அதிர்ஷ்டத்தை நன்றாக எடுத்துக் காட்டுகிறது! ரைன் நதிக்குக் கிழக்கே இருக்கும் ஒவ்வொரு நாடும் நான் சொல்வதற்கு அத்தாட்சியாக இருக்கிறது. இந்த மாதிரியான அரசியல் கொள்ளைக் கூட்டங்கள் ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் விட ரஷ்யாவிலும் இத்தாலியாவிலும் அதிக வெற்றி யடைந்திருக்கின்றன. ஏனென்றால் அங்கு கொடூரமானதும், புச்சாதாபம் அற்றதுமான இரகஸிய வழிகள் கையாளப்பட்டன.

பிரான்ஸ் தேசம் இந்தக் கொள்ளைக் கூட்டத்தின் ஆதிக்கத்தை வளரவிடாமல் தீவிரமாகப் போராடிக்கொண்டு இருக்கிறது. ஆனால் அது வெற்றியடையுமோ என்று நிச்சயமாகக் கூற முடியாது. பிப்ரவரி மாதத்தில் பாரிஸ் நகரம் புரட்சியில் மூழ்கிவிடுமோ என்று சந்தேகிக்க வேண்டி யிருந்தது. மான்ஷியர் டூமோர்க் பார்லிமெண்டரி அரசியல் அமைப்பை, அப்பொழுது அங்கு காப்பாற்றினர். ஸ்டாவிஸ்கி சம்பவம் போல் மற்றொன்று ஏற்பட்டால் ஜன நாயக ஆட்சி பிரான்ஸில் தொலைந்து விடும். சுதந்தரத்தை இழந்த பிறகு தான் சுதந்திரத்தின் அருமை தெரியும்,

அன்னியர்கள் நமது அதிர்ஷ்டத்தை, அதன் அருமையை நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன் ஒரு ஜெர்மன் பத்திரிகாசிரியரைச் சந்திக்க நேர்ந்தது. மாஸ்கோ நகரத்தில் (ரஷ்யா) ஒரு பத்திரிகையின் சார்பாக இருந்து வந்தார். ஸோவியத் அரசாங்கம் அவரை நாடு கடத்திவிட்டது. பிறகு அமெரிக்காவிற்குச் சென்று ஒரு பத்திரிகையில் இருந்து வந்தார்.

பிறகு தனது சொந்த நாடாகிய ஜெர்மனிக்கு வந்தபொழுது தனது பத்திரிகை நாஜிக் கட்சியின் கையில் சிக்கியதால் தனது பிழைப்பே போய்விட்டது என்று அறிந்தார்.

அவர்மூன்று தேசங்களில் இருந்து வரும் குழப்பங்களைச் சொல்லி வரும் பொழுது "இங்கிருக்கும் நிலைமையைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன" வென்று கேட்டேன்.

அதற்கு அவர் பின்வருமாறு கூறினார். "உங்களைப்போன்ற அதிர்ஷ்டசாலிகள் கிடையாது. மத்திய ஐரோப்பாவில் சுதந்திரத்தைப் போக்கிய அரசியல் குழப்பங்களுக்கு உங்கள் பார்லிமெண்ட் தப்பித்துக்கொண்டது. அந்த எதிர்ப்பில் வெற்றிபெற்றது உங்கள் பார்லிமெண்ட்தான்" என்றார்.

பால்ட்வின் அன்று ஆக்ஸ்போர்ட் பிபுவின் சிலையை வெஸ்ட் மினிஸ்டரில் திறந்து வைக்கும்பொழுது இதைத்தான் விரிவாக எடுத்துச்சொன்னார். ஆஸ்க்வித்தைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம்; ஆனால் பார்லிமெண்

டரி அரசியலின் சுதந்திரத்திற்காகப் போராடிய, பிம் (Pym) ஹம்டன் (Hampden) போன்றவர் ஆஸ்க்கித் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த மாதிரியான ஜனநாயக அரசியல் அமைப்பு நமது இரத்தத்தில் ஊறியிருக்கிறது. இதனல்தான் மற்ற ஐரோப்பிய நாடுகளின் சீர்கேடுகள் இங்கிலாந்தைப் பிடிக்கவில்லை. ஜனநாயகத்திற்குக் கட்டுப்பட்ட முடியரசும், சுதந்திர அரசியல் அமைப்பும்தான் இங்கு எதேச்சாதிகாரிகளுக்கு இடந்தாவில்லை.

நாம் ஜனநாயக அரசியலைப் போல் சிறந்தது கிடையாது என்று உலகத்திற்கு நிரூபித்து விட்டோம்.

இதுதான் சுதந்திரத்தைக் காப்பாற்றும்; உயிரையும் நியாயத்தையும் பேணும்; இதுதான் நெருக்கடியான கலங்களில் நிலைபெற்று நிற்கும்; இது தான் மனித வளர்ச்சியை மேலோங்கச் செய்யும்.

எதேச்சாதிகாரிகள் தலை எடுப்பார்கள் என்ற பயம் இங்கு கிடையாது. எனென்றால், ரஷ்யாவிலும் ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் நடந்த அட்டூழியங்களும் கொடுமைகளும் பொது ஜனங்களுக்குப் பொதுவுடைமை என்ருல் பேஸிஸ்ட் என்ருல் என்னவென்று காண்பித்து அவர்களுக்கு அதை எதிர்க்கும்படி ஒரு மனப்பான்மையை உண்டு பண்ணி விட்டது.

பார்லிமெண்டரி அரசியல் அமைப்புத்தான், சுதந்திரத்தை வளர்க்கும் என்று அவர்களுக்குத் தெரிந்து விட்டது.

வியாபாரம் முன்னேற வழி

சர்வ தேச சங்கத்திலிருந்து உலக வியாபாரத்தைப் பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள். அவ்வறிக்கை 1933ல் நடந்த வியாபாரத்தைப் பற்றி எதிர்பார்க்கக்கூடாத செய்திகளை வெளியிட்டிருக்கிறது.

1929-ற்கு அப்புறம் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறுகிறது. ஆனல் அது நூற்றிற்கு 2 வீதந்தான். பொருளாதார மந்தத்தின் கஷ்டமான காலங்கள் போய் விட்டன என்று கூறுகிறது.

உலக வியாபாரத்தில் நூற்றிற்கு 3 விகிதம் இந்தியாவினுடையது. அதற்கு மாருகப்பிரிட்டனுக்கு1933-ல் 13.59-ம் அதற்கு முந்திய வருஷத்தில் 13.05-ம் 1929 வருஷத்தில் 13% இருந்தது. இதனல் பிரிட்டனுடைய நிலைமை நான்கு வருஷத்திற்கு முன் இருந்ததைவிட நன்ருகத்தான் இருக்கிறது. இந்தியாவிற்கு ஒரே ஒரு நம்பிக்கைதான் இருக்கிறது. கைத்தொழில் உற்பத்திப் பொருள்களைவிட விவசாயப் பொருள்கள் நல்ல விலைக்குச் சென்றிருக்கின்றன.


ஜப்பானைப் பற்றி ஒரு எதிர்பாராத விஷயத்தை யறிவிக்கிறது. ஜப்பான் எவ்வளவு ஆரவாரத்துடன் போட்டியிட்டும் உலக வியாபாரத்தில் 3.09% தான் 1933 வருஷத்தில் செய்திருக்கிறது. 1929-ல் 2.89% தான். வளர்ச்சி மிகக் குறைவானது.

சௌபாக்கிய வாழ்வு

("அல்லி")

லக்ஷக்கணக்கான மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் கால் வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். சாப்பாட்டுக்கே வழியில்லாமல் எத்தனையோ பேர் பட்டினி கிடக்கிறார்களென்பதும் மறுக்க முடியாத உண்மை. இது நியாயமானதுதானா? என்னவோ அபேதவாதம் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பெயரைப் பார்த்தாலே பயமாயிருக்கிறது. அது என்ன வாதம் என்று புரியவில்லை. இதை ஆங்கிலத்தில் "சோஷியலிஸம்" (Socialism) என்று சொல்லுகிறார்கள். இந்த அபேதவாதமென்றால் என்ன? இதனால் ஏதாவது பிரயோஜனமுண்டா என்று பார்ப்போம். அபேதவாதம் வெற்றியடைந்தால் மக்கள் யாவரும் ஒருவித கஷ்டமுமின்றிச் சௌபாக்கியமாக வாழலாம். ஆகவே, இதற்குச் சௌபாக்கிய வாழ்வு என்றே பெயரிட்டழைக்கலாம் என்று தோன்றுகிறது.

வேலை செய்யமாட்டேன். ஆனால் எனக்குச் சாப்பாடு மாத்திரம் வேளா வேளைகளில் கொடுத்துவிடவேண்டும் என்று ஒரு மனிதனும் சொல்லமாட்டான். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு துறையில் வேலை செய்யும் ஆற்றல் இருக்கும். ஓர் குறிப்பிட்ட தொழிலில் நிபுணனென்று கருதப்படுபவன் கூட வேலையில்லாமல் கஷ்டப்படுகிறான். ஏன்? ஒருவனிடம் பணம் இருக்கிறது. மற்றொருவனிடம் தொழில் செய்யும் திறமை இருக்கிறது. பணம் படைத்தவன் (முதலாளி) வேலை செய்யத்தெரிந்தவனை அமர்த்திக்கொண்டால் தானே, வேலையாளுக்கு ஊதியம் கிடைக்கும்? முதலாளிக்கு வேலையாட்களுக்குத் தகுந்த சம்பளம் கொடுப்பதென்றால், தகப்பனார் தேடி வைத்த ஆஸ்திபோய் விட்டதுபோல் தோன்றும். முதலாளிக்கு லாபத்தில்தான் கண். அதிகப்படியாகச் சம்பளம் கொடுப்பதால் தன் லாபத்தில் குறைந்துவிடுகிறதே என்று மூக்கால் அழுகிறான். சம்பளமும் அதிகம் கொடுக்கக்கூடாது. தான் செய்யும் தொழிலில் தனக்குப் பெருவாரியான லாபமும் கிடைக்கவேண்டும். முதலாளிக்கு இத்தகைய மனப்பான்மை இருந்தால் ஏழைத் தொழிலாளிகளின் கதி என்ன? அவர்கள் வாயில் மண்ணைப் போட்டுக்கொள்வதா? தொழிலாளியைக் கொள்ளையடிப்பதுதான் முதலாளித்வத்தின் அடிப்படையான அம்சம். மிகுந்த தாராளமனதுடைய முதலாளிகளும் இருக்கிறார்களென்று வாதிக்கலாம். தாராளம் என்னவேண்டியிருக்கிறது? யார் வீட்டுச் சொத்துக்கொள்ளை போகிறது. நாள் முழுதும் நெற்றி



சென்னை கோக்லே ஹாலில் ஒய். எம். ஐ. ஏ. சங்கத்தின் திறப்பு விழாவின் பொழுது ஹான். நீதிபதி கில்பர்ட் ஸ்டோன் தலைமை வகித்தார். அப்பொழுது எடுக்கப்பட்ட படம். —P.P.B.

வியர்வை நிலத்தில் சிந்த, ரத்தக் கண்ணீர் வடித்து, உழைப்பவன் ஏழைத் தொழிலாளி. அவனுக்குக் கிடைப்பதென்ன. பத்தணாவோ பனிரெண்டணாவோ! திண்டுபோட்ட நாற்காலிகளில் சாய்ந்துகொண்டு, மின்சார விசிறிகளின் கீழ் ஆனந்தமாய் சுக நித்திரை செய்பவர்கள் முதலாளிகள். இவ் வேழைத்தொழிலாளியினுடைய ஒரு மாதச் சம்பளம் இவர்களுக்கு ஒருநாள் பெட்ரோல் செலவு. இவர்கள் தான் தொழிலாளிகளின் கஷ்டங்களைக் கவனிப்பவர்களாம். இதெல்லாம் வீண்பேச்சு. முதலாளி சுகவாழ்வின் ருசியை அறிந்தவன். அடக்கியாளுதலின் இருமாப்பை உணர்ந்தவன். செல்வத்திலும், திமிரிலும், அகம்பாவத்திலும் ஊறிக்கிடக்கும் ஒரு கூட்டத்தினரை ஏழைகளுக்குதவிசெய் என்று சொன்னால் நடக்கக் கூடிய காரியமா? அது ஒரு நாளுமில்லை. இந்தியாவைத் திரும்பி எங்களிடமே கொடுத்துவிடு என்று நாம் கேட்பதால், பிரிட்டிஷார் உடனே கொடுத்து விடுகிறார்களா? அதே மாதிரி, உங்கள் செல்வத்தை யெல்லாம் பங்கு போட்டுக் கொடு என்று சொன்னால் இவர்கள் சம்மதிப்பார்களா? இது ஒருக்காலத்திலும் நடக்கக் கூடாத காரியம். வேறென்னதான் செய்வது?

சமூகம் திருத்தியமைக்கப்பட வேண்டும். ஒரு தனிப்பட்ட கூட்டத்தினரின் வாழ்விற்காகவும், சௌக்யத்திற்காகவும் செல்வம் என்னும் மனப்பான்மை ஒழிய வேண்டும். மனிதனாய்ப் பிறந்தவன் யாரும் சமம். நம்மைப் போல் ஏழைக்கும், பசி, தாகம், உண்டு

என்பதை முதலாளிகள் உணர வேண்டும். வீணில் அவனவன் கர்மபலனை அவனவன் அனுபவித்தே தீருவான் என்ற வெட்டி வேதாந்தப் பேச்சு அடக்கப்பட வேண்டும். கர்மமாவது, கத்தரிக்காயாவது? இப் பிறப்பில் அவனவன் உழைப்பிற் கேற்ற பலன் அவனவனுக்குக் கிடைக்கவில்லையென்றால், அடுத்த ஜன்மத்தில் சொர்க்க போகம் எதற்கு? அடுத்த ஜன்மத்தில் ராஜனாய்ப் பிறக்கலாமென்று சொன்னால் வயிறு கேட்கிறதா? பசி தீர்ந்துவிடுமா? சரி. முதலாளிகள் தங்கள் கடமையை உணரச் செய்ய வேண்டும். அவர்கள் தாங்களாக விட்டுக் கொடுக்கப் போவதில்லை. அதற்கென்ன செய்வது? இரண்டே வழிதானுண்டு. ஒன்று பலாத்காரப்புரட்சி. அது நமக்குத் தேவையில்லை. "தனி ஒருவனுக்குண விலை யெனில் ஜெகத்தினை யழித்திடுவோம்" என்றார் பாரதியார். பாரதியாருடைய "ஜெகத்தினை அழிக்கும்" வீரவேதாந்தம் நமக்குத் தேவை யில்லை. ஜெகத்தினை யழித்து நாம் சந்தோஷப்படுவதை விட, நம்மை நாமே அழித்துக் கொண்டு விடலாம். மற்றொரு வழி இருக்கிறது. அஹிம்சா முறையில் கிடைக்கக் கூடிய சௌபாக்ய வாழ்வு (அபேத வாதம்) தான் நமக்கு வேண்டும். இது அனுபோக சாத்தியமானது தானா? இது வகையில் பலாத்காரமின்றிப் பெற்றதுண்டா? இது நியாயமான கேள்விதான். நாம் எப்படி இதைப் பலாத்காரமின்றி அடைவது என்பதைப் பற்றி மற்றொரு சமயம் பேசிக்கொள்வோம்.

ஸோவியத்தின் நன்கொடை

மங்கோலிய ரிபப்ளிக்கின் பத்தாவது பிறப்பு விழாவின் பொழுது, ஸோவியத் அரசாங்கம் ஆகாய விமானங்களையும் பஸ்களையும் நன்கொடையாக அளித்தது.

மங்கோலிய ரிபப்ளிக் ஸோவியத் உதவியைக் கொண்டுதான் நிர்மாணிக்கப்பட்டது. அதிலிருந்து ஸோவியத்தின் கட்டிலும் உதவியிலுந்தான் இருந்து வருகிறது.

ஸோவியத் யூனியனைப்போல் தான் அரசாங்கம் அமைந்திருக்கிறது. அதன் தலைநகருக்கு மூர்தி உர்கா என்று பெயர். இப்பொழுது உலான் பாட்டார் என்று அழைக்கப்படுகிறது.

ஆங்கில அன்பருக்கு

மகாத்மாவின் பதில்

ஒரு ஆங்கில அன்பர் பின் வரும் செய்தியை அனுப்புகிறார். "எங்களைப் போன்ற ஆங்கிலேயர்களுக்குத் தங்களுடைய உபவாஸத்தின் பொருள் விளங்கவில்லை. இதற்கு முன்பு தாங்கள் இருந்துவந்த உபவாஸங்களைப் பொறுக்க முடியவில்லை. இனியும் இப்படிச் செய்தால் தங்களை யாரும் நம்பமாட்டார்கள்."



பம்பாய் சர்வகலாசாலை கான்வக்கேஷனில் பீ.ஏ. பட்டம் பெற்ற பெண்மணிகள்.

—S.P.B.

எனது கீர்த்திக்குப் பங்கம் வந்துவிடுமோ என்ற பயத்தில் இந்த அன்பர் எனக்கு எழுதியிருக்கிறார் என்று அறிவேன். உபவாஸத்தை புரொட்டஸ்டான்ட் மதத்தினர் வெறுக்கிறார்கள் என்பதும் நான் அறிவேன். எனது ஆங்கில நண்பர்களின் நன்மதிப்பில் இருக்க எனக்கு அத்யந்த ஆசை இருக்கிறது. இருந்தாலும் இந்த விஷயத்தில் நான் ஒன்றும் செய்ய முடியாது. இந்த உபவாஸங்களுக்கு நான் காரணம் அல்ல. அதைப் பொழுதுபோக்காகக் கருதி நடத்தவும் இல்லை. கீர்த்தியை விரும்பி நான் உடலை வருத்திக்கொள்ளவில்லை. உபவாசத்தினால் வரும் பசி முதலிய தேக இம்சைகளைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டாலும், நான் கஷ்டப்படவில்லை என்று யாரும் நினைத்துக்கொள்ள வேண்டாம். உலகத்தின் பெரியதொரு சக்தியால் இந்த உபவாஸங்கள் சுமத்தப்படுகின்றன. அதைச் செய்து முடிக்கப்போதிய பலத்தையும் அந்தச் சக்திதான் தருகிறது. எனக்கு இம்மாதிரியான பணிகளைக் கொடாமலிருக்கும்படி அந்த சக்தியை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளத்தான் முடியும். எனது பிரார்த்தனை வீணாகிவிட்டால், என்னைப் பைத்தியக்காரன் என்று எல்லாரும் சொன்ன போதிலும், உபவாஸத்தை மேற்கொள்ளாமல் இருக்க முடியாது. "உலகத்தின் கீர்த்திக்காக ஆத்மாவை இழந்து விட்டால் என்ன பிரயோஜனம்?"

செலவில்லாக் கலியாணம்

போர்த்துக்கல் தேசத்தில் கலியாணத்தின் விகிதம் வருடா வருடம் குறைந்துகொண்டே வருகிறது. அதற்காக அங்கு இருக்கும் ரிஜிஸ்டர் கலியாணத்தின் செலவுத் தொகையைப் பாதியாகக் குறைத்திருக்கிறார்கள். அதுவும் கொடுக்க வழியில்லாத தம்பதிகளுக்குக் கலியாணம் செலவுத் தொகையில்லாமலே நடத்தப்பட்டு வருகிறது.

ஹிட்லரும் முசோலினியும்

உலக சமாதானத்தின் எதிரிகள்

(திரு. ஸ்ரெயின்லோ என்பவர் 'பெடரேட்டட் நியூஸ்' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் எழுதியதின் சாரம்.)

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு அதாவது முஸோலினி இத்தாலியாவில் அதிகாரத்திற்கு வருமுன் பேஸிஸம் (Facism) என்றால் என்ன வென்று யாருக்கும் தெரியாது. பதவிக்கு வரும்பொழுது தொழிலாளிகளின் நிலைமையைச் சீர்திருத்துவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது பொதுஜனங்கள் நம்பினார்கள். பிறகுதான் பேஸிஸம் தொழிலாளிகளின் பெரிய எதிரி என்று தெரிந்தது. உண்மையில் தொழிலாளர் சங்கங்கள்தாம் இத்தாலியாவில் முதல் முதலாக அழிக்கப்பட்டன. கருஞ் சட்டைக்காரர்கள் சங்கங்களை ஈவிரக்க மின்றி அழித்தது மல்லாமல் அவர்கள் தலைவர்களைச் சிறையிலிட்டும் கொலை செய்தும் தொலைத்தார்கள்.

ஜெர்மனியில் ஹிட்லருடைய செஞ் சட்டைக்காரர்களுடைய ஆதிக்கம் வர ஆரம்பித்தபொழுது ஜெர்மன் தொழிலாளர்கள் தங்கள் இத்தாலிய சகோதரர்களுக்கு நேர்ந்த கதியை மனதில் வைத்திருந்து நாஜிகளின் ஆதிக்கத்தை முதலிலேயே வேறுக்கத் தங்கள் முழு சக்தியுடனும் போராடுவார்கள் என்று நினைக்க இடமிருந்தது. ஆனால் அவர்கள் அதை நினைவில் வைக்கவில்லை. பலர் அந்தப் பழைய பொய்களை ஹிட்லரிடம் மறுபடியும் கேட்டார்கள். இருக்கும் நிலைமையை மாற்ற முடியாது என்று மன முடைந்த பலர், அதைக் கேட்பதற்கும் திறனற்று இருந்தார்கள். நாஜிகளை முறியடிக்க அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. தொழில் வித்தியாசங்களும் அரசியல் கொள்கை வித்தியாசங்களும், இந்தப் பொது எதிரியைத் தகர்க்க முடியாது பிரித்து விட்டது. முன்பு எத்தனையோ தடவை அனுபவித்திருந்தும், ஹிட்லர் தொழிலாளிகளின் எதிரி என்பதை அவர்கள் நினைக்கவில்லை.

இதனால் ஜெர்மன் தொழிலாளிகள் தங்கள் தப்பிதற்குப் போதுமானபடி அனுபவித்து விட்டார்கள். அனுபவத்தினால் முன்னேறத் தெரியாதவர்கள், கஷ்டத்திலும் துன்பத்திலும் தான் அந்த உண்மையை அறிய வேண்டும். தவறு யாரிடமாயினும் இப்பொழுது தொழிலாளர்கள் அங்கங்கள் சட்டவிரோதமான சங்கங்களாக ஆக்கிக்கிடக்கின்றன. தொழிலாளர்கள் இந்தத் தவறை எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் இனிச் செய்யக்கூடாது. எப்பொழுது பேஸிஸம் தலை எடுக்கிறதோ அப்பொழுதே அவர்களை வளர விடாதபடி நசித்து விடவேண்டும். பேஸிஸத்தின் மிருகத்தனமான வழிகளைப் பற்றியும், அதனுடைய பயனற்ற தன்மையைப் பற்றியும் இன்னும் யாரும் நம்பவில்லையானால் பின்வரும் உண்மையான விபரங்களைச் சற்று கவனிக்கவும். பிராங்க் நாக்ஸ் என்பவர் முஸோலினியின் ஏதேச்சாதிகாரத்தைப் பற்றி பின் வருமாறு கூறுகிறார்.

பேஸிஸத்தின் மிருகத்தன்மை

பேஸிஸம் ஜனநாய ஆட்சியின் சின்னங்களை யெல்லாம் தொலைத்து விட்டது. அரசாங்கமே முஸோலினிதான். கொள்கைகளைச் சொல்வதற்கு வாக்குச் சுதந்திரம், பத்திரிகையில் எழுதுவற்குச் சுதந்திரம், பொதுஜன சட்டசபையினுள்ளும் பேச்சுச் சுதந்திரம், குற்றவாளிகள் என்று கருதப்படுவோர் மனுச் செய்துக் கொள்ள உரிமை,— இவைகள் எல்லாம் முஸோலினி ஆதிக்கத்தில் கிடையா. தங்கள் குறைகளை நிவர்த்தி செய்துக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் சங்கங்கள் அங்கு கிடையா. இதற்குப் பதிலாக தொழிலாளர் கூலிகளையும், செய்யும் வேலையையும் பற்றி மொத்தமாக முதலாளிகளுடன் ஒப்பந்தம் பேசி முடிவு கட்டுவதற்கு அரசாங்கத்தில் ஒரு தனி இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் கட்டளையை எதிர்க்கவோ அதனுடன் தங்கள் குறைகளைச்சொல்லவோ தொழிலாளருக்கு உரிமை கிடையாது. தொழிலாளியின் குறைகளை எடுத்துச் சொல்லுவதற்காக ஏற்பட்ட இந்த இலாகாவில் இருக்கும் அங்கத்தினர்களைத் தேர்ந்து எடுக்கும் உரிமை இவர்களுக்குக் கிடையாது. ஏதாவது பிரச்னைகளைக் குறித்து அந்த இலாகா வரும் முடிவுகளை ஆராயவோ அல்லது மாற்றவோ அவனுக்கு உரிமை கிடையாது. தொழில் முறையில் இருக்கும் ஊழல்களையோ குறைகளையோ பற்றி எழும் வாதங்களையும் சண்டைகளையும் தீர்த்து வைக்கவோ, அல்லது அதற்கு நியாயம் வழங்கவோ, ஒரு பஞ்சாயத்தை ஏற்படுத்தவோ, இந்த இலாகாதான் செய்ய வேண்டும்.

இந்த மாதிரியான நிலைமையில் தொழிலாளர்கள் ஒற்றுமை குலைந்து கதிகெட்டுத்தான் போவார்கள். தங்கள் நிலைமையைச் சீர்ப்படுத்திக் கொள்ள வேலை நிறுத்தம் செய்வதற்கு மட்டும் உரிமை இருக்கிறது. ஆனால் அரசாங்கம் முதலாளியின் உரிமைகளைக் காப்பதற்குத் தான் இருக்கிறது. உலகத்தில் எங்கும் அப்படித்தான். ஆனால் இத்தாலியாவில் தொழிலாளிகளை அமுக்கி வைப்பதற்குக் கேவலமான ஏதேச்சாதிகார முறைகளைக் கையாளுகிறார்கள். இதை எதிர்த்துப் போராட, தொழிலாளிக்கு அங்கு சக்தியே கிடையாது. அது அவனால் முடியாத காரியம்.

இத்தாலிய பேஸிஸத்தில் தொழிலாளியின் அடிமைத்தனத்தைப் பற்றிச் சொன்னதுபோதும். இந்தப் பன்னிரண்டு வருஷங்களாக இருந்த இந்த அரசாங்கத்தினால் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றத்தைச் சற்றுக் கவனிப்போம். பொருளாதார நெருக்கடியை நீக்கிவிடுவதாகவும், வேலை இல்லாமையை ஒழித்து விடுவதாகவும், நாடு சுபிக்ஷமாகும்படி விருத்தி செய்துவிடுவதாகவும் முஸோலினி கூறிக்கொண்டு இருந்தாரே, அது எவ்வளவு தூரம் நிறைவேற்றது? இதற்குப் பிரதி யுத்தரமாக 1934 மே 26-ல் முஸோலினி நிகழ்த்திய அவர் பிரசங்கமே கூறட்டும்.

"1930 திற்குப் பிறகு அரசிறைக் கணக்கு விகிதத்தில் 12 பில்லியன் லயர்கள் குறைந்துவிட்டது. வருகிற வருஷக் கணக்கில் 3 பில்லியன் லயர்கள் அதிகமாகப் போகும்போல் தெரிகிறது.

இதற்கு இதுவரை வழி கண்டுபிடிக்கப்படவில்லை."

"இப்பொழுது இத்தாலியாவின் பொது நன்மைக்கு ஊறாக இருக்கும் வியாபார நிலைமையை மாற்றத் தற்பொழுது ஒரு வழியும் தெரியவில்லை. ஆனால் ஒரு வழியிருக்கிறது. நமது நாட்டு விலைப் பொருள்களின் உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டியது தான்."

(இதற்கு உண்மையான அர்த்தம் தொழிலாளரின் கூலியைக் குறைக்க வேண்டும் என்பதுதான்.)

"இப்போது இத்தாலியாவின் நிலை வெகு கஷ்டமானதாக இருக்கிறது. இதற்குமேற் கஷ்டமான நிலைமை வருவதற்கு வழியில்லை. இனி நல்ல நாட்கள் வரும் என்று கனவிலும் கருத வேண்டாம்."

"யுத்தமும் பெண்களின் கர்ப்பத்தை ஒத்தது என்று நான் நினைக்கிறேன்."

"எப்பொழுதும் நிலைபெற்ற சாந்தி என்பதற்கு அர்த்தமேயில்லை."

யுத்தத்தினால்தான் ஐரோப்பாவிற்கும் இத்தாலியாவிற்கும் இந்தப் பொருளாதார நெருக்கடியி லிருந்து விடுதலை என்று நான் சொல்லும்பொழுது பக்கத்திலிருக்கிறவர்கள் நம்புகிறார்கள். ஏனென்றால் நான் எப்பொழுதும் மனதிலிருப்பதை ஒளியாமல் வெளியிடுகிறேன் என்பதினால் தான்."

இனி நாக்ஸ் என்பவரின் ஆராய்ச்சிகளைச் சற்றுக் கவனிப்போம். இந்த வருஷத்தில் அன்னியக் கடன் 102,000,000,000 லியர்கள் என்று அரசாங்கப் புள்ளி விகிதங்களே கூறுகின்றன. ஆனால் 50,000,000,000 லியர்கள் அந்தக் கணக்கில் அரசாங்கத்தாரால் சேர்க்கப்படவில்லை என்று குறிப்பிட வேண்டும். இதனால் இத்தாலியாவின் மொத்தக் கடன் தொகை 150,000,000,000 லியர் அல்லது 13,000,000,000 டாலர்கள். 5 வருஷங்களுக்கு முன் 111,000,000,000 லியர் அல்லது 9,500,000,000 டாலர்களாக இருந்தது.

1928 வருஷத்து அரசிறைக் கணக்கு செலவுகள் போக 555,000,000 லியர் வருவாய் என்பதைக் குறிப்பிடுகின்றன. 1933 வருஷத்தில் 3,663,000,000 கைப்பிடிப்பு என்பதைக் காண்பிக்கின்றன. இதிலிருந்து தேசத்திற்குப் பெருத்த நஷ்டங்கள் ஏற்படும் என்று தெரிகிறது.

போன வருஷம் இத்தாலியாவின் மொத்த வருமானத்தில் நூற்றிற்கு 38 விகிதம் வரிகளாக அரசாங்கம் எடுத்துக் கொண்டது; 1930 வருஷம் ஜனவரி மாதம் 500,000 பேர் வேலையில்லாமல் இருந்தார்கள். 1934௵ ஜனவரியில் 1,150,000 பேர் வேலையில்லாமல் இருந்தார்கள்.

ஜெர்மனியில் ஹிட்லரின் ஆதிக்கத்தில் தொழிலாளர் சங்கங்களை எப்படி நடத்தியிருக்கிறதென்று கவனிப்போம். நாஜிக் கட்சியார் முதல் வெற்றியில் தொழிலாளர்களின் நண்பர்கள் என்றுதான் சொல்லிக்கொண்டார்கள். 1932 வருஷம் ஹாம்பர்க்கில் தேர்தல்பொழுது நாஜிக் கட்சி வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் பின் வருமாறு எழுதியிருந்தது.

"ஹிட்லர் தொழில் சங்கங்களைத் தொலைத்துவிடுவார் என்று பொதுவுடைமை ஜனநாயகக் கட்சி சொல்லுவது வெறும் பொய்."

ஆனால் 1933 வருஷம் மே மாதம் 3-ந் தேதி வால்கிஷர் பியோபாஷ்டர் என்ற பத்திரிகையில் பின் வருமாறு எழுதி இருந்தது.

"ஹிட்லரின் ஸ்டார்ம் படைகள் எல்லாத் தொழிலாளர் சங்க ஸ்தலங்களையும் கைப்பற்றிவிட்டது. 50 தொழில் சங்கத் தலைவர்கள் கைதிசெய்யப்பட்டனர். இதுதான் தேசியப் பொதுவுடைமைப் புரட்சியின் இரண்டாவது வேலை."

1933 ஜூன் 10 தேதியில் நாஜி ஜெர்மன் தொழிற் கட்சித் தலைவர் பின் வருமாறு எழுதினர்.

"முன்பு இயற்கையாகத் தலைமை வகிக்கவேண்டியவர்களை இந்தத்தொழிற் கட்சியமைப்பு, தொழிற்சாலையின் தலைமைக்குக் கொண்டுவரும். அதாவது தொழிற் சாலையின் முதலாளியை அவனுடை ஆதிக்கத்திற்குக் கொண்டுவரும். ஆனால் அதே சமயத்தில் பொறுப்பை எல்லாம் அவனிடமே ஒப்புவிக்கும். எந்த விஷயத்தையும் அவன் தான் தீர்மானிக்கலாம்."

இதே ரீதியில் ட்யூஷ் பெர்க் வெர்க்ஸ் ஜீடங் 1933 டிஸம்பர் 10௳ எழுதியது.

"தொழிலில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டிய முதலாளிதான் தொழிலாளர் சபைகளில் பொறுப்பை வகிக்க வேண்டும். எந்தக் காரியத்திலும் அவன் தீர்மானந்தான் முடிவானது."

இம் மாதிரியாகத் தான் நாஜிக் கட்சி தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாத்தது.

170 மார்க்கிலிருந்து தொழிலாளிக்கு மாதா மாதம் அவனது சம்பளம் கீழே குறைந்து கொண்டேவந்தது. கடைசியாக, போன வருடம் 147 மார்க் வரை இறங்கியது. இத்துடன் விலைவாசிகள் உயரத் தொடங்கின. விலைக்கு வாங்கப்படும் பொருள்களும் அந்த விலை கொடுத்து வாங்கக்கூடியதாக இல்லை. காகித நாணயங்களுக்குச் சரியாக (நோட்டுக்கள்) அரசாங்கப் பொக்கிஷங்களில் வைக்கப்பட்டிருக்கும் தங்கம் குறைந்துகொண்டே வருகிறது.

ஏப்ரல் மாதம் 32,000,000 குறைந்துவிட்டது. அதாவது வெளியே நோட்டுகளாக உலாவும் தொகையின் மதிப்பிற்கு வெகுவாகக் குறைந்திருந்தது. நூற்றிற்கு 3.7 விகிதம்தான் பாங்கியில் தங்கம் சேமித்து வைக்கப்பட்டிருந்தது.

இது எழுதியப் பிறகு ஜெர்மனியின் இந்தத் தொகை இன்னும் குறைந்துவிட்டதாகவும் இப்பொழுது ஜூனில் நூற்றிற்கு 2.3 விகிதம் தான் இருப்பதாகவும் தெரியவருகிறது.

பேஸிஸ்ட் ஏதேச் சாதிகாரம் அமெரிக்காவில் வராமல் தடுக்கவேண்டும் என்று இதிலிருந்து தெரியவில்லையா? இதற்கு நாம் போஸிஸம் இங்கு ஆரம்பத்திலிருக்கும் போதே அதைக் கண்டுகொள்ளவேண்டும். இப்பொழுது இரண்டு விதமான தப்பு அபிப்பிராயங்களைப்பரப்பி வருகிறார்கள். பிரஸிடென்ட் ரூஸ்வெல்டின் புதிய முறைகளைப் பிடிக்காத ஒரு வைதிகக் கட்சி அவருடைய முறைகள் எல்லாம் பேஸிஸ்ட் முறைகள் என்று கூறுகிறது. இன்னொரு கட்சி தங்களை எதிர்க்கும் எல்லாக் கட்சி

களையும் ஒரேயடியாக பேஸிஸ்ட் என்று கூறிவிடுகிறது.

இந்த இரு கட்சியினரும் பேஸிஸம் அல்லாத ஒன்றை பேஸிஸம் என்று கூறுகிறார்கள். இம்மாதிரிச் சொல்வதினால் பொது ஜனங்களுக்குப் பேஸிஸம் என்பது இன்னதென்று அறியச் சாத்தியமில்லாமலேயே போய்விடுகிறது. கடைசியில் வேடிக்கையாகப் புலி புலி என்று கத்தியவன் கதையாகப் போய்விடக் கூடாது. நிலைமை அடக்குவதற்கு மார்க்கமின்றி வளர்ந்து விட்டால் பேஸிஸம் இப்படிப்பட்டது, இதன் தீமைகள் இத்தன்மைத்து, என்று பொதுமக்களுக்குக் கூற அவகாசமிருக்காது. அதனால் தொழிலாளிகளுக்கு ஏற்படும் துன்பங்களை எடுத்துரைக்க நேரமிருக்காது. உண்மையாகப் பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டுமானால் எவையும் நடந்த சம்பவங்களைப் பொருத்த காரணங்களாக இருக்க வேண்டும்.

ஆனாலும் அரசாங்கம் தொழிலாளிகளின் மீது தங்கள் ஆதிக்கத்தை வளர்க்க முயலுவதைத் தடைசெய்யத்தான் வேண்டும். என். ஆர். ஏ. ஆனாலும் சரி, ரூஸ்வெல்டின் புதிய திட்டமானாலும் சரி, நாளவர்த்தியில் தொழிலாளர்களுக்கு நன்மையைத் தேடும் என்று சொல்ல முடியாது. தொழிலாளிகள் தங்கள் குறைகளைத் தாங்கள்தான் நிவர்த்தித்துக் கொள்ள வேண்டும். முதலாளிகளிடம் வெற்றி இராவிட்டாலும், தொழிலாளர் தாங்களே ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் அரசாங்கம் பஞ்சாயத்தை நியமிக்கும்படி திட்டமாகச் செய்யத் தொழிலாளர் தலைவர்களுக்கு வழியிருக்கிறது.

மேற்கூறியவற்றிலிருந்து தொழிலாளர், சமூகத்தின் முக்கிய வேலைகளைச் செய்யும் ஓர் அம்சம் என்றும் தெரிகிறது. தனது உரிமைகளை அனுபவிக்கத் தொழிலாள்ர்களின் பெருத்த சக்தியைத் தடைசெய்யக் கூடாது. அரசியல் அமைப்பையோ பொருளாதார அமைப்பையோ சரியாக நிதானிப்பதற்குத் தொழிலாளரின் உரிமையைப் போல் வேறு சக்தி கிடையாது. தொழிலாளர்கள் ஏகமனதாகத் தங்கள் நன்மையைக் கோரி வேலைநிறுத்தம் செய்யவோ அல்லது மற்றெந்தச் சௌகரியங்களைச் செய்துகொள்ளவோ தங்கள் உரிமைகளை உபயோகிப்பதில் தடை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

பேஸிஸத்தின் இன்னொரு தொந்திரவைக் கவனிக்கும் பொழுது, மற்ற தேசங்களில் பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் நீண்ட காலத்தில் தீமையையே வருவிக்கும் காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. இது மட்டும் அந்தப் பொதுவுடைமைக் கட்சிகளைப் பேஸிஸ்ட்டுகள்போல் ஆக்கிவிடாது. ஜெர்மனியில் நாஜிக் கட்சிக்காரர்கள் தங்களைத் தேசீயப் பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். உண்மையில் அவர்கள் தங்களைப் பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் என்று சொல்வதில் அர்த்தமே இல்லை. இந்த தேசத்தில் (அமெரிக்காவில்) பொதுவுடைமைக் கட்சியினரையோ, லிபரல்ஸ் கட்சியினரையோ பேஸிஸ்டுகள் என்று கூறுவது பொருந்தாது. இப்பொழுது இருக்கும் இவ்விரு கட்சியினரையும் அவர்களது அரசியல் கொள்கைகளையும் கவனித்தால் அவர்களை வீண் எதிர்ப்புக்காரர்கள் என்று கூறிவிட முடியாது. அவர்களது அரசியல் ஞானம் நாட்டின் வளர்ச்சியைப் பேணியதாக இருக்கிறது.

அமெரிக்காவில் இன்னும் ஒரு தப்பிதமான எண்ணம் இருந்து வருகிறது. ரஷ்யாவிலிருக்கும் தொழிலாளரின் ஏதேச்சாதிகாரமும், பேஸிஸ்ட் ஏதேச்சாதிகாரமும் ஒன்று என்று நினைக்கிறார்கள். இவ்விரண்டிற்கும் ஒற்றுமையே கிடையாது. உண்மையில் இவ்விரண்டும் எதிர் எதிரான தத்துவங்கள். ரஷ்யாவின் பொதுஜன ஏதேச்சாதிகாரம் தொழிலாளர்கள் தங்கள் நன்மைக்காக ஏற்படுத்திக்கொண்டது. இது தொழிலாளர்களின் நன்மையைத் தொலைக்க முயலவில்லை. தொழிலாளிகளின் உரிமைகளைப் பிடுங்கிக்கொள்ள யத்தனிக்கவில்லை.

அமெரிக்காவில் இதுவரை பேஸிஸம் வளரவேயில்லை. எத்தனையோ இடங்களில் பேஸிஸ்ட் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சில இத்தாலிய சங்கங்கள். சில ஜெர்மன் சங்கங்கள். மற்றவையும் சில இருக்கின்றன. அவை இங்கு சொந்த ஹோதாவில் ஆரம்பிக்கப்பட்டவை. அவை எதற்கும் இளையல்ல. இவை இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் இப்பொழுதே அவைகளைத் தொலைத்து விட வேண்டும்.

இன்னும் எத்தனையோ காரணங்கள். பேஸிஸ்ட் நாகரிக வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன. முதலில் தொழில் கட்சியை எதிர்த்தன. யூதர்களுடைய பகைமையை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். அரசியல் சம்பந்தமாகவோ அதன் கொள்கைகள் உபயோகமில்லாதவை என்பதை நிரூபித்துவிட்டது. அதனுடைய மிருகத்தனமான ஹிம்சை முறைகள் மனித வளர்ச்சிக்கு எதிரி என்பதைக் காண்பித்து விட்டது.

பத்திரிகையினாலும், பிரசங்கங்களினாலும் துண்டுப் பிரசுரங்களினாலும் இதை எதிர்த்துத் தொலைக்க வேண்டும். தொழிலாளர்கள்தாம் இதை முக்கியமாக நடத்தவேண்டும்.

யூதர்களை எப்படிக் கேவலப்படுத்த வேண்டும் என்பதை நாஜிகள் சொல்லிக்கொடுக்கிறார்கள். மனித வளர்ச்சிக்கு எதிரிகளான அவர்களைக் கேவலப்படுத்த அமெரிக்கர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டாம். பேஸிஸ்ட் கட்சியின் கேவலமான கொள்கைகளை எடுத்துக் காட்டினால் போதும்.

அமெரிக்காவும் 'ஐ. எல். ஓ.'வும்

அகில தேசத் தொழிலாளர் ஆபீஸில் அமெரிக்கா சேருவதற்கு அமெரிக்கக் காங்கிரஸ் அனுமதியளித்து விட்டது. இம்மாதிரி சேருவதினால் அமெரிக்காவை லீக் கவனென்டின் (Covenant) கட்டுப்பாட்டிற் குட்படுத்தவில்லை என்பதைத் திட்டமாகத் தெரிவிக்கிறது.

தாத்தாவின் மாப்பிள்ளைக் கோலம்

(ஏரியூர் S. P. காசி விஸ்வநாதன்)

இத்தலைப்பின் கீழ் என் பேனா முனையை வைக்கும் போதே என் ஆர்வத்தால் பேனா விரைந்தோடுகின்றது. அந்தோ! என் செய்வேன். திடீரென்று என் பேனா முனை நின்று விடுகின்றது. கைகள் நடுங்குகின்றன. தேகமெல்லாம் சில்லென்று வேர்க்கின்றது அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!! சீர்திருத்த ஆர்வமும் பொது உடைமைக் கொள்கையும் முன்னேறிவரும் நம் நாட்டில் இன்னமும் பால்யப் பெண்களை இன்ப சுகமில்லாத பாழும் படுகுழியில் தள்ளும் வழக்கமும், அதற்கு ஆதாரமாய் உள்ள மதத்தின் கொடுமையும், சாஸ்திரத்தின் அட்டூழியமும், வைதிகத்தின் அனுச்சாரமும், ஆண்களின் அறிவீனமும் மடத்தனமும், இன்னும் நம் நாட்டில் ஒழியவில்லை என்றால் எம்போன்ற வாலிபர்களின் உதிரம் துடிக்குமென்பதில் ஆட்சேபனை யுண்டோ? சில தினங்களுக்கு முன் ஓர் சிறு கிராமத்தில் வேளார் குலத்தில் உதித்த 55–வயது தாத்தாவுக்கும் 10–வயதுள்ள, இன்பமென்பதே இன்னதென்றறியக் கூடாத ஓர் சிறுமிக்கும் திருமணம் என்றால் எந்த மானமுள்ள இந்தியனும் ரத்தக் கண்ணீர் வடியாமலிருக்க முடியுமா?

காரைக்குடி ரோட்டிலுள்ள பள்ளங்களைவிட மாப்பிள்ளைத் தாத்தாவின் முகத்திலே அம்மை நோயினால் உண்டான பள்ளங்கள் அதிகம். கூட்டங்களிலே கோர மில்லாவிட்டால் தாத்தாவை திருத்தினால் அகோரமாய் இருக்கும். ஏற்கனவே இரண்டு மனைவிகள் இருந்தும் பிள்ளையில்லை என்ற காரணத்தால் மூன்றாவது பால்யப் பெண்ணை மணந்தாரென்றால் இந்த அனுசாரமான பிள்ளைப் பேயின் காரணத்தால் நமது பால்யப் பெண்களை (கிளியைப் பல நாள் பிரியமுடன் வளர்த்துப் பூனைக்கிரையாக்குவதைப்போல்தான்) நமது சிறுமிகளைத் தாத்தாவுக்கு பேத்திபோல் காணப்படும் –நமது சகோதரிகளை, இன்னமும் பலி கொடுப்பதை, பாழும் கிணற்றில் தள்ளுவதை, வேளான வாலிபர்கள் பார்த்துக் கொண்டே யிருக்கலாமா! குற்றமற்ற இச்சிறுமிகள் அழுகின்ற இரத்தக் கண்ணீர் என்றாவது ஓர் நாள் இச்சமூகத்தை அடியோடு நாசமாக்குமென்பது திண்ணம்.

ஓ வேளாள வாலிபர்களே! நீங்கள் இன்னமும் மதப்பற்றையும் ஜாதி ஆசாரத்தையும் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதால் இந்த பால்ய சகோதரிகள் பக்குவம் அடைவதற்கு முன்பே விதவை என்றும் பட்டத்தை சூட்டி நிற்கின்றார்கள். பக்குவமடைந்ததும் பந்தலின் மத்தியில் அமர்த்தி ஆண் மக்கள் சுற்றிவந்து தாலியை அறுப்பது என்ன கொடுமை? அவர்கள் விதவை ஆகும்படி நேர்ந்தது யாருடைய குற்றம். அவர்களுடைய குற்றமா? அன்றி அவர்கள் கணவன்மார்களின் குற்றமா? அன்று! அன்று! பின்னை யாருடைய குற்றம்! பொருத்தம் பார்த்த புரோகிதனின் குற்றம். மணம் செய்வித்த மானமற்ற—மதி கெட்ட—மடையர்களான பெற்றோர்களின் குற்றம். எனவே குற்றவழியை விடுத்து மற்றொருவரைத் தண்டிப்பது எள்ளளவும் நீதியாகாது. இதினால்தானே விதவைகள் (வெள்ளைப் பட்டாளங்கள்) பெருகுகிறது. பலர் இன்ப வாழ்க்கை எப்படியிருக்குமென எண்ணி, எண்ணி ஏங்கி கள்ளக் காதலர்களுடன்கூடித் தெரியாமல் பிள்ளைகளைப் பெற்றுச் சாக்கடைகளுக்குக் கொண்டு போய்ப் போடுகின்றார்கள். இது நாம் தலைகுனிய வேண்டிய அவமானமல்லவா? உலகம் போய்க்கொண்டிருக்கும் உன்னத நிலையைக் கூர்ந்து கவனித்துப் பால்ய பெண்ணின் பரிதாப நிலையைப் போக்குங்கள். விதவைச் சகோதரிகளின் ஆராத் துயரத்தை நீக்க விதவா விவாகத்தை ஆதரியுங்கள். இதைத் தைரியமாகச் செய்யுங்கள்—நீங்கள் இதை செய்ய முன்வராமல்—வேதத்தையும்—புராணத்தையும்—ஸ்மிருதியையும்—ஜாதி ஆசாரத்தையும் கட்டிக்கொண்டு—நமது பெண்மணிகளை இன்னமும் படுகுழியில் தள்ள நினைப்பீர்களேயானால் இந்தப் பால்ய விதவைகளின் துயரக் கண்ணீரே—உங்கள் சமூகத்தை அறுக்கும் வாளாகும்.

சூடான் எல்லை.

சூடான் பிரதேசத்திற்கும் இத்தாலிய லிபியாவிற்கும் இடையிலிருந்த எல்லைத் தாவா இரண்டு தேசங்களும் ஆசைப்பட்டபடி பூர்த்தியாகியது. முன்பு இதனால் தொல்லைகளும் மனமாற்றங்களும் ஏற்படும் என்று நினைக்கும்படியாக இருந்தது. பிரிட்டிஷ், இத்தாலிய, எகிப்திய அரசாங்கங்களுக்கிடையே எல்லைத்தை வரையறுக்கக் கடிதப்போக்கு வரவுகள் நடக்கின்றன.



விதையில்லாத சீமைத் தக்காளி

டெக்ஸாஸ் பிரதேசத்தில் சீமைத் தக்காளிக்காயில் உள்ள விதைகள் இல்லாதபடி பயிராக்க ஒரு நூதன முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

* * *

நூதனத் துப்பாக்கி

கிளைட் பால் என்பவர் ஒரு நூதனமான துப்பாக்கி கண்டு பிடித்திருக்கிறார். அதில் ஒரே தடவையில் 700 குண்டுகள் போட்டு உபயோகிக்க முடியும்.

* * *

புதிய பூதக் கண்ணாடி

ஒரு பொருளை 20,000 மடங்கு பெரிதாகக் காண்பிக்கும் ஒரு புது மாதிரியான பூதக் கண்ணாடியை ஒரு அமெரிக்க டாக்டர் கண்டு பிடித்திருக்கிறார். இது கண்ணுக்குத் தெரியாத பரமாணுக்களான சிறிய பூச்சிகளின் பிறப்பு முதல் அதன் வளர்ச்சியைப் படிப்படியாகக் காட்டக்கூடிய படி அமைந்திருக்கிறது.

* * *

சணல் நாரில் கம்பளி

சணல் நாரிலிருந்து கம்பளி மயிருக்கொப்பாக ஒரு பொருள் தயாரிக்கலாம் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. கம்புளிக்குப் பதிலாக இதை உபயோகித்துக் கொள்ளலாம்.

* * *

புதிய ஆகாயக் கப்பல்

இங்கிலீஷ்ச் சானலை முதல் முதலாக ஆகாயக் கப்பல் வழியாகக் கடந்த பிளெரியட் என்பவர் இன்னும் கொஞ்ச காலத்தில் ஆகாய விமானம் சர்வசாதாரணமாகிவிடும் என்று கூறுகிறார். அவர் யாரும் லேசாகப் பழகிக்கொள்ளக்கூடிய ஒரு ஸீப் பிளேன் ஒன்று கண்டுபிடித்திருப்பதாகவும் அதைச் செய்துகொண்டு தருவதற்குத் தனது பணமின்மைதான் காரணம் என்றும் கூறினார்.

* * *

ராக்கெட் தபால்

ராக்கெட் மூலமாகத் தபால்களை அனுப்புவதற்கு முடியுமா என்று ஜெரால்ட் ஜூக்கர் என்ற ஜெர்மனியர் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார். முதலில் ஹுயி என்ற தீவிற்கும் ஸ்கிராப் என்ற தீவிலிருந்து அனுப்பிப் பார்ப்பார்கள். ஆகாய விமானி குதிப்பதற்கு ஏற்ற பாரச்சூட் குடை இத்துடன் பொருத்தியிருப்பதால், அந்த மூட்டையின் துரித சக்தி குறைந்தவுடன் மெதுவாக இறங்கிவிடும். இப்படி அனுப்புவது சாத்தியமாகி விட்டால் 28 நிமிஷங்களில் லண்டனிலிருந்து நியூயார்க்கிற்கு (அமெரிக்கா) செய்திகளை அனுப்பிவிடலாம்.

* * *

மின்சார மனிதன்

லண்டனில் மேபேர் (May Fair) பக்கத்திலிருக்கும் ஒரு ஹோட்டல் வாசல் காப்போன் மின்சார சக்தியுடையவனாக விருக்கிறான்.

ஒரு மோட்டார் வந்தவுடன் அதைப்போய் அவன் தொட்டவுடன் ‘ஸ்பார்க்’ அடிக்கிறது. மோட்டார்கள் அதிகநேரத்திற் கொருதரம் வந்தால் ஸ்பார்க் அதிகமாக இருக்கும். சேர்ந்தார்ப்போல் ஐந்தாறு வந்துவிட்டால் சக்தி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வரும்.

ஸர் கௌலண்ட் ஹக்கின்ஸ் என்ற வைத்திய நிபுணர் பின் வருமாறு கூறுகிறார். வற்றிய சர்மம் மின்சார சக்தியைத் தடுக்கும். அதனால்தான் உடலில் ஸ்பார்க்குகள் வருகிறது.

* * *

வருங்காலத்து ஐரோப்பியர்கள்

வருங்காலத்து ஐரோப்பியர்கள் உயரத்தில் இன்னும் அதிகமாக இருப்பார்கள், அவர்கள் உடம்பு பூதாகாரமாக இருக்கும் என்று டாக்டர் பிரான்ஸ் கீபாஸ் என்ற அமெரிக்க ஆந்திரப்பாலஜிஸ்ட் சொல்லுகிறார். இதற்கு அத்தாட்சியாக 70 வருஷத்திற்கு முன் இருந்ததைவிட இப்பொழுது 2 அங்குலம் அதிகமாக வளர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்.

* * *

270 ரூ. மோட்டார்க் கார்

ஷெக்கோ . ஸ்லோவாக்கியாவில் 20 பவுன் விலையுள்ள இரண்டு பெயர் உட்காரக்கூடிய மோட்டார்க் கார் தயாராகிறது.

ஜப்பானிலும் ஜெர்மனியிலும் இதற்கு முன் 50 பவுன் விலையுள்ள கார் தயாரித்திருக்கிறார்கள்.

* * *

ஏனெக் என்ற வால் வெள்ளி

100 வருஷங்களுக்கு முன் இந்த வால்வெள்ளி வந்தபொழுது விஞ்ஞான சாஸ்திரிகள் வெகு சிரமப்பட்டார்கள்.


1818 ல் அதைப் பூராவாகவும் ஆராய்ந்த ஏனெக் என்ற விஞ்ஞானியின் பெயர் கொடுக்கப்பட்டது. $3\frac{1}{2}$ வருஷத்தில் சூரியனைச் சுற்றி வருகிறது என்று முதலில் கணக்கிட்டிருந்தார்கள்.

அதன் பிரயாண காலம் வரவரக் குறைந்து கொண்டே வருகிறது. இப்படியே குறைந்து கொண்டுபோய்ச் சூரியனில் மோதிவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

* * *

இன்னொரு பூகம்பம்!

1935 பிப்ரவரி 15ல் இந்தியாவில் இன்னும் ஒரு பூகம்பம் வரும் என்று ஒரு ஜெர்மன் விஞ்ஞான சாஸ்திரி கூறுகிறார்.



விகடத்திரள்

தகப்பனார்:—உனக்கு நான் கணக்குச் செய்து கொடுத்தேன் என்று உனது உபாத்தியாயருக்குத் தெரிந்து போயிற்று?


மகன்:—ஆமாம்—இத்தனை தப்புகள் ஒருவரால் போட முடியாது என்று சொன்னார்.

* * *

நீதிபதி:—வாதி உன்னிடம் மோதிரத்தைத் திருப்பி அழித்துச் செய்யும்படி கொடுத்தான். நீ அதை 30 ரூ. விற்றுவிட்டாய்.

குற்றவாளி:—நான் அழித்துச் செய்திருந்தால் அதில் பாதிகூடக் கிடைக்காது.

* * *



சாமான் வாங்க வந்த ஒரு பெண்:—மூன்றணா ரொட்டி யொன்று கொடுங்கள்.

கடைக்காரன்:—இன்று காலை முதல் நாலணா வாகிவிட்டது அம்மா

பெண்:—நேற்றுச் சாயங்கால முள்ள ரொட்டியைக் கொடுங்களேன்.

* * *



சிறுமி:—அம்மா நான் நாளை அப்பாவுக்கு ஒரு மைப் புட்டி பரிசளிக்கப் போகிறேன்.

தாய்:—ஏன் அவருக்குத்தான் மைப் புட்டி யொன்று மேஜைமீது இருக்கிறதே.

சிறுமி:—அதனை நான் கொஞ்சம் முன்னாடி உடைத்துவிட்டேன்.

* * *

"வீடு நெருப்புப் பிடித்துக் கொண்டது."

"தீக் கோழியைக் கூட்டிக் கொண்டுவா!"

* * *

வாலிபன்:—நான் உன்னை முத்தமிட்டால் என்ன செய்வாய்?

மங்கை:—எனக்குத் தெரியாது.

வாலிபன்:—தெரிய ஆசையும் இல்லையா?

* * *

மனைவி:—என்னை விட்டுவிட்டு நீங்கள் எப்படி இருந்து விட்டீர்கள்.

புருஷன்:—அதிகச் செலவில்லாமல்.

* * *

ஒரு திருடனுடைய மனைவியை வக்கீல் குறுக்கு விசாரணை செய்து கொண்டு இருந்தார்.

வக்கீல்:—நீ இந்தக் குற்றவாளியின் மனைவிதானா?

திருடன் மனைவி:—ஆம்.

வக்கீல்:—மணம் செய்து கொள்ளும் பொழுது திருடன் என்று தெரியுமா?

தி. ம:—தெரியும்.

வக்கீல்:—திருடனைக் கலியாணம் செய்துகொள்ள எப்படி மனம் ஒப்பினீர்கள்.

தி. ம:—எப்படியா? எனக்கு அதிக வயதாகிக் கொண்டிருந்தது. இவரில்லாவிட்டால் ஒரு வக்கீலைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டியிருந்தது.

* * *

மணப்பாரையிலிருந்து மருங்காபுரிக்குச் செல்லும் ஒரு பெண் மருங்காபுரி என்று போட்டிருந்த கைகாட்டியின் மேல் ஏறி உட்கார்ந்துக் கொண்டாள். அவ்வழியாக வந்துகொண்டிருந்த ஒருவர் 'ஏனம்மா கைகாட்டியின் மேல் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறாய்?'

பெண்:—ஐயா! நான் இதில் உட்கார்ந்து அரை மணி ஆகிறது இது இன்னும் போகவில்லை.

—எம. என். ஜி.

* * *

சீனு:—அப்பா, அண்ணன் நம் ரோசை அடித்தான்.

தகப்பனார்:-ஏண்டா தடுக்கக் கூடாது?

சீனு:—தடுத்தேனப்பா!

தகப்பன்:—பின்னே எப்படி அடித்தான்.

சீனு:—நானென்ன செய்வேன். ரோசை ஓடிப்போகாமல் தடுத்தேன்.

—ரெ. தயாநிதி.

* * *

உபாத்தியாயர்:—கண்ணா, முட்டை போடும் ஜந்து ஒன்று சொல்லு பார்க்கலாம்.

கண்ணன்:—நீங்கள் தான் சார்.

உபாத்தியாயர்:—அடே மடையா, என்ன சொன்னாய்?

கண்ணன்:—நீங்கள் தான் என்பரீட்சைப் பேப்பரில் முட்டை, முட்டையாய்ப் போட்டிருக்கின்றீர்களே.

—ரெ. தயாநிதி.



நமது தபால் பெட்டி

பண்டித மாளவ்யா அவர்கள்
காசி நகர்.

அன்புள்ள பண்டிட்ஜீ!

காங்கிரசுக்காக நீங்கள் ரொம்பப் பாடு பட்டிருக்கிறீர்கள். அதனால் நீங்கள் அடைந்த புகழ் அதிகம். வைதிகத்தை விடாது பார்ப்பனச் சமையற்காரனையும் சிறையிற் கூட வரவழைத்துக் கொண்டீர்கள் என்றாலும் உங்கள் தேசாபிமானம் போற்றக் கூடியதே. என்ன செய்யலாம்! விதியாரை விட்டது! நீங்கள் இவ்வளவு பாடுபட்ட காங்கிரசின் பெயரை இந்தத் தேர்தல் அவசர காலத்தில் உபயோகப்படுத்திக் கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைமை உங்கட்கு ஏற்பட்டதற்கு வருந்தாதிருக்க முடியவில்லை. ஏதோ, கால வித்தியாசத்தால் காங்கிரஸ் அபேட்சகருக்குப் போட்டி போடத் துணிந்து விட்டீர்கள். இந்த நிலைமையில் காங்கிரஸ் பெயரையும் தேர்தலில் நீங்கள் பற்றிக் கொள்வது பாபமல்லா? பார்லிமெண்ட்டரி போர்டுக்குத் தவிர வேறு எவருக்கும் காங்கிரஸ் பெயரைச்சொல்லி அபேட்சகரை நிறுத்த உரிமையில்லையெனக் காந்தி கூறுகிறார். நீங்கள் அப்படிச் செய்வது சரியாகாதெனப் படேல் பகர்கிறார். ஆம்! உண்மை தானே! உங்கட்குத் தான் ஏராளமான செல்வாக் குண்டாமே? எங்கள் தமிழ் நாட்டில் காங்கிரசை நிர் மூலப்படுத்தக் கிளம்பியிருக்கும் சில வீரர்களைப் போல் நீங்களும் காங்கிரசுக்கு விரோதமாகவே வெளிப்படையாக ஓட்டுக் கேட்டு வெற்றிமாலை சூடுவதே ஒழுங்கு.

அன்பும் பணிவும் உள்ள
பகீரதன்

திரு. திரு. வி. க. முதலியார் அவர்கள்
இராயப்பேட்டை.

அன்புள்ள முதலியார் அவர்களே!

நீங்கள் காங்கிரசைத் தொலைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு திக் விஜயம் செய்யப் புறப்படும் திருக்கூட்டத்துள் கலந்து விட்டதாகவும் வைத்தியர் வரதராஜுலு அவர்களுடன் 'இதோ புறப்படுகிறீர்கள்; அதோ புறப்படப் போகிறீர்கள், என்பதாகவும் கூறப்பட்டது. திக்விஜயநாள் வந்தவுடன் உடம்பு அசௌகரியம் காரணமாக நீங்கள் செல்லவில்லையென ஒருநாள் 'தமிழ்நாடு' பத்திரிகையில் காணப்பட்டது. நீங்கள் அத் திருக்கூட்டத்துள் சேரப்போவதில்லையெனவும் சொல்லப்படுகிறது. நீங்கள் எல்லாவற்றிற்கும் மௌனம் சாதிக்கின்றீர்களே! இது நியாயமா? உங்களுடைய உள்ளக்கிடக்கை இன்னதென அழகிய தமிழில் ஒரு அபிப்பிராயம் எழுதிப் பத்திரிகைகட்கு அனுப்பிவிடுதல் நல்லதல்லவா? நீங்கள் காங்கிரசுக்கு விரோதமாகப் போகமாட்டீர்கள் என்றே நான் நினைக்கின்றேன். ஆனாலும், யார் கண்டார்? காலம் கெட்டுப் போச்சல்லவா? உங்களிடத்து எனக்கு ஏதோ விஸ்வாசம் அதிகமாகையினாலே இதைச் சொல்லுகின்றேன். தமிழர்கள் உங்களையும் அந்த 'செட்'டில் சேர்த்துக் குறைவாகப் பேசுகின்றனர். 'தின்கிறவன் தின்னத் திருவாலியான் தெண்டங்கொடுத்த மாதிரி' ஒரு பிரயோஜனத்தையும் அடையாத நீங்கள் ஏன் அநாவசியமாகத் தூற்றப்படவேண்டும்? எனவே ஒருதரம் திருவாய்மலர்ந்து உண்மையைச் சொல்லிவிட்டுப் பிறகு சும்மா அமர்ந்துவிடுங்கள்! என்னுடைய இந்தச் சிறிய வேண்டுகோளைப் பூர்த்தி செய்வீர்கள் என நம்புகிறேன்.

உங்கள் நலம்நாடித்
திருவருளை வழுத்தும்,
பகீரதன்.

பாரிஸ்டர் அழகப்பா அவர்கள் வருகை

மலேயாநாடு, பர்மா ஆகிய இடங்களில் சுற்றுப் பிரயாணஞ் செய்த பாரிஸ்டர் திரு. க. வீ. அழ. ராம. அழகப்பா அவர்கள் இரங்கூனிலிருந்து இம்மாதம் 27உ சென்னை வந்து சேர்ந்தார்.

நாட்டரசன் கோட்டை

இவ்வூர்ப் பாரதி வாசகசாலையின் இரண்டாவதாண்டு நிறைவு விழா ஆவணி 17-ந் தேதி பகல் 3-மணிக்குத் தஞ்சை முனிசிபல் தலைவர் காரைக்குடி ராவ்பகதூர் இராமனாதன் செட்டியார் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

மேலைச்சிவபுரி—வாசகசாலை

இந்நகர் ஆவணி மூலப் பிரமோத்ஸவத்தின் 9-ந் திருநாளாகிய பவஷு ஆவணிமீ 6உ மாலை 4-39-க்கு இளவட்ட நகரத்தார் (வாலிபர்) தண்ணீர்ப் பந்தரில் வாசகசாலையின் சார்பில் ஓர் கூட்டம் கூடியது. அஞ்ஞான்று, ஸ்ரீமான் மு. குமரப்பச் செட்டியாரவர்கள் தலைமையில் பல அன்பர்கள் பேசினார்கள் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

மின்வெட்டு

———

ஒட்டாவா ஒப்பந்தம்—லாபம் யாருக்கு ?

—கட்டுரைத் தலைப்பு.

இன்னும் சந்தேகமா ?

* * *

டங்கோராவைச் சேர்ந்த.............. 19-வயதுள்ள மாதாகின் என்ற பர்மிய மாதை, டுன்வா என்ற பர்மியன் தொடர்ச்சியாக மூன்று தடவை முத்த மிட்டானென்று அவன்மீது குற்றம் சாட்டித் தொடுக்கப்பெற்ற வழக்கில்.... டவுன் ஜட்ஜி அவர்கள் மூன்று மாத சிறைதண்டனை விதித்துள்ளார்கள்.

—பத்திரிகைச் செய்தி.

திருமணத் தீர்ப்பு இதைவிடச் சரியான தண்டனை என்று நினைக்கிறோம்.

* * *

"எங்கள் நெய் சுத்தமானதல்ல வென்று நிரூபித்தால்',

—விளம்பரம்.

சாப்பிட வேண்டாம் !

* * *

அனுமார் அறிவு !

—செய்தித் தலைப்பு.

அதன் வாலில் தெரியும்.

* * *

சென்னை சர்க்காருக்குத் தவடையடி.

—செய்தித் தலைப்பு.

திருப்பிக் கொடுத்தார்களா—கிருஸ்தவாச்சுதே !

* * *

சிறிது சிரியுங்கள் !

—பத்திரிகை ஹாஸ்யம்.

ஐயோ ! வரமாட்டேன் என்கிறதே !

* * *

பாதுகாப்பு ஏன் ?

—செய்தித் தலைப்பு.

பாதுகாத்துக் கொள்ளத்தான் !

* * *

லார்டு வில்லிங்டன் திரும்பி விட்டார்.

—செய்தித் தலைப்பு

பிறகு திரும்பாமல்? போன மச்சான் இல்லையா ?

* * *

சைவரா இல்லையா ?

—விளம்பரம்

இல்லாவிட்டால் கழுவேற்றி விடுவீர்களா ?

* * *

கவலையற்ற வாழ்க்கை

—விளம்பரம்

இந்த உலகத்திலேயா ?

* * *

போலீஸாருக்கு அடி.

—பத்திரிகைச் செய்தி

அவர்கள் சத்தியாக்கிரகிகள் அல்ல.

* * *

வேலையற்ற பட்டதாரிகள்—பாட்னா சர்வகலாசாலையின் சிரத்தை.

—செய்தித் தலைப்பு

மற்றொரு முறை படிக்கச் சொல்லுவது தானே.

* * *

பழைய கப்பலுக்குப் பதில் புதிய கப்பல்—

—பத்திரிகைச் செய்தி

இந்தப்புதிய அல்லாவுதீன் யார் ?

* * *

முசோலினியின் யுத்த பயம்.

—பத்திரிகைச் செய்தி

அவருக்குமா பயம் ?

சென்னையின் பூர்வ நாகரிகம்

———

சென்னை அரசாங்கப் பொருட்காட்சிச் சாலையின் சார்பாக திரு. ராகவன் திரு. ஆராவமுதன் என்ற இரு சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கீழ்ப்பாக்கத்தில் பூமியைத் தோண்டிப் பார்த்ததில் 5000 வருஷங்களுக்கு முந்திய நாகரிகச் சின்னங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்,

1639 வருஷத்திற்குப் பிறகுதான் சென்னை நகரம் முதல்முதலாகப் பிரிட்டிஷார் வந்தபிறகு கட்டப்பட்டது என்றும், மைலாப்பூரைச் சுற்றிய பாகங்களுக்கும் கோவில் அதற்குச் சுற்று முன் ஹிந்து அரசர்களால் சமைக்கப் பட்ட தென்றும் ஆராய்ச்சியாளர்கள் நம்பி இருந்தார்கள்.

ஆனால் இம்மாதிரி கீழ்ப்பாக்கத்தில் பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்ததில் 5000 வருஷங்களுக்கு முன்பே சென்னையில் மனித சஞ்சாரம் இருந்து வந்தது என்று சொல்வதற்கேதுவாக இருக்கிறது.

10 கல்களால் தாங்கப்பட்ட 6½ அடி நீளமுள்ள ஒரு மண் ஜாடி கண்டு பிடிக்கப்பட்டது. அம்மாதிரியான ஜாடிகளை 'மத மதத்தான் தாளி' என்று திருநெல்வேலிப் பிரதேசத்தில் கூறுவார்கள். இதில் இறந்தவருடைய சாம்பலை வைத்துச் சமாதிசெய்ய உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது கண்டு பிடிக்கப்பட்ட தாளியைத் திறந்த பிறகுதான் அதனுள் என்ன இருக்கிறதென்று சொல்ல முடியும்.

பூமியை வெட்டி வரும்பொழுது ஒரு சிறு மண் வெட்டியின் இரும்புப் பாகம் கிடைத்தது. அது 5000 வருஷத்திற்கு முந்தியிருந்த நியன்டர்த்தால் என்ற மனித வகுப்பினர் செய்து வைத்திருந்தவைகளை ஒத்திருக்கிறது. மற்றும் அங்கு கிடைக்கும் மண் குடங்களில் இருக்கும் சித்திரங்கள், (முக்கியமாகப் பறவைகளைத்தான் வரைந்திருக்கிறது), வெகு அழகாக இருக்கிறது. இதிலிருந்து அந்தப் பூர்வகாலத்து மனிதர்கள் ஓரளவு கலையில் தேர்ச்சி பெற்றிருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இன்னும் இதைவிடப் பழமையான பாத்திரங்களும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. இவைகள் வெளிப்புறம் சிகப்பாகவும் உள்புறம் கறுப்பாகவும் இருக்கிறது. இவை கி. மு. 3000 வருஷங்களுக்கு முன்பு இருந்த எகிப்திய நாகரிகத்தின் சின்னங்களைப்போல், அவைகளை ஒத்து இருக்கின்றன.

———

அஹிம்ஸையே சத்தியத்திற்கு வழி

ஏன் காங்கிரஸ் அபேட்சகருக்கு ஓட்டு கொடுக்க வேண்டும்?

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

1. பாரதநாடு பூரண சுதந்திரமடைய வேண்டுமென்ற இலட்சியத்தைக் கொண்டு அதற்காக இடைவிடாமல் வேலை செய்துவரும் காங்கிரசுக்கே ஓட்டுச் செய்யுங்கள். மற்றக் கட்சிகள் இந்த இலட்சியத்தைக் கைக்கொள்ளவில்லை. இந்த இலட்சியத்தைக் காங்கிரஸ் கொண்டிருப்பதினால் தான் அதில் தாங்கள் சேர முடியாதென்றும் சொல்லுகிறார்கள்.

2. அதிகார வர்க்கத்தைக் கேட்டுக் கொள்ளும் முறையை விட்டுத் தியாக முறையைக் கைக்கொண்ட காங்கிரசுக்கே ஓட்டுச்செய்யுங்கள். மற்றக் கட்சிகளோ இன்னும் பழைய முறைகளைத் தான் அனுசரிக்கிறார்கள். காங்கிரஸ் செய்யும் வேலைகளினால்தான் அக்கட்சிகளுக்கும் கூட உயிர்.


3. சுயநலம் மறந்து, அடிபட்டு, நஷ்டப்பட்டு, சிறைசென்று, உலகம் முழுதும் புகழ்பெற்ற காங்கிரசுக்கு வோட்டுச் செய்யுங்கள். மற்றக்கட்சிகள் காங்கிரசில் இந்தக் குறை அந்தக் குறை என்று காட்டுவதில் மட்டும் திருப்தியடைந்து தங்கள் குறைகளைக் கவனிக்க மாட்டார்.

4. மிருகபலத்தை எதிர்த்து நிற்கச் சத்தியாக்கிரக முறையைக் கொண்டிருப்பதால் காங்கிரசுக்கு ஓட்டுக் கொடுங்கள். மற்றவர்கள் சர்க்காருடைய ஆயுத பலத்தை நாம் எதிர்க்கமுடியாது, அடங்கித்தான் இருக்கவேண்டுமென்று தலை குனிகிறார்கள்.

5. தேசத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமானபடி கஷ்டமான பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு அவைகளைத் தீர்க்க முயற்சி செய்வது காங்கிரஸ் ஒன்றே. மற்றக் கட்சிகள் காங்கிரஸ்காரரைப் பற்றிக் குறை கூறுவது தவிர அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தாங்களாக ஒரு வழியும் தேடுவதில்லை; ஒரு முயற்சியும் எடுப்பதில்லை.

6. நாட்டு மக்களின் ஒற்றுமையையே நாடும் காங்கிரசுக்கு ஓட்டுக் கொடுங்கள். மற்றவர்களோ வேற்றுமைகளைநாடி, தனி ஜாதிகளுக்கென்று கட்சிகள் கட்டி ஒருவர்மேல் ஒருவர் குற்றம் கூறுவதே நோக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

7. நாட்டு மக்கள் தன்னம்பிக்கையும் தைரியமும் கொண்டு வாழ்வை நடத்தக் கற்றுக்கொடுத்தது காங்கிரஸ். அதற்கு ஓட்டுச் செய்யுங்கள். மற்றக் கட்சிகள் தங்களை மற்றவர்கள் மதிக்கிறதில்லையென்று எப்போதும் பயந்து பயந்து தன்னம்பிக்கையை யிழந்து வாழ்வதையே பயிலுகிறார்கள். நமக்குப் பலம் போதாது. எந்தக் காரியமும் நம்மாலாகாது என்ற எண்ணத்தையே உண்டாக்கி வருகிறார்கள்.



ஹிந்துஸ்தான் இன்ஷ்யூரன்ஸ் மானேஜிங் டைரெக்டர் திரு. ராய் சௌத்திரி சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் வரவேற்கப்படும் காட்சி. —P.P.B

8. நாட்டிற்கு வேண்டிய எந்தச் சீர்திருத்த விஷயத்திலும் முன்னணியில் நின்று உழைப்பது காங்கிரஸ். காங்கிரசுக்கு விரோதமாய் ஓட்டுக்கொடுத்துக் காங்கிரசைத் தோல்வியடையச் செய்துவிட்டால் நாட்டில் எந்த உயர்நோக்கமும் தைரியமான எண்ணமும் உருப்படா. சர்க்காரை எதிர்த்து நிற்கும் உணர்ச்சி முழுதும் அற்றுப்போய் தோல்வி மனோபாவம் நாடு முழுதும் பரவி எல்லோரும் வீழ்ச்சியடைவோம்.

9. மகாத்மா காந்தியடிகள் தலைமையைத்தேசமெல்லாம் ஒப்புக்கொண்டிருக்கிறது என்பதைச் சர்க்காருக்கு மெய்ப்பிக்கக் காங்கிரசுக்கு ஓட்டுச் செய்ய வேண்டியது அவசியம். காங்கிரஸ் தோல்வியடைந்தால் மகாத்மாவின் பலம் குறையுமல்லவா?

10. வட்டமேஜை மகாநாட்டிலிருந்து திரும்பி இந்தியாவுக்கு வந்தவுடனே, இராஜப்பிரதிநிதியுடன் கலந்து நாட்டின் நிலையைப்பற்றிப் பேசிச் சமாதானத்திற்கு வழிதேட வேண்டுமென்று அவர்களை மகாத்மா பார்க்கக் கேட்டதற்கு மறுத்து விட்டது தவறு

மதிப்புரை.

அரவிந்த மலர்

இது புதுக்கோட்டை "ஜனமித்திரன்" பத்திரிகாலய வெளியீடு. டிம்மி 1x4 அளவில் 48 பக்கங்கள் கொண்டது. இன்று பாண்டிச்சேரியில் வைகும் ஞானி அரவிந்தரின் பிறந்த நாளை ஒட்டி இம்மலர் வெளியாகியிருக்கிறது. பெரியார் அரவிந்தரைப்பற்றிய கட்டுரைகளே இம்மலரில் பெரும் பகுதி காணப்படுகின்றன.

பெண்ணுரிமைக் கீதங்கள்

ஆசிரியர் திரு. ப. ஜீவானந்தம் அவர்கள். விலை அணு ஒன்று. கிடைக்குமிடங்கள்:—R. கிஸன், கோயமுத்தூர்; குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு.

இப்பாடல்கள் புதிய கண்ணி முறையில் பாடப்பட்டவை; சிறையினின்றும் எழுந்தவை. பெண்ணுரிமை பற்றிச் சிறந்த கொள்கைகளோடு பலமெட்டில் இருபத்திரண்டு பாக்கள் இந்நூலில் இருக்கின்றன.

குமரன் வருஷ அநுபந்தம்

வெளியிட்டோர் காரைக்குடி "குமரன்" பத்திரிகாலயத்தார். விலை அணு 4. கிடைக்குமிடம்:—குமரன் காரியாலயம், காரைக்குடி.

இது 'குமரன்' பத்திரிகையின் பன்னிரண்டாவது ஆண்டுத் தொடக்கத்தை யொட்டி வெளியிடப் பெற்ற விசேட இதழ் ஆகும். போன ஆண்டில் உலகில் நடந்த முக்கிய நிகழ்ச்சியைப் பற்றியும் குமரன் கொள்கை அபிவிர்த்தி முதலியனவும் இதில் தொடக்கத்தில் கூறப்படுகிறது. பல நல்ல கட்டுரைகளும் கதைகளும், பாட்டுக்களும் காணப்படுகின்றன.

அபிமன்யு

ஆசிரியர் திரு. வெ. சாமிநாத சர்மா அவர்கள். விலை எட்டணு. கிடைக்குமிடம்: 48-வது வீதி, கிழக்குஇரங்கூன்.

இந்நூல் நாடக வடிவமாக எழுதப்பட்டிருக்கிறது. கதை பாரதத்தைத்தழுவியது பாரதத்தில் பாண்டவர்களில் நடுப்பிறந்தோனாகிய அர்ச்சுனன் மைந்தன் அபிமன்யு என்ற மகா வீரனே இந்நாடகத்தின் கதாநாயகன். வில்லி பாரதத்திற்கும் இந்நாடகத்திற்கும் கதை நிகழ்ச்சியில் மாறுபாடு காணப்படுகிறது. பழைய கதையை அப்படியே கையாள வேண்டும் என்ற அவசியமில்லை. அதனைச் சுவை பொருந்த மாற்றினால் அதில் பிழையொன்றுமில்லை. இந்நாடகத்தின் கதை—நடை முதலியன சுமாராக இருக்கின்றன.

நச்சுப்பொய்கை—அல்லது நாரியர் வேட்கை.

ஆசிரியர் கோவை. திரு. அ. அய்யாமுத்து அவர்கள். விலை அணு 8. கிடைக்குமிடம் C/o, A. I. S. A. காதி வஸ்திராலயம், திருப்பூர்.


இஃது ஓர் நவீன நாடகம். ஆசிரியர் நாடகக் கொள்கை நன்குக இருக்கின்றது. வேசியர் கொடுமையையும், அவர் வயப்பட்ட தூர்த்தர்கள் இழிந்த செய்கையையும், பெண்வேட்டை யாடுவதையே தொழிலாகக் கொண்ட மைனர்கள் விபரீதப் போக்கையும், மாமாக்கள் அட்டகாசங்களையும், இன்னோரன்னவற்றையும் கண்டிக்கும் முகத்தால் இந்நாடகம் எழுதப்பெற்றிருக்கிறது.

என்று எடுத்துக் காட்டுவதற்கு வழி இந்தத் தேர்தலில் காங்கிரசுக்கு ஓட்டுக் கொடுப்பதே. மற்றக் கட்சிகள், அந்தக் காலத்தில் மகாத்மாவைப் பார்க்க முடியாது என்று இராஜப் பிரதிநிதி அனுப்பிய பதிலை வழவழவென்று ஆட்சேபித்து, அத்துடன் திருப்தியடைந்து விட்டன. தலைவருக்குச் செய்த அவமானம் இந்தியாவுக்குச் செய்த அவமானம் என்ற உணர்ச்சியில்லாமலும் போரில் கலந்து கொள்ளாமலும் நின்ற கட்சிகளை எப்படி ஆதரிக்கலாம்?

11. காங்கிரசை நசுக்கிவிடச் சர்க்கார் கையாண்ட மிருகத்தன்மையை நீங்கள் கண்டிக்கிறீர்கள் என்பதற்கு அறிகுறியாகக் காங்கிரசுக்கு இப்போது ஓட்டுக் கொடுக்கவேண்டும். அடக்கு முறைக்கு உதவியாக நின்ற கட்சிகளை ஆதரிக்க வேண்டாம்.

12. இந்தியாவின் பொருளைக் கொள்ளை கொண்டுபோகும் ஏற்பாட்டிற்கு யாதொரு குறைவும் உண்டாகாதபடி திட்டங்கள் போட்டுக்கொண்டு இந்திய மக்களுக்கு உண்மையில் சுதந்திர உரிமை கொடுக்காதவாறு செய்யப்பட்ட வெள்ளைக் காகிதத் திட்டத்தை ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லவேண்டியது அவசியமாகையால் காங்கிரசுக்கு ஓட்டுச் செய்யவேண்டும்.

மற்றக் கட்சிகள் சேர்ந்திருக்கும் திட்டத்தை ஆட்சேபித்தாலும் ஆட்சேபனை செய்வதில் பயனில்லை, ஒப்புக்கொண்டு தான் தீரவேண்டுமென்று சொல்லி வருகிறார்கள்.



பம்பாயில் தேங்காய்த் திருநாள். யக்ஞோபவீதத்தை மாற்றுமுன் ஜனத்திரள் சமுத்திரத்தில் குளிக்கும் காட்சி. —S.P.B.

ரயில் போக்கு வரவு


மதராஸ்-எழும்பூர்

மெயின் லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
இன்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸ்	மாலை 9 0	காலை 6 40
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 6 55	மாலை 7 25
கூடலூர் பாஸஞ்சர்....	மாலை 4 0	காலை 11 55
திருவனந்தபுரம் பாஸ்டு பாஸஞ்சர்....	மாலை 9 30	காலை 6 5
திருச்சி பார்சல்	மாலை 10 20	காலை 5 35
கார்டு லைன்.		
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர்	காலை 11 15	மாலை 2 55
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	மாலை 7 30	காலை 7 15

மதராஸ்—ஸெண்ட்ரல்

கல்கத்தா மெயில்	மாலை 8 30	காலை 8 35
கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ்	காலை 8 40	மாலை 4 35
பம்பாய் மெயில்	மாலை 8 40	காலை 5 55
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 8 30	மாலை 5 0
பங்களூர் மெயில்	மாலை 9 30	காலை 6 15
,, எக்ஸ்பிரஸ் ...	மாலை 1 0	மாலை 2 10
,, பாஸஞ்சர்	காலை 6 15	மாலை 7 40
,, ,, ...	மாலை 9 40	காலை 5 30
ஜோலார்ப்பேட்டை பாஸஞ்சர்	மாலை 12 45	மாலை 2 0
அரக்கோணம் பாஸஞ்சர்	மாலை 5 30	—
,, ...	6 30	—
மலபார் எக்ஸ்பிரஸ்	8 5	காலை 7 15
ப்ளூமௌண்டன் எக்ஸ்பிரஸ்	9 15	6 35



மகாராஷ்டிர சங்கீத மகாநாடு திரு. ஜயகர் தலைமையில் பிளாவட்ஸ்கி மண்டபத்தில் கூடியது. படத்தில் திரு. ஜயக்கரும், வரவேற்புக் கமிட்டி அங்கத்தினரும் காணப்படுகிறார்கள்.

—S.P.B.



வட்டி விகிதம்.

இம்பீரியல் பாங்கு:—மூன்றரை பெர்சென்டு.

இங்கிலாந்து பாங்கு:—இரண்டு பெர்சென்டு.

இரங்கூன் நடப்பு வட்டி.

பவ-ஷூ ஆடி	0—4—0

இரங்கூன் தவணை வட்டி.

ஆடி 7-உ	0—3—6

சிங்கப்பூர் நடப்பு வட்டி.

பவ-ஷூ ஆனி	0—5—3

சிங்கப்பூர் 3 மாத தவணை வட்டி.

ஆடி 1-உ	0—4—9

கொழும்பு நடப்பு வட்டி.

ஜமீன்	0—6—0

செய்கோன் நடப்பு வட்டி.

பவ-ஷூ சித்திரை	0—5—3
தவணை வட்டி	0—5—3

சென்னை நடப்பு வட்டி

பவ சித்திரை	0—8—0
வைகாசி	0—7—6
ஆனி	0—7—0
ஆடி	0—6—6

உண்டியல் விலை.

டெமாண்ட் விற்பனை	156¼
" 30 நாள் தவணை வாங்குவது	154¼

ரப்பர்.

லண்டன், ஆகஸ்டு 27உ

புகைப்போட்ட ஷீட் ஸ்டாண்டர்டு (ரிப்) ராத்தல் ஒன்று வாங்குபவர் விலை 7 9/16 பென்ஸ்.

புகைப்போட்ட ஷீட் விற்பவர் விலை 7 5/12 பென்ஸ்.

லண்டன் லிவர்பூல் ரப்பர் இருப்பு

லண்டன் இருப்பு 51555 டன். ஆகஸ்டு 11-ந் தேதியோடு முடிந்த வாரத்தில் வெளியான ரப்பர் 700 டன்.

லிவர்பூல் ரப்பர் இருப்பு 55681 டன். ஒரு வாரத்திற்கு முந்தியிருந்த ரப்பர் 55467 டன். சென்ற வாரம் வெளியான ரப்பர் (செலவான ரப்பர்) 389 டன்.

தங்கம், வெள்ளி.

சென்னை, ஆகஸ்டு 28உ

சவரன் (சில்லறை)	21—13—0
" மொத்தமாக	21—12—6
ஆலைத்தங்கம் தோலா 1-க்கு	34—6—0
மூனா தங்கம் "	34—1—3

வெள்ளி

1 ரூபா எடைக்கு	0—10—6
100 ரூபா எடைக்கு	60—4—0

கப்பல்.

லண்டன் கிளாஸ்கோ

கிளான் மாக்பி: செப்டம்பர் 11-ந் தேதி வந்து செப்டம்பர் 13-ந் தேதி புறப்படும்.

கிளான்மக்நில்: செப்டம்பர் 25-ந் தேதி வரும்.

ரங்கூன்

எரின்புரா: செப்டம்பர் 3-ந் தேதி வந்து 7-ந் தேதி புறப்படும்.

மலேயா

ரஜூலா: செப்டம்பர் 8-ந் தேதி வந்து 11-ந் தேதி புறப்படும்.

ரோணு: செப்டம்பர் 22-ந் தேதி வந்து 25-ந் தேதி புறப்படும்.

பாண்டிச்சேரி, சிங்கப்பூர், செய்கோன்

ஜெனரேல் மெட்ஜிங்கர்: செப்டம்பர் 4-ந் தேதியும்,

பெர்னார்டின் டி சேண்ட் பேர்: அக்டோபர் 30-ந் தேதியும் சென்னை வந்து சேரும்.

ஜமீன்தாரின் லஞ்சம்

கத்தோரியா கிராமத்தின் ஜமீன்தார் ஒரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு 25 ரூ. லஞ்சம் கொடுக்க முயன்றதற்காகக் கைதி செய்யப்பட்டிருக்கிறார். ஜமீன்தார் லஞ்சம் கொடுக்க முயன்றது குற்றந்தான். இந்தமாதிரி இருக்கும் மற்ற அதிகாரிகள் எத்தனை பேர்?

Printed and published by Rama Kasinathan for the India Publications Ltd., at the Oolian Power Press, 56, Thambu Chetty Street, Madras.